


கல்கி
KALKI 3-1-82
ரு. 1.20
லக்ஷ்மி எழுதும் தொடர்கதை
சாதாரண மனிதன்
ஜனவரி 17ல் ஆரம்பம்.



புத்தாண்டு தீர்மானங்கள்

[நான்கு துறைகளில் உள்ளவர்களை அணு கிப் புத்தாண்டில் நீங்கள் சிறப்பாகச் செய்யப் போவதென்ன? என்று கேட்ட போது கிடைத்த பதில்கள். சுமார் மூன்று மாதங்கள் சென்ற பின் இந்தத் தீர்மானங் களை இவர்கள் எவ்வளவு தூரம் நிறை வேற்றியுள்ளார்கள் பார்ப்போமே!]



⌘ சோ

பத்திரிகையாளர் திரு சோ

தமிழ்நாட்டின் பல கிராமங்களைச் சுற்றிப் பார்க்கப் போகிறேன். கிராம மக்களின் வாழ்க்கையைப் பற்றி இப்போது நான் அறிந்துள்ளதைவிட நிறைய விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று இந்தப் புத்தாண்டில் தீர்மானம் செய்து கொள்கிறேன்.



⌘ ராஜாசுந்தர்

மாணவர் (தலைவர்) திரு எஸ். ராஜாசுந்தர் (சட்டக் கல்லூரி மாணவர் பேரவை 1981)

எங்களைப் பொறுத்த வரையில் பொதுமக்களின் அனுதாபமே எங்களுக்குக் கிடைப்பதில்லை. இத்தனைக்கும் பஸ்கட்டண உயர்வை எதிர்த்துப் போராடிச் சென்ற ஆண்டில் வெற்றி பெற்றோமே. இது போன்ற போராட்டங்களின் பலன்கள் எல்லாப் பிரிவினருக்கும் தான் கிடைக்கின்றன. டிசம்பரில் என் பதவிக் காலம் முடிந்து போகிறது. ஆனாலும் தொடர்ந்து எம். எல். படிக்கப் போவதால் இந்த மாணவர் - பொதுமக்கள் நல்லுறவு வரும் புத்தாண்டிலாவது சீர்படப் பாடுபடுவது என்று உறுதி எடுத்துக் கொள்கிறேன்.

சட்டம் படித்துவிட்டு ஜூனியர் வாயர்களாகப் பணியேற்கிற அனைவருக்கும் ஒரு கணிசமான ஊதியத்தை ஸ்டைபண்ட் மாதிரி பெற்றுத் தரவேண்டும். உரியவர்களிடம் போராடி எப்பாடுபட்டேனும் இந்த ஆண்டில் இதைச் செய்து முடிப்பது என்றும் உறுதி எடுக்கிறேன்.



⌘ திருமதி ஒய்.ஜி.பி.

கல்வியாளர் திருமதி ஒய்.ஜி. பார்த்தசாரதி (முதல்வர் பத்மா சேஷாத்திரி சீனியர் செகண்டரி பள்ளி, சென்னை-34)

எங்கள்பள்ளியின் வெள்ளி விழா ஆண்டு இந்த ஜனவரியில் தொடங்குகிறது.

எத்தனையோ பெண்கள் படித்துப் பட்டம் பெற்றுக் குடும்பம் ஆன பிறகு தங்கள் திறமைகளை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் ஓய்வு நேரத்தில் திறமையான வல்லுனர்களைக் கொண்டு பயிற்சியளித்துப் பாடம் நடத்துகிற முறைகளைச் சொல்லிக் கொடுத்தால் அவர்களின் வீணாகும் திறமையை நன்கு பயன்படுத்திக் கொள்ள முடியும். அமெரிக்கா சென்றிருந்த போது நான் அறிந்துகொண்ட முறை இது. Para Professionals என்கிற இந்த முறையில் பயிற்சி பெறும் ஆசிரியர்களை வைத்துப் பலவீனமான நிலையில் உள்ள குழந்தைகளிடம் தீவிரக் கவனம் செலுத்தி அவர்களுடைய தரத்தை உயர்த்திவிட முடியும். எல்லாப் பிள்ளைகளின் தரத்தையும் ஒரே நிலையில் கொண்டு வந்து விட்டால், தேர்ச்சி பெறாத மாணவர்கள் என்கிற சொல்லையே இல்லாமல் ஆக்கிவிடவும் முடியும்.

இந்த ஆண்டில் இது எங்கள் முக்கியமான திட்டம். சுற்றுப்புறத் தூய்மை பற்றிய கல்வி, ஆசிரிர்களின் தர மேம்பாட்டுக்கான சிறப்புப் பயிற்சிகள் ஆகியவற்றையும் திட்டமிட்டிருக்கிறோம்.

நாடகத் துறை: திரு கோமல் சுவாமிநாதன்

சென்ற ஆண்டில் 'தண்ணீ'ருக்குள் எதிர் நீச்சல் போட்டேன். திரைப்படமாகவும் அது வெற்றி பெற்றது. இந்த ஆண்டில் 'அனல் காற்று' திரைப்படம் மூலம் டைரக்டராகவும் ஆகிறேன். தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் தமிழகத்தில் வீசப் போகிற இந்த 'அனல் காற்று' ஒரு தீவிரமான சமுதாயப் பிரச்னையை அலசும் என்பதை மட்டும் இப்போது சொல்கிறேன்.

வெறும் விளம்பரங்களில் மட்டுமே இடம் தந்து அட்டூழியங்களுக்குப் பயன்படுத்தப் படுகிற ஆதிவாசிகளைப் பற்றியும், குறிக்கோளே இல்லாமல், படிப்புக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பில்லாமல் திறமையை வீணாக்கிச் சிதற அடிக்கும் இளைஞர்களைப் பற்றியும் — சமுதாயப் பிரக்ஞையுள்ள இரு மேடை நாடகங்களை இந்த ஆண்டில் என் லட்சியப் படைப்புக்களாக உருவாக்கப் போகிறேன்.... நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் களின் பிரச்னையை மையமாய் வைத்தும் ஒரு நாடகம் திட்டமிட்டிருக்கிறேன்.



⌘ கோமல்சுவாமிநாதன்

—யெஸ்பால்

புத்தாண்டில் பெருமாளைப் போற்றுவோம்!



திருவேங்கடத்தானைத் தரிசித்து அருள் பெற்று, புத்தாண்டு பிறக்கும் சமயம் அவ்வனுபவத்தை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளலாம்என்று திருப்பதியில் காலடி வைத்தோம்.

கலியுகத்து கண்கண்ட தெய்வமாய், நின்ற திருக்கோலத்தில் பக்த கோடிகளுக்குக் காட்சி தந்து அருள்பாலிக்கிறார் திருப்பதி எனப்படும் திருவேங்கடத்துப் பெருமான் ஸ்ரீ வேங்கடாசலபதி.

தாமரை பீடத்துடன், கிரீடம் உட்பட பெருமாளின் உயரம் சுமார் பத்து அடி இருக்கும் என்று உத்தேசமாகக் கணக்கிடப் பட்டுள்ளது.

காஞ்சிபுரத்துக் கோயில் யானைக்கு வடகலை நாமம் இடுவதா, தென்கலை நாமம் இடுவதாஎன்று எழுந்த சர்ச்சையைப் போல் இங்கும் வடகலை, தென்கலை பிரிவினரிடையே யான பகை காணப்படுகிறது. பெருமாளுக்குச் சொல்லப்படும்வேதமந்திரங்கள்பற்றியதான கருத்து வேறுபாடு இவ்விரு பிரிவினரும் நீதி மன்றத்தில் வழக்காடப் போகும் அளவுக்கு முற்றியுள்ளது.

'பெருமாளின் திருமண் காப்பு அளவு குறைக்கப்பட்டு அவரது நேத்திர தரிசனம் பக்த கோடிகளுக்குக் கிடைக்கும் வண்ணம் வழி செய்யப்பட்டுள்ளது. சுமார் ஒன்றரை மாதங்களாக இம்முறை பின்பற்றப்பட்டிருக் கிறது' என்று கோயில் சம்பந்தப்பட்ட வைஷ்ணவப் பெரியவர்கள் சிலர் கூறினர்.

''பெருமாளின் திருமண் காப்பு இந்த அளவுதான் இருக்க வேண்டும் என்று தேவஸ்தான எந்த விதிகளிலும் குறிப்பிடப்பட வில்லை... தேவஸ்தான விதிப்படி திருமண் காப்பு இடுவதற்கான பச்சைக் கற்பூரத்தின் அளவுதான் நிர்ணயிக்கப்பட்டுள்ளது'' என்கிறார் தேவஸ்தான நிர்வாக அதிகாரி திரு பிரசாத், ஐ.ஏ.எஸ்.

'ஸ்ரீனிவாசா... என் பெண்ணுக்குக் கல்யாணம் முடித்துவை... உனக்குக்கல்யாண உற்சவம் செய்கிறேன்... கோவிந்தா... என் பிள்ளைக்கு வேலையானதும் உனக்குத் திருக் கல்யாண உற்சவம் செய்கிறேன்!' என்று

- கோயில் வெளி வாசல்
- மலையடிவாரத்தில் பீடத்துடன் சேர்த்து 32 அடி உயரக் கருடன் சிலை





⌘ புஷ்கரணி

வேண்டிக்கொள்ளும் பக்தர்கள் எண்ணிக்கை கணக்கிலடங்காதவை.

ஆனால், காரியம் நிறைவேறினதும் கல்யாண உற்சவம் செய்ய ரூ. 2000 என்று அறிந்து பணமில்லாமல், பிரார்த்தனையை நிறைவேற்றமுடியாதநிராசையுடனும், பயத்துடனும் இருக்கும் பக்தர்களின் எண்ணிக்கையும் நிறைய உண்டு...இத்தகைய பக்தர்களுக்கு ஒரு நல்ல செய்தி... தற்போதைய தேவஸ்தான நிர்வாக அதிகாரி திரு பிரசாத்தின் தூண்டுதலால் ரூ. 500க்கே பெருமாளுக்குக் கல்யாண உற்சவம் செய்ய வழிசெய்யப்பட்டுள்ளது. ரூ. 2000செலுத்தி செய்யப்படும் கல்யாண உற்சவத்தில் செய்பவர் சார்பாக 8 பேர் அனுமதிக்கப்படுவர்.. நிறையப் பிரசாதங்கள் கிடைக்கும். ரூ. 500 செலுத்தி இவ்வைபவம் செய்வோர் சார்பில் ஐந்துபேர் அனுமதிக்கப்படுகின்றனர். ஒரு லட்டும் ஒரு வடையுமே பிரசாதங்கள்... மற்றபடி உற்சவம் ஒரே மாதிரிதான் நடத்தப்படும்.

பலவித சேவைகளுக்கு ஏராளமாகப் பணம் வசூலிக்கப்படுவது குறித்து வினவியபோதும் திரு பிரசாத், காலம் காலமாக இருந்து வரும் சில பழக்கங்களால் இது வசூலிக்கப்படுவது அவசியமாகிறது என்றும், நாளா வட்டத்தில் தான் ஏதேனும் செய்ய முடியும் என்றும் குறிப்பிட்டார்.

பிரத்தியேக தரிசனத்துக்கான ரூ. 25 டிக்கெட் தேசிய வங்கிகளில்விற்கப்படுகிறது. எங்கு வேண்டுமானாலும் வாங்கலாம்.

ரூபாய் ஒன்றரைக் கோடி செலவில் சர்வ தரிசன பக்தர்களுக்காக 'க்யூ காம்ப்ளெக்ஸ்' என்கிற அமைப்பு திருமலையில் தயாராகிக் கொண்டிருக்கிறது. இன்னும் ஓராண்டில் முடிந்துவிடுமாம். சுமார் 12000 பக்தர்கள் ஒரே சமயத்தில் வரிசையில் இருக்க இவ்விடம் போதுமானதாக இருக்குமாம். பக்தர்கள்

⌘ கல்யாணத் திருக்கோலத்தில் பெருமாள், தாயார்



'காட்டேஜ்' எடுக்க அவசியம் இல்லாமல் நேராக இங்கு வந்து விட்டால் குளியல், டிபன், க்ளோஸ்ட் சர்க்யூட் டி.வி. உட்பட சகல வசதியுடனும் நாலு மணி நேரத்துக்குள் பெருமாளைத் தரிசித்து விட முடியுமாம்....

வேறு எந்தக் கோயிலிலும் இல்லாத ஒரு புதிய அம்சம் ஸ்ரீனிவாசப் பெருமாளுக்கு உண்டு. இங்கு மூலவரைத் தவிர நான்கு உற்சவ மூர்த்திகள் உள்ளனர். போக ஸ்ரீனிவாசர், உக்ர ஸ்ரீனிவாசர், கொலு ஸ்ரீனிவாசர், மலையப்ப ஸ்வாமி என்றுஅழைக்கப்படும் நான்கு உற்சவ மூர்த்திகளுக்கும் தனித் தனியான மரியாதைகள் கோயிலில் செய்யப்படுகின்றன.

பெருமாளுக்குச் சுமார் 30 கிலோ எடையளவில் தங்கத் தேர் தயாராகிக் கொண்டிருக்கிறது. ஆண்டுக்கு 80 முதல் 100 கிலோ தங்கம் வரை உண்டியல் மூலமேசம்பாதிக்கும் பெருமாளுக்கு 30 கிலோ சாமான்யம்தான்!

ஆண்டொன்றுக்கு மொத்தமாகத் தேவஸ்தானத்துக்கு ரூ. 25 கோடி வருமானம் வருகிறதாம்.

நாளொன்றுக்கு சுமார் 20,000 முதல் விசேஷ நாட்களில் நாற்பதாயிரம் பேர்வரை வரும் பக்தர்கள், பீடி முதல் தலைமுடி வரை செலுத்தும் காணிக்கைகளுக்கு விதிவிலக்கே கிடையாதாம்!

''பெருமாளுக்கு ஏராளமாக வருமானம் வருகிறதே! இதற்கு வருமான வரி உண்டா? மத்திய அரசுக்கோ, மாநில அரசுக்கோ பங்கு உண்டா? சமூகப் பணிகளுக்கு தேவஸ்தானம்எந்தவிதத்திலேனும்உதவுகிறதா?'' என்று நிர்வாக அதிகாரி பிரசாத்தைக் கேட்ட போது:

''திருமலை திருப்பதி தேவஸ்தானம் ஒரு தனித்தியங்கும் அமைப்பாகும். பதின்மூன்று பேர் கொண்ட குழுவால் கொள்கைகள் வரையறுக்கப்பட்டு, நிர்வாக அதிகாரியுடனான ஐவர் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.

வருமான வரி, மத்திய, மாநில அரசுக்குப் பங்கு ஆகியவை தேவஸ்தானம்தரவேண்டியதில்லை. மாநில இந்து அறநிலையத்தினரின் பொதுநலநிதிக்கு(Common Good fund) மற்ற தேவஸ்தானங்கள் போல் ஐந்து சதவீத வருமானத்தை அளிக்க வேண்டும். பல கோயில்களின் புனரமைப்புக்கும், அபிவிருத்திக்கும் இப்பணம் உதவுகிறது.

''பலவிதப் பொதுப்பணிகளுக்குத்திருமலை திருப்பதி தேவஸ்தானம் உதவுகிறது.

''திருப்பதியிலேயே தேவஸ்தானநிர்வாகத்தில் பல கல்லூரிகள் இயங்குகின்றன. எஸ். வி. யூனிவர்சிடி தனி அமைப்பானாலும் கணிசமான நன்கொடையை இச் சர்வகலாசாலைக்குத் தேவஸ்தானம் வழங்குகிறது. வேத பாடசாலைகள், உயர்நிலைப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள் என்று பல கல்வி நிறுவனங்கள் நடத்துகின்றோம்.

''தேவஸ்தான மேற்பார்வையில் மருத்துவமனைகள் நடத்தப்படுகின்றன. ஒரு செவிட்டுமைப் பள்ளியும் நடத்துகிறோம். இதுபோல் பல சமூக சேவை நிறுவனங்களை அமைத்துள்ளோம்'' என்றார் நிர்வாக அதிகாரி.

லட்டு, வடை, பிரசாதம் பற்றிச் சில தகவல்கள் கிடைத்தன.

சென்ற ஆண்டு லட்டு, வடை விற்பனையில் கோயிலுக்கு 170 லட்சம் ரூபாய் வருமானமாம். பெருமாளுக்கு ஒரு பகுதி லட்டு வடை மட்டுமே ஆராதிக்கப்பட்டு, மொத்த லட்டு வடையுடன் கலந்து விற்கப்படுகிறதாம்.

கொலை, கொள்ளை, வழிப்பறிபோன்றவை 'திருமலையில் அடிக்கடி நிகழ்வதைப் பற்றிக் கேட்டபோது. 'தற்போது மலையடிவாரம் நடுப் பகுதி, மலை மேல் ஆக மூன்று போலீஸ் 'அவுட் போஸ்ட்' உள்ளன. 24 மணி நேரமும் போலீஸ் ரோந்து ஏற்பாடு செய்துள்ளோம். மலை மீது குடிக்கக் கூடாது என்று விதி உள்ளது. 'காட்டேஜில்' தங்க விசாரித்துத்தான் அனுமதிக்கிறோம். கீழிருந்து மேல்வரை நடந்து செல்வோருக்காக வழி முழுக்க 'ஷெல்டர்' கட்ட முடிவு செய்துள்ளோம். ஆவன செய்துகொண்டு தான் உள்ளோம். இத்தனையையும் மீறிச் சில சமயங்களில் ஏதேனும் நடந்துவிடுகிறது. 'க்யூ காம்ப்ளெக்ஸ் தயாரானதும், இதையெல்லாம் தவிர்க்க உதவும்'' என்றார். அடிவாரத்திலிருந்து மலை முழுக்க சினிமா ஷூட்டிங் எடுப்பது தடை செய்யப்பட்டு விட்டதாம்.

கோயிலுக்கு எதிராக மிகப் பெரிய கோபுரம் கட்ட ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. மேலும் சந்திர கிரியிலிருந்து 'வீல் கார்'எனும் அமைப்பில் திருமலைக்குஇன்னும் சில ஆண்டுகளில் செல்ல முடியுமாம்.

திருச்சானூர் தாயார் கோயிலும் தேவஸ்தானத்தைச்சேர்ந்ததுதான். தாயார் உண்டியில் ரூ. 13க்கு மேல் ஒருவரே போட்டால் அப்பணத்தில் மலை மேல் உள்ள பெருமாளுக்குப் பங்கு உண்டாம்.

மொட்டையடிக்கும் கட்டணம் மூலமாக தேவஸ்தானம் ஆண்டுக்கு ரூ. 25 லட்சமும், முடியை ஏலத்தில் விற்பதன் மூலம் ரூ. 22 லட்சமும் சம்பாதிக்கிறது!

'தேவஸ்தான வருமானத்தில் அங்கு வேலை செய்யும் 11000 பேர்களின் குடும்பங்கள் காப்பாற்றப்படுகின்றன' என்றார் நிர்வாக அதிகாரி.


கோஷ்டிச்சண்டையையும், பெருமாள்பெயரைச் சொல்லிக் கொண்டு பணம் பிடுங்கக் காத்திருக்கும் சூழ்நிலையையும் மனித நேயம் மறந்து ஆயிரம் அக்கிரமங்கள் செய்துவிட்டு 'கோவிந்தா கோவிந்தா' என்று வணங்குவோரையும் தாண்டிப்பெருமாளின் சன்னிதியை அடையும் போது....

தேஜஸ் பொங்க நின்ற திருக்கோலத்தில் அருள் மூர்த்தியாய் இருக்கும் ஸ்ரீ கோவிந்தனைக் கண்ணாரத் தரிசித்ததும் எல்லாமே மறந்துபோய், உள்ளம் முழுமையாய் அத் தெய்வீகப் பேரொளியில் ஒரு கணம் ஐக்கியமாகிக் கிடக்கும்போது...

'ஜரகண்டி.... ஜரகண்டி....'மனிதன் நிதர்சனத்துக்கு இழுக்கிறான்.

பி. ரங்கநாயகி

புகைப்படங்கள்: மன்னை மூர்த்தி


கேரள ஆட்சி மாளிகை
ஜனநாயகம்
கேரள (இ) காங்கிரஸ்
இடது ஜனநாயக முன்னணி
கேரள மக்கள்
மந்திரி சபை அமைக்கத் தான் உள்ளே போகிறோம்!
என்னங்க இது?
யாருடாது.. பால் கமிஷன் அறிக்கையை அமுல் பண்ணிட்டுப் போனது?...
காப்பு மாட்டிக்க வாங்கடா!...


போலந்து மக்கள்
போலந்து ஆட்சி
ரஷ்யா

பழிவாங்கும் படலம்

எம். ஜி. ஆருக்கு ஏதாவது ஒரு விதத்தில் தலை குனிவை ஏற்படுத்துவதையே தமது தலையாய கடமையாக கருணாநிதி வைத்துக் கொண்டிருக்கிறார் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் எதிர்க்கட்சியினர் இப்படித்தான் நடந்து கொள்வார்கள் என்பதை எதிர்பார்த்து அதற்கேற்ப சாணக்கியம் காட்டுவதுதான் ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களின் ஆற்றலை உணர்த்தும். அவ்வாறின்றி கலைஞர் விரிக்கும் வலையில் எம். ஜி. ஆர். வலியப்போய் விழுகிறார்; சிக்கிக்கொண்டு தவிக்கிறார்!

பால் கமிஷன் அறிக்கையைக் கருணாநிதி வெளியிட்டதால் ஏற்பட்ட எரிச்சல் முதல்வருக்கும் அவரது சகாக்களுக்கும் இன்னும் அடங்கவில்லை. திருப்பத்தூர் தேர்தலையொட்டி இந்திராவிடம் சரணாகதி படலம் முடிந்து இப்போது கருணாநிதி மீது பழிவாங்கும் படலம் தொடங்கியிருக்கிறது! ஒரு மினி எமர்ஜென்ஸி ஆட்சி நடத்தலாம் என்று முதல்வர் முடிவு கட்டிவிட்டார் போலும்! மிஸா பாணி போலீஸ் அதிக்கிரமங்கள் தொடர்கின்றன!

பால் கமிஷன் அறிக்கையை வெளியிட்டது கருணாநிதியின் முதல் வெற்றி எனில், அவரது வீடு, காரியாலயம் ஆகியவை சோதனைக்கு உள்ளானது இரண்டாவது வெற்றியாகவும் சதாசிவத்தைக் கைது செய்தது மூன்றாவது வெற்றியாகவும் இப்போது கருணாநிதியின் மாப்பிள்ளையையும் அந்தரங்கப் பணியாளரையும் கைது செய்தது நான்காவது வெற்றியாகவும் முடிந்திருக்கிறது. இந்த அமளியினிடையில் கருணாநிதியின் மனைவி, மகன், மகள் ஆகியோரைப் போலீஸ் அவமரியாதையாக நடத்தியது கருணாநிதியின் மகத்தான ஐந்தாவது வெற்றியாகி விட்டது! என்னென்ன நடக்கும் என்று திட்டமிட்டுக் கலைஞர் செயல்பட்டாரோ அப்படியே நடந்திருக்கிறது; அதற்கு மேலும் நடந்திருக்கிறது! கலைஞருக்கு முதல்வர் ஏமாற்றம் அளிக்கவில்லை!

''பால் கமிஷன் அறிக்கையைச் சட்டமன்றத்தில் சமர்ப்பிக்க இருந்தோம். கருணாநிதி முந்திக் கொண்டு விட்டார்'' என்று இலேசாக அந்த விஷயத்தை ஒதுக்கி விட்டு அறிக்கையை யொட்டித் தேவையான மேல் நடவடிக்கைகளைத் துரிதமாக எடுப்பது சாணக்கியமாக இருந்திருக்கும். அதை விட்டு விட்டு அடுத்தடுத்துத் தொடர்ந்த நிகழ்ச்சிகள் ஆட்சிக்கு அவப் பெயரையே தேடித் தந்துள்ளன. ''பால் கமிஷன் சுட்டிக்காட்டும் குற்றவாளிகளைத் தண்டிப்பதில் தீவிரம் காட்டாமல் கமிஷன் அறிக்கையை மூடிமறைக்கப் பார்ப்பானேன்? அதை வெளியிட்ட கருணாநிதி மீது பாய்வானேன்?'' என்ற கேள்விகளுக்கு இன்றுவரை ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களால் பதில் கூற முடியவில்லை.

'அப்படியானால் அரசு அதிகாரிகள் ரகசியக் கோப்புக்களை வெளியிட்டால் ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியுமா? நடவடிக்கை எடுக்க வேண்டாமா?' என்று வினவலாம்.

இதற்குப் பதில், 'ஜனநாயகத்தில் அரசாங்க ரகசியம் என்பதாக எதுவும் கிடையாது, அனைத்து விவரங்களையும் அறிந்துகொள்ளும் உரிமை மக்களுக்கு உண்டு' என்பதுதான். ஆட்சியில் உள்ளவர்கள் மக்களிடமிருந்து மறைக்கும் விஷயங்களைக் கண்டுபிடித்து வெளியிடுவது எதிர்க்கட்சிகளின் தலையாய கடமை.

சில அம்சங்களில் ரகசியம் தேவைதான். உதாரணமாக ராணுவ ரகசியங்களை விரோதி நாட்டார் அறிந்து கொள்ளாமல் காக்க வேண்டியது அவசியம். இதைக்கூட அமெரிக்கா போன்ற பூரண சுதந்திரம் உள்ள நாடுகளில் ரகசியமாகக் காக்க முடிவதில்லை. பத்திரிகைகள் எப்படியோ ராணுவம் பற்றிய சகல விவரங்களையும் புள்ளி விவரங்களுடன் பெற்றுப் பிரசுரித்து விடுகின்றன! பட்ஜெட் ரகசியங்களைக் காக்க வேண்டும் என்ற கொள்கைகூட தற்போது மாற்றம் கண்டு வருகிறது. எக்ஸைஸ் போன்ற சில இனங்களில் கொள்ளை லாபம் அடிக்க வசதி உண்டாதலால் அது பற்றி மட்டும் ரகசியம் காத்து மற்ற கட்டண உயர்வுகள், நேர்முக வரிகள், செலவினங்கள் பற்றியெல்லாம் பகிரங்கமாய் முன் கூட்டியே மக்கள் மன்றத்தில் அலசலாம் என்ற எண்ணம் பரவி வருகிறது. இத்தகைய ஜனநாயக சிந்தனை வளர்ச்

1982 ஜனவரி 3
துன்மதி மார்கழி 19
மலர்: 40 இதழ்: 23



கல்கி
தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

சியை அறியாதவராக எம். ஜி. ஆர். நடந்து கொள்வது பரிதாபம். அரசு அதிகாரிகளின் பூரண நம்பிக்கையைப் பெறும் விதமாய் ஆட்சி நடத்தத் தெரியாததுடன் அவர்களுக்கு வாய்ப்பூட்டும் போட்டிருக்கிறார். இது முற்றிலும் ஜனநாயக விரோத செயல். ஆட்சியில் நடப்பன குறித்துப் பத்திரிகைகள் தகவல் பெற முடியவில்லை எனில் அது பத்திரிகை சுதந்திரமும் மக்களுடைய தகவல் பெறுகிற அடிப்படை உரிமையும் மறுக்கப்படுவதாகவே ஆகும்.

ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் மக்களிடமிருந்து எதையும் மறைக்க முயலும்போது அருண்ஷோரி போன்ற பத்திரிகையாளர்களும் கருணாநிதி போன்ற எதிர்க்கட்சித் தலைவர்களும்தாம் மக்களுக்கு உண்மைகளை எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கும். அதற்கென சில விரும்பத்தகாத செயல்களில் அவர்கள் இறங்க வேண்டிய நிர்ப்பந்தங்களும் ஏற்படும். இந்த நிர்ப்பந்தங்களுக்கே இடமில்லாத வகையில் ஒளிவு மறைவு ஏதுமின்றி ஆட்சி நடத்துவதுதான் நல்லது. ஆனால் திறமையற்ற ஆட்சியாளர்கள் தங்கள் குறைபாடுகளையும் தவறுகளையும் மறைக்கவும் ஒளிக்கவும் நேர்வது இயல்புதான்.

எம்.ஜி.ஆர்., தமக்கு ஏற்பட்டுள்ள தலைகுனிவுக்குப் பரிகாரம் கருணாநிதியைப் பழிவாங்குவதல்ல; பால்கமிஷன் அறிக்கையை யொட்டி துரித நடவடிக்கை எடுப்பதும் சம்பந்தப்பட்ட அமைச்சரின் ராஜிநாமாவைக் கோருவதும்தான் என்பதை எவ்வளவு சீக்கிரம் உணர்கிறாரோ அவ்வளவுக்கு அவருக்கு நல்லது.

இசை விழாத் துக்கடா



ஸ்ரீமதி ருக்மிணிதேவியைத் தாக்கி கப்புடு எழுதியதுமே இசை விழா களை கட்டத் தொடங்கி விட்டது. பரதநாட்டியத்தில் சிருங்கார ரசம்தான் முக்கியமாம். ருக்மிணி தேவியோ பக்தி ரசத்துக்குத்தான் முக்கியத்துவம் தருகிறாராம்! — கப்புடுவின் குற்றச்சாட்டு.

சிருங்கார ரசத்தின் எதிரியல்ல ருக்மிணி தேவி. அந்த ரசமும் பக்தியின் அடிப்படையில் அமைய வேண்டும் என்ற நமது பாரம்பரியப் பண்பாட்டைத்தான் அவர் தமது கலாக்ஷேத்திர நிகழ்ச்சிகளில் கடைப்பிடித்து வருகிறார். சிருங்காரம் மட்டுமென்ன, நவரசங்களுமே பரதத்தில் பக்தியின் அடிப்படையில்தான் அமைதல்வேண்டும். ''சிருங்கார ரசம்தான் தேவை என்றால் அதற்குப் பரத நாட்டியம் எதற்கு? பெல்லி டான்ஸ் பார்க்கப் போகலாமே'' என்று கோபத்துடன் ஒரு நாட்டிய மணி கூறினார்!

● ருக்மிணி தேவி கதகளியைப் புகுத்துகிறார் என்பது கப்புடுவின் இன்னொரு குற்றச்சாட்டு. கதகளியை அவர் கலாக்ஷேத்திரத்தின் பரத நாட்டிய நிகழ்ச்சிகளில் நுழைப்பதில்லை: அதன் தூய்மையைக் கெடுப்பதுமில்லை. ஆண்டாள், குறவஞ்சி போன்ற நாட்



✕ அ. ச. ஞானசம்பந்தம்



✕ சி. வி. நரசிம்மன்



✕ பண்ருட்டி ராமச்சந்திரன்

டிய நாடகங்களிலும் சேர்க்கவில்லை. தமது சொந்த சிருஷ்டியான சில நாட்டிய நாடகங்களில் உசிதமான இடங்களில் கதகளியைக் கையாள்கிறார். இதில் என்ன தவறு? ருக்மிணி தேவியின் இந்த நாட்டிய நாடகங்களை ஒரு புதிய கலைப் பாணி (art form) எனலாம். அதில் பரதநாட்டியத்துடன் கதகளியின் அழகான சேர்க்கை (Synthesis) வரவேற்கப்படக் கூடியதாகவே இருக்கிறது.

● ஆனந்த விகடனில் டி. எம். டி.க்கும் டி. என். கே.க்கும் லடாய் என்ற கருத்தில் எழுதி விட்டதன் காரணமோ என்னமோ டி. என். கிருஷ்ணன், திரும்பத் திரும்ப "நானும் டி.எம். தியாகராஜனும் நண்பர்களே நண்பர்கள் அன்றி வேறில்லை நேற்று, இன்று, நாளை என்றும் நண்பர்களே!" என்று இதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கஷ்டப்படுத்தினார் மியூஸிக் அகாடமி ஆரம்ப விழாவில். டி. கே. பி.யும் எப்படியோ தட்டுத் தடுமாறி டி. எம். டி. இவ்வாண்டின் தலைவராக இருப்பதற்குத் தமது ஆமோதிப்பை வழங்கி விட்டார். தியாகராஜனே தமது தலைமை உரையைப் படிப்பதற்கே வாய் குழறி ஏகமாகச் சங்கடப்பட்டார். பாடுவதற்கு முன் பல முறை சாதகம் பண்ணுகிற வித்வான்கள் பேச வரும் போது சிறிது சாதகம் பண்ணிக் கொள்ளக் கூடாதோ? ஆரம்பத்தில் குருகுலவாசம் செய்து அண்மையில் இசைக் கல்லூரி முதல்வராக இருந்து ஓய்வு பெற்றுள்ள டி. எம். டி. தமது உரையில் இரண்டு வழிகளிலுமே சிறப்புக்கள் உண்டு என்று சொல்லிச் சாமர்த்தியமாய்த் தப்பித்துக் கொண்டார்.

● இசைவிழாவின் சிறந்த பேச்சு எது என்றால் கிருஷ்ணகான சபையில் அ.ச. ஞானசம்பந்தம் நடராஜர் தத்துவம் பற்றி ஆற்றிய சொற்பொழிவுதான் எனலாம். ஒரு நடன ஆசிரியர், "அவரை மறுபடி சந்திக்க நேர்ந்தால் அவர் காலில் என் சிரம் பட வணங்க வேண்டும்" என்றார்.

● பரோடா பல்கலைக் கழகத்தின் நுண்கலைக் கல்லூரி முதல்வர் சந்திரசேகர், அங்குள்ள தென்னிந்தியர்கள் மட்டுமின்றி வட நாட்டவரும் மிகுந்த ஆர்வத்துடன் பரத நாட்டியக் கலையைக் கற்க முன்வருவதாகக் கூறியது கேட்கப் பெருமையாக இருந்தது. அவர்களுக்காகச் சில ஹிந்திப் பாடல்களையும் ஹிந்துஸ்தானி ராகங்களில் அமைந்த சில சம்ஸ்கிருதப் பாடல்களையும் நடனத்துக்குச் சேர்த்துக்கொள்கிறாராம், சந்திரசேகர்.

● தமிழிசையில், நமது இன்றைய தென்னாட்டுச் சங்கீதம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த தமிழ்நாட்டு இசையின் தொடர்ச்சியே என்று சான்றுகளோடு அழுத்தம்திருத்தமாய்ப் பேசினார் எஸ்.ராமநாதன். "வேற்று மொழியினரின் ஆளுகையில் தமிழிசை நலிந்தது, கடந்த காலத்தில். இன்றும் தமிழிசை இயக்கத்துக்கு அவசியம் இருக்கிறது" என்று இலேசாக அரசியலைப் புகுத்தினார் அமைச்சர் எஸ். ராமச்சந்திரன்!

அட்டையில்:
நாவலாசிரியை லக்ஷ்மி
வண்ணப்படம் : உத்ரா

"வேலை செய்யும்போது இசை ஒலித்தால் வேலைத் திறன் பெருகுவதாக இன்று ஜப்பானில் ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்திருக்கிறார்கள். தமிழனோ எத்தனையோ காலம் முன்பே ஏற்றப் பாட்டும் ஓடப் பாட்டும் இயற்றி விட்டான்" என்று பெருமைப்பட்டார். உடல் நலிவுற்றிருந்தும் பொருட்படுத்தாமல் வந்திருந்து அமர்ந்தபடியே பேசிய எஸ். மகராஜன் குரலிலோ உணர்ச்சியிலோ துளி நலிவு இல்லை!

● அகாடமியில் திரு வி. வி. நரசிம்மன் தொடக்க உரையில், "பாடல்களை அர்த்தம் உணர்ந்து பாடவேண்டும், பாவத்துடன் பாடவேண்டும். பக்தியுடன் பாட வேண்டும்" என்றது அரைத்த மாவாகச் சிலருக்குத் தோன்றலாம். ஆனால் திரும்பத் திரும்ப நினைவூட்டிக் கொள்ள ரொம்ப அவசியம் இருக்கிறது. அர்த்தம் தெரிந்து பாடி விடலாம்; பாவபூர்வமாகக் கூடப் பாடி விடலாம். ஆனால் பக்திக்கு எங்கே போவது? சொல்லிக் கொடுத்து வருவதா அது? உள்ளத்தில் ஊற்றெடுக்க வேண்டுமே! பக்தி பாவத்தைப்பிரதிபலித்து, கேட்பவர் உள்ளம் உருகச் செய்கிற மிக சொற்பம் பேர்களுள் கே. வி. நாராயணசுவாமி ஒருவர். அகாடமியில் அவர் கச்சேரியின் நிகழ்ச்சி நிரல் ஆறு வகை பக்திகளைப் பிரதிபலித்தது: பிறந்த மண்ணிடம் பக்தி; வாழ்வளிக்கும் தமிழகத்திடம் பக்தி; தேச பக்தி; குரு பக்தி; ஞானிகளிடம் பக்தி; கடவுள் பக்தி!


— குட்டி கிருஷ்ணன்



மூப்பனார்



எம்.பி. சுப்பிரமணியம்



தங்கபாலு

இ.காங்கிரஸில் என்ன நடக்கிறது?

— அலசல் —



காளிமுத்து

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸில் எம்.பி. சுப்பிரமணியம் கோஷ்டி — மூப்பனார் கோஷ்டி தவிர இன்னும் இரண்டு கோஷ்டிகள் உள்ளன என்பது நாடறிந்த விஷயம். திருப்பத்தூர் தேர்தலுக்குப் பின் எம். பி. எஸ். கை ஓங்கியது. இதை ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டு மூப்பனார் கோஷ்டியைச் சேர்ந்த வர்களைப் பழிவாங்கத் திட்டமிட்டாராம் எம். பி. எஸ். தமிழ் நாடு இந்திரா காங்கிரஸில் உள்ள ஆறு செயலாளர்களில் என். எஸ். வி. சித்தன், அப்துல்காதர் இருவரும் மூப்பனார் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. ''சரியான படி கட்சியின் வேலைகளில் பங்கு கொள்ளவில்லை'' என்றும், பழநியில் மாநாடு நடந்தபோது கலந்து கொள்ளாமல் இந்த இருவரும் திண்டுக்கல்லில் ஒரு பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியதாகவும், ஆதலால் ஏன் பதவியை விட்டு விலக்கக் கூடாது என்று கேட்டும் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. உடனே இருவரும் ராஜிநாமாக் கடிதங்களைக் கொடுத்துவிட்டார்கள். ஆனால் அவை இன்னும் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. இது பற்றி மூத்த காங்கிரஸ் தலைவர் ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்ததில் ''ராஜிநாமாக் கொடுத்த இரண்டு செயலாளர்களைத் தவிர மற்ற செயலாளர்கள் எந்த விதத்தில் கட்சிக்குப்பாடுபட்டிருக்கிறார்கள்? எத்தனை பொதுக்கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள்! மாலை வேளைகளில் இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று எனக்குத் தெரியும்'' என்று கூறினார்.

இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாடு காங்கிரஸின் செயற்குழு சென்னையில் கூடியது. செயற்குழு நடப்பதற்கு முன்பு எம். பி. எஸ்ஸின் சொந்த ஊரான சேலத்தில் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி, பஞ்சாயத்துத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் உறவு வைத்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானம் போட்டது. அந்தத் தீர்மானத்தையே செயற்குழுவில் கொண்டுவர வேண்டும் என்று திட்டமிடப்பட்டதாம். மேலும் திருப்பத்தூரில் காங்கிரஸுக்காக ஒத்துழைத்த அ.தி.மு.க. விற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் கொண்டுவர இருந்தார்களாம். ஆனால், இவையெல்லாம் வராமல் இருக்கும் ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டது, மந்திரி காளிமுத்துவின் மதுரைப் பேச்சு. காளிமுத்துவின் தாக்குதலுக்கு இளைஞர் காங்கிரஸ் தலைவர் தங்கபாலுவிடமிருந்து பதில் வந்தது. இந்தக் கட்டுரை எழுதும்போது கூட இரண்டு பேருக்கும் அறிக்கை மோதல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. காளிமுத்து பேச்சுக்களுக்குப் பதில் சொல்ல இ. காங்கிரஸ் தலைவர் வேறு யாரும் முன் வராதது ஒரு புறமிருக்க, தங்கபாலு பதில் கூறுவதே எம். பி. எஸ்.ஸுக்கு ஒரு வெறுப்பை ஏற்படுத்தியிருக்கிறதாம். காளிமுத்துவோ எதையோ பேசுவதும், பிறகு அது தமது சொந்தக் கருத்து என்று கூறுவதும் வழக்கமாகக் கொண்டிருக்கிறார். அவருக்குச் சாவி கொடுத்துப் பேசச் சொல்வதும், பிறகு சொந்தக் கருத்து என்று கூறச் சொல்வதும் எல்லாமே எம்.ஜி. ஆர்.தான் என்று கருதுவோரும் இ. காங்கிரஸில் பலர் உண்டு.

பஞ்சாயத்துத் தேர்தலில் எப்படியாவது காங்கிரஸுடன் கூட்டு வைத்துக் கொள்ள எம். ஜி. ஆர். எடுத்த முயற்சி பயனளிக்காமல் போய்விட்டதாகவும், பஞ்சாயத்துத் தேர்தலில் காங்கிரஸ் தனித்துத்தான் நிற்க வேண்டும் எனப் பிரதமரே தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரிடம் தெளிவாக்கி விட்டதாகவும், அதுதான் காளிமுத்துவின் பேச்சுக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

செயற்குழுவில் எம். பி. எஸ். நினைத்த இரண்டு தீர்மானங்களையும் கொண்டு வர முடியாமல் போய்விடவே, ''நான் அ.தி.மு. க. பக்கம் சாய்கிறவன் என்று சொல்கிறார்கள். காங்கிரஸ் தனித்து இயங்கவேண்டும் என்று விரும்புகிறவர்களில் நானும் ஒருவன்'' என்று பேசினார் எம்.பி.எஸ். இந்தச் செயற்குழுக் கூட்டத்துக்கு மூப்பனார் ஆதரவாளர்கள்என்று சொல்லப்படும் எல்லோரும் வந்திருந்தார்கள். அன்பரசு, தங்கபாலு கே. டி. கோசல்ராம் போன்றவர்கள் பஞ்சாயத்துத் தேர்தல்களில் தோற்றுப் போவதைப் பற்றிக் கவலைப்படாமல் காங்கிரஸ்

தனித்தேதான் போட்டியிட வேண்டும் என்று விளக்கமாகப் பேசினார்களாம்.

கடைசியில் எல்லோரும் ஒரு மனதாகத் தனித்துப் போட்டியிடுவது என்ற கருத்தை ஏற்றுக்கொண்டு விட்டார்கள். முதல் ரவுண்டான திருப்பத்தூர் தேர்தலில் வெற்றிபெற்ற எம். பி. எஸ்.ஸுக்கு இரண்டாவது ரவுண்டு தோல்விதான்.


இதற்கிடையில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியை எந்தக் கோஷ்டியிலும் இல்லாத ஒருவருக்குக் கொடுக்க வேண்டும் என்று இந்திரா முடிவு செய்து விட்டாராம். பல பெயர்கள் அடிபடுகின்றன. ஆனால் அப்படி ஒருவரைத் தேர்வு செய்தால் உடனே அவரைச் சுற்றிப் புதிதாக ஐந்தாவது கோஷ்டி தான் உருவாகுமே தவிர ஒற்றுமை உண்டாகாது என்கிறார் பழுத்த அரசியல்வாதி ஒருவர். அடிமட்டத்திலிருந்து கட்சித் தேர்தலை நடத்தித் தலைவர் தேர்தலையும் நடத்தினால் ஒழிய இ. காங்கிரஸ் இங்கு பலம்பெற வாய்ப்பில்லை என்கிறார்.

பிரதமர் இரண்டு கழகங்களைப் பற்றிக் கூறும்போது Keep them at equal distance என்கிறாராம்.

''ஆளும் கட்சியிடம் கூட்டுச் சேருவது என்பது எதிர்க் கட்சிக்கு ஒத்து வராத விஷயம். அப்படிச் சேர்ந்தால் கட்சி வளராது. எதிர்க் கட்சிகளுக்குள் ஒரு கூட்டு உருவாக்க வேண்டும். முடியவில்லை என்றால், தனித்துத் தான் நிற்க வேண்டும்'' என்று அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறார் இளைஞர் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு.

தமிழ் நாடு காங்கிரஸின் பலம், பலவீனம் இரண்டுமே பஞ்சாயத்துத் தேர்தலின்போது தெரிந்துவிடும் — அதாவது பஞ்சாயத்துத் தேர்தல்கள் திட்டமிட்டபடி நடந்தால்!

—பிரியன்



அரசியல் பற்றி எவ்வளவு தெரியும்?

1: மிக அதிகமான எண்ணிக்கையில் அரசியல் கட்சிகளை அங்கீகரித்துள்ள நாடு எது?
(அ) பிரிட்டன் (ஆ) இத்தாலி (இ) இந்தியா (ஈ) சீனக் குடியரசு.

2. ராஜ்ய சபையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை?
(அ) 244 (ஆ) 215 (இ) 250 (ஈ) 260

3. பாரதத்தின் ராஷ்டிரபதி, உபராஷ்டிரபதி இரு பதவிகளும் காலியாக இருக்க நேரின் அந்தப் பொறுப்பை ஏற்க வேண்டியது...
(அ) பிரதமர் (ஆ) நாடாளு மன்றம் (இ) சுப்ரீம் கோர்ட்டின் தலைமை நீதிபதி (ஈ) சபாநாயகர்.

4. பாராளு மன்றம் என்பதை விட நாடாளு மன்றம் என்று வழங்குவது தான் அதிகப் பொருத்தம் என்று சொல்லி ஒரு புதிய சொல்லை அறிமுகப்படுத்தியவர்:
(அ) அறிஞர் அண்ணா (ஆ) ராஜாஜி (இ) பக்தவத்சலம் (ஈ) இரா. செழியன்

5. 39 ஆகத் தற்போது குறைந்துள்ள தமிழக நாடாளு மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை இதற்கு முன் எவ்வளவாக இருந்தது?
(அ) 43 (ஆ) 35 (இ) 37 (ஈ) 41.

6. அந்தமான் நிக்கோபார் தீவுகளின் பிரதான மொழி எது?
(அ) ஹிந்தி (ஆ) மலையாளம் (இ) வங்காளி (ஈ) தமிழ்.

7. ஜோஸப் ஜுகாஷ்வெல்லி என்பது யாருடைய பெயர்?
(அ) லெனின் (ஆ) ஸ்டாலின் (இ) ட்ராட்ஸ்கி (ஈ) கார்ல் மார்க்ஸ்

8. நமது நாடாளு மன்றத்தின் இரு சபைகளும் ஒன்றாகக் கூடி விவாதித்து ஒரு சட்டத்தை நிறைவேற்றியது எப்போது?
(அ) 1963 (ஆ) 1952 (இ) 1965 (ஈ) 1961.

9. நமது அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது எப்போது?
(அ) ஆகஸ்ட் 15, 1947 (ஆ) ஜனவரி 26, 1950 (இ) செப்டம்பர் 15, 1952 (ஈ) அக்டோபர் 2, 1948.

10. அரசியலமைப்புச் சட்டத்துக்கு முதன் முதலில் திருத்தம் செய்யப்பட்டது எப்போது?
(அ) 1960 (ஆ) 1957 (இ) 1963 (ஈ) 1951.

(விடை: 16ம் பக்கம்

மாமா வீட்டில் ஒரு மாவரைக்கும் மெஷின்

சாருகேசி

ஊரில் ரயிலை விட்டு இறங்கி, மாட்டு வண்டியில் பிரயாணம் செய்து, வீட்டை அடைந்ததுமே மாமா சம்பூர்ணம், ''வாடா, வா!'' என்று எது வாய், எது பல் என்று தெரியாமல் சந்தோஷமாக வரவேற்றார்.

''ஒரு கடுதாசி போட்டிருக்கக் கூடாது, ஸ்டேஷனுக்கு வந்திருப்பேனே என்னோட 'மொபெட்'டில்!'' என்றார்.

''எதுக்கு மாமா உங்களுக்கு வீண் சிரமம்'' என்றேன். சிரமம் மாமாவுக்கு அல்ல. மோபெட்டுக்குத்தான். மாமா ஏறி உட்கார்ந்த உடனே சக்கரங்களின் 'ரிம்' தரையை உரசும்....

''மாமி எங்கே?''

''உள்ளேதான் இருப்பாள். புதிசாக மாவரைக்கிற மெஷின் வாங்கியிருக்கிறோமே. அதை வருகிறவர், போகிறவர்களிடம் எல்லாம் காட்டிப் பெருமைப்பட்டுக் கொண்டிருப்பாள்.''

கல்லூரி விஞ்ஞான எக்ஸிபிஷனில் தனக்கும் புரியாமல், சுற்றி நிற்பவர்களுக்கும் புரியாமல், விஞ்ஞான சாதனங்களைப் பற்றி எடுத்துக் கூறும் கூச்சமுள்ள மாணவன் (அல்லது மாணவி) மாதிரி மாமி நின்று கொண்டு, ஒரு பாட்டி, ஒரு 'மீண்டும் கோகிலா' மடிசார், ஓர் ஆறு கெஜம் (வாவ்!) ஒரு பாவாடை – தாவணி என்று வகைக்கு ஒன்றாக நின்ற பார்வையாளர்களிடம் அரிசியையும் உளுந்தையும் போடாமலே அது செயல்படும் முறையை விவரித்துக் கொண்டிருந்தாள்.

''மாமி!''

மாமி திரும்பினாள். பாட்டி திரும்பினாள். ஆறு கெஜம் (ஒரு வெட்கம் கலந்த புன்னகையுடன்), பாவாடை-தாவணி எல்லாம் திரும்பின.

''வாடா வா, வர வழி தெரிந்ததா?'' என்று மாமி கேட்டபோது.

''ஏதோ எஞ்சினுக்கும், எஞ்சின் டிரைவருக்கும் இந்தக் கொட்டாம்பட்டி ஸ்டேஷன் வரை தடுக்கி விழாமல் வர வழி தெரிந்தது!'' என்று பதிலளித்து விட்டு, ''இது என்ன மாமி டெமான்ஸ்ட்ரேஷன்? புதிசாக வாங்கினாயா?'' என்று கேட்டு வைத்தேன். தெரியாத்தனமாய். மாவு மெஷின் புராணத்தை முடித்து ஓய மாட்டாளா என்று ஆகிவிட்டது.

''நாளை உனக்கு டிபனுக்குஇட்லி பண்ணி விடுகிறேன். இதில்தான் அரைக்கப் போகிறேன்!'' என்று சகலரும் அறியப்பிரகடனம் பண்ணினாள் மாமி.

''நாங்களும் பார்க்க வருகிறோம் மாமி!'' என்றது மாவு மெஷின் ரசிகர் மன்றம்.

''இப்போது ஊறப்போட்டால்தான் மத்தியானம் அரிசியையும் உளுந்தையும் அரைக்கலாம்'' என்று அறிவித்தாள் மாமி.

வளைந்து நெளிந்து எல்லோரும் போக, ஆறு கெஜம் மட்டும் சற்று ஆற அமர என்னைப் பார்த்துவிட்டே போயிற்று.

பிற்பகல், மாமியைச் சுற்றிக் காலையில் பார்த்த கலர்களுடன், அவர்களுடைய உற்றார், உறவினர் எல்லோருமாக, சுமார் பதினைந்து பேர் அரவை மெஷினைச் சுற்றி, சிவராத்திரியன்று லிங்கத்தைத் தரிசிக்கிற பக்தர்கள் மாதிரி ஒரு மினி ஆஸ்திக சமாஜ அட்மாஸ்ஃபியரை அங்கே உண்டாக்கினர். விபூதி, குங்குமப் பிரசாதம் வழங்கியிருந்தால்கூட வாங்கிக் கொண்டிருப்பார்கள், பய பக்தியோடு.

மாமி அரிசியைப் போட்டாள்.

ஸ்விட்சைப் போட்டாள்.

உள்ளே இருந்த குழவி ஓசையோடு சுழலத் தொடங்கியதும், பக்திப் பரவசம் முகத்தில்



பரவ, ஆச்சரியம் இலேசாக் கணக்காய்த் தேங்கியிருக்க, மாமியின் நண்பிகள் பேச்சிழந்து நின்றனர். இட்டிலி மாவும் நன்றாகப் பதத்தில் அரைபட்டு வந்தது.

திடீரென்று—

மெஷினுக்கு என்னவோ வெறி வந்த மாதிரி அரை பட்ட அத்தனை மாவும் 'சொத்' 'சொத்'தென்றுமெஷினிலிருந்து தெறித்துச் சுவரில் நாலா பக்கமும் போய் அப்பிக் கொண்டது. வீரபத்திரர் சிலை மீது வெண்ணெய் வீசுகிற மாதிரி. தாழ்வாகப் பறந்த மாவு சுற்றியிருந்த பார்வையாளர்களின் மேலும் ஆங்கில — இந்திசினிமா காமெடிக் காட்சிகளில் வருகிற மாதிரி, வாரி வாரி இறைத்தது.

குய்யோ முறையோ என்று பாவாடை—தாவணி முதல் பாட்டியம்மாள் வரை அறையிலிருந்து அலறிப் புடைத்துக் கொண்டு ஓட, மாமி, ''டேய் சாமா, ஏண்டா பார்த்துக் கொண்டு நிக்கறே. நிறுத்துடா மெஷினை... எப்படியாவது நிறுத்துடா!'' என்று கூச்சலிட்டாள்.

மெஷினை நிறுத்திவிட்டு, ''இதில் ஏதோ மிஸ்டேக் இருக்கிறது மாமி, சரி பார்க்காமல் இப்படி எல்லோரையும் கூப்பிட்டுச் சிரிக்க அடிக்கணுமா?'' என்றேன்.

''இப்போ என்ன செய்கிறது'' என்றாள் மாமி.

''தோசை திருப்பி இருந்தால் கொடுங்கள் இப்படி! ஒரு பாத்திரமும் கொண்டு வாருங்கள்!'' என்றேன்.

எல்லோரும் அலறியடித்துக் கொண்டு ஓடியும், ஓடாமல் தைரியமாக அங்கேயே நின்று கொண்டிருந்த மிஸ் ஆறு கெஜத்திடம் மாமி, ''ஜலஜா! சமையலறையிலிருந்து தோசைத் திருப்பியைக்கொண்டு வாயேன்!'' என்றாள்.



ஜலஜா ஒரு பாத்திரத்தோடு அதைக் கொடுத்தவுடன், மாமி என்னையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்கையில் சுவரின் ஒவ்வொரு பக்கமும் நின்று, புது சினிமாவுக்குப் போஸ்டர் ஒட்டுகிறவன்பசையை வழித்து எடுக்கிற மாதிரி அரைத்த இட்டிலி மாவைச் சுவரிலிருந்து வழித்து வழித்து எடுத்துப் பாத்திரத்தில் போட்டுக் கொண்டேன்.

''இப்படியா வாரி இறைக்கும்! எப்படிடா இனமும்மாவை வழித்துஎடுக்கிறது?''

''பாஸ்கெட் பால் கூடை மாதிரி சுவரில் நாலாபுறமும் பாத்திரங்களைக் கட்டித் தொங்கவிடலாம்!'' என்றார் மாமா உள்ளே வந்து. ''அரைபட்ட மாவு பொத் பொத் தென்று பாத்திரங்களில் தானாக விழும்.''

மாமிக்கு வந்த ஆத்திரத்தில் எங்கேஅவர் முகத்திலும் மெஷின் வாரிஇறைத்த மாதிரி மாவை வீசுவாளோ என்று நினைத்தேன்.

''நீயே மெஷின் எப்படி வேலை செய்கிறது என்று பார்க்காமல் ஏன் ஊரில் உள்ளவர்களை வேடிக்கைபார்க்கக் கூப்பிடவேண்டும்?'' என்றார் மாமா.

ஜலஜா சிரிப்பை அடக்கிக் கொண்டு புறப்பட்டாள்.

''மோபெட் வாங்கின புதிசில் நீங்கள் அடிக்காத கொட்டமா? பெட்ரோலே ஒரு சொட்டுக்கூடப் போடாமல், வண்டி ஓடவில்லை, ஓடவில்லை என்று ஊரெல்லாம் ஓடினீர்களே அதை இழுத்துக் கொண்டு?'' என்று மாமி திருப்பிக் கொடுத்து விட்டு ''கொல்லையிலிருந்து ஒரு வாழை இலை பறித்துக்கொண்டு வாடா சாமா, சாப்பாடு தயார்!'' என்று துக்கத்தை மறைத்துக் கொண்டாள்.

''**ஊ**ரைச் சுற்றிப் பார்க்கப் போகவில்லையா?'' என்று மாமாவின் குரல் வந்தது. தாழ்வாரத்தில் தலைகீழாக நின்று சிரஸாஸனம் பண்ணிக் கொண்டிருந்தார்.

''என்ன மாமா இது, குரல் ஏதோ தரையிலிருந்து கேட்கிறது?''

''பின்னே சிரசாஸனம் செய்யும்போது மட்டும் காலாலே பேசமுடியுமாடா சாமா?''

''ஊரைச் சுற்றிப் பார்க்கப் போகிறதுக்கு முன்னால் டவுனுக்குப் போய் மாவு மெஷினை விற்ற கடைக்குப்போய், அவர்கள் மெக்கானிக் யாரையாவது கூட்டிக் கொண்டு வா!'' என்றாள் மாமி.

''டவுனுக்கா? மாட்டு வண்டியிலோ, பஸ்ஸிலோ அல்லவா போக வேண்டும்!''

''ஏன், என்னுடைய மோபெட் இருக்கிறதே. எடுத்துக்கொண்டு போ!'' என்றார் மாமா. (மோபெட்! பெரிய எஸ்.எல்.வி.-3!)

''வேண்டாம் மாமா, நான் பஸ்ஸிலேயே போய் ஆளைக்கூட்டிக் கொண்டு வருகிறேன்'' என்று புறப்பட்டுப் போய், சிவன் கோவிலுக்கு எதிரே பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டேன்.



டவுனில் கடையைக் கண்டு பிடித்து, மெக்கானிக்கைக் கையோடு கூட்டிக் கொண்டு வந்த என் சுறுசுறுப்பை மாமி பாராட்டினாள்.

மெக்கானிக் வந்து பார்த்துவிட்டு, "அட, இது என்ன சார்! சிம்பிள் சார்! இந்த ஹாண்டில் இருக்கு பாருங்க, ஹாண்டில், அது லூஸாயிருக்கு சார்! டைட் பண்ணிட்டா இந்தமாதிரி வாரி அடிக்காது சார்!" என்று வியாக்யானம் செய்து, மாவைத் தள்ளிக் கொடுக்கும் ஹாண்டிலை டைட் செய்தான். மாவை மட்டுமல்ல, மாமியின் மானத்தையும் காப்பாற்றினான்.

பரீட்சார்த்தமாகக் கொஞ்சம் அரிசியை மாமி அதில் போட்டு ஸ்விட்சைப் போட்டவுடன் மரியாதையாக மாவு மெஷின் இயங்கியது. "எல்லோரையும் போய் மறுபடியும் கூட்டிக் கொண்டு வரட்டுமா மாமி" என்று கேட்டேன். (இல்லாவிட்டால் ஜலஜாவை எப்படிப் பார்ப்பது!)

"நன்றாய்த்தான் பைத்தியம் பிடித்திருக்கிறது மாமிக்கும் மருமானுக்கும்!" என்று சத்தம் போட்டார் மாமா.

ஆனாலும் நான் விடவில்லை, கொலுவுக்கு அழைக்காத குறையாகச் சொல்லிவிட்டு வந்தேன். எல்லோரும் முடிந்தால் வருகிறோம் என்றார்கள். ஜலஜா மட்டும் "நீங்கள் இட்டவே இருப்பீர்களோ?" என்று கேட்டாள்.

"உங்கள் இட்டத்தானே தாராளமாக!" என்று சொன்னதும், "சட் என்ன கொழுப்பு!" என்று பொய்க் கோபத்துடன் ஓடிவிட்டாள் ஜலஜா.

ஊறப் போட்ட உளுந்தை மெஷினில் போட்டுவிட்டு, "நீ பார்த்துக்கோடா சாமா. நான் வெளியே போய் யாராவது வருகிறார்களா என்று பார்க்கிறேன்!" என்றாள் மாமி.

அரிசியும் உளுந்தும் டூத்பேஸ்ட் பதத்தில் அரைபட்டு, துளியும் வாரியடிக்காத காட்சியைக் காண யாருக்கும் கொடுத்து வைக்கவில்லை என்று நினைத்துக் கொண்டிருக்கும் போது, ஜலஜா மட்டும் பதுங்கிப் பதுங்கி வந்து மாமியின் பக்கத்தில் நின்று கொண்டு மாவு மெஷினைக் கிணற்றில் தண்ணீர் இருக்கிறதா என்று எட்டிப் பார்க்கிற மாதிரி பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நன்றாகப் பார்த்துக்கொள் ஜலஜா! நீதான் பட்டணத்து நாட்டுப் பெண் ஆகப் போகிறாய். எல்லாம் தெரிந்து வைத்துக் கொள்ளணும்" என்று உபதேசம் செய்தாள் மாமி.

வெளியே, வராந்தாவில் மாமா மறுபடியும் சிரசாஸனம் செய்து கொண்டிருந்தார் போலும். தரையிலிருந்து அவர் குரல் கிளம்பி, "ஆமாம்டா சாமா, அவளுக்குப் பார்த்திருக்கிற பிள்ளை பட்டணத்தில் இருக்கிறான். அடுத்த மாதம் கல்யாணம் இருக்கலாம்!" என்றது.

மெஷினிலிருந்து முதல் நாள் மாவு தூக்கி வாரி அடித்த மாதிரி இருந்தது எனக்கு. அப்படியே முகத்தைத் துடைத்துக்கொண்டேன்.

புருஷன் புதுசாக இருந்தால் கூடக் கட்டிக் கொண்டு சமாளித்து விடலாம். புது மாவு மெஷினிடம் மாட்டிக் கொண்டு யார் முழிப்பார்கள் என்று தோன்றியிருக்கலாம் ஜலஜாவுக்கு.

இந்த இக்கட்டான நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்று யாராவது லத்தீன் மொழியில் எழுதி வெளியிட்டிருந்தால் கூட வாங்கிப் படித்துவிடத் துடிதுடித்தேன்.

"வருகிறேன், மாமி" என்றாள் ஜலஜா, புறப்பட்டு வாசல் வரை வந்து.

"நீதான் பட்டணத்துக்குப் போகப் போறே, அப்புறம் எங்கே வருவது?" என்றேன் பின்தொடர்ந்து.

"ஏன், வரக் கூடாதோ" என்றாள் ஜலஜா, ஒரு வெட்டலுடன். ஐயோ, பார்க்காமல் போய்விட்டாரே பா.ரா.— ஐமீன் பாரதி ராஜா!

"வரலாம் பிறந்த வீட்டுக்கு. ஆறும் மாதம், எட்டாம் மாதம் — குவாக் குவாக்கு முன்னால்!"

வெந்துபோன முகத்துடன் அவள் ஓட, நான் நிற்க, என் பின்னே தலை கீழாகவே மாமா இன்னும் நிற்க—

"என்னடா சாமா பேசிக் கொண்டிருந்தே ஜலஜாவிடம்?"

"ஒண்ணுமில்லே மாமா ... க்குங்..க்குங்.. அவளோட கல்யாண விஷயமாத்தான்..."

"அவ கல்யாண விஷயந்தானே அதுக்கு நீ ஏன் வெட்கப்படறே ... அதுதான் சொன்னேனே, ஒரு பையன் பட்டணத்திலிருந்து வந்து பார்த்துவிட்டுப் போயிருக்கிறான், நிச்சயமாகிறாப்போல் இருக்கிறது என்று?" மாமா சம்பூரணத்தைப் பரிதாபமாகப் பார்த்தேன்.

"நிச்சயமாகி விட்டதா? நிச்சயமாகவே நிச்சயமாகி விட்டதா?"

"பிடித்தால் நிச்சயமாக வேண்டாமா?"

"பிடித்திருக்கிறது என்று சொன்னானா?"

"அதுக்குள்ளே சொல்வானா? கடிதம் போடுகிறேன்னான்!"

ஒரு
உன்னதமான
புதிய படைப்பு!



ஏந்நேரமும் காப்பியோ தேநீரோ பருகலாம், ஈகிள் கோஸி டீ பாட் இருக்கையிலே!



மாடல்:	கீதா	எக்ஸ்ப்ரெஸ்ஸோ	கார்லோம்	மைத்ரே	ஸ்டூவார்ட்
கொள்ளளவு:	8 கோப்பைகள்	4 கோப்பைகள்	2 கோப்பைகள்	5 கோப்பைகள்	8 கோப்பைகள்

காப்பியோ தேநீரோ அடிக்கடி தயாரிப்பது ஒரு விதத்தில் பெரும் பிரச்னைதான். மீண்டும் மீண்டும் பாலைக் காய்ச்சுவது, அடிக்கடிய தேயிலை, காப்பித்தூள் இவற்றைக் கரைவது, பாத்திரங்களைக் கழுவி சுத்தம் செய்வது. இவை போன்ற பல தொல்லைகள். இப் பிரச்னைக்கு விடை காணுகிறது ஈகிள் கோஸி டீ பாட். ஒரே முறை தேநீரோ காப்பியோ தயாரித்து இதனுள் ஊற்றி வைத்திடுவீர். அவ்வளவுதான். பல மணி நேரங்களுக்கு கிடைத்தபோது சுகமாக வெதுவெதுப்புடன் தேநீரோ காப்பியோ பருகி மகிழ்ந்திடுவீர்.

இதனுள் இணைக்கப்பட்ட விசேட வாக்குவம் ஃப்ளாஸ்க் ரீஃபில், காப்பி, தேநீர் இவற்றை ஆவிபறக்கும் சூட்டில் பாதுகாத்தளிக்கிறது.



ஈகிள் கோஸி டீ பாட். பல மணி நேரங்களுக்கு சூடாக வைக்கிறது.

CASE-133-203 TAM

விடைகள்:

1. (ஆ) இத்தாலி 1968 தேர்தலின்போது 73 கட்சிகள் அங்கீகரிக்கப்பட்டன.
2. (இ) 250.
3. (இ) சுப்ரீம்கோர்ட்டின் தலைமைநீதிபதி
4. (ஆ) ராஜாஜி.
5. (ஈ) 41 — மக்கள் தொகை குறைந்ததன் காரணமாக இந்த எண்ணிக்கையும் குறைந்தது.
6. (இ) வங்காளி.
7. (ஆ) ஸ்டாலின். 'இரும்பு மனிதன்' என்று பொருள்படும் இந்தப் பெயரால் அவரை அழைத்தவர் லெனின்.
8. (ஈ) 1961 வரதட்சிணைத் தடுப்புச் சட்டம் மீதான விவாதம் அது.
9. (ஆ) ஜனவரி 26, 1950.
10. (ஈ) 1951.

பத்தும் சரியானல் அற்புதம். 6 முதல் 9 வரை அருமை. 3 முதல் 5 மகிழலாம். அதற்குக் கீழே சோகம்.

அமைப்பு: 'யெஸ்பால்'

கார்டூன் நன்றி: அமெரிக்கன் ரீவ்யூ

''போடலியே இன்னும்?''

மாமா உறுத்துப் பார்த்தார். என் கண் வழியே போய், பின் மண்டை வழியாகத் தெறித்து விழுகிற பார்வை. ''போய் ஜலஜாவையே கேள்!''

மாலை, மாமி மாவு மெஷினின் மெக்கானிஸத்தைப் பற்றி நான் அடித்த லெக்சரைக் கேட்டுவிட்டு அசந்து போனவள் போனவள் தான். (மத்தியானம் அந்த மெக்கானிக்கைப் பிடித்து டவுன் ஹோட்டலில் பத்து ரூபாய்க்குச் சாப்பாடு போட்டால் ஏன் தெரிய வராது பின்னே?)

''ஜலஜாவுக்குப் பார்த்திருக்கிற வரன் யார் தெரியுமோ '' என்று கேட்டாள் மாமி, திடீரென்று. கெட்டிக்காரிதான். மாமாவுக்குப் பின்னல் தலை கீழாக நிற்காமல் அத்தனை சின்களையும் பார்த்திருக்கிறுள். ''யாரோ நாராயணனும். திருவல்லிக்கேணியாம்!''

''ஐயோ!'' என்றேன் பதறிப்போய்: அல்லது பதறின மாதிரி. ''திருவல்லிக்கேணி நாராயணனு?அவன் ஏழெட்டு மாவு அரைக்கிற மிஷின் வாங்கிப் போட்டுவிட்டு, பார்த்துக்கொள்ள ஆளைத் தேடிக் கொண்டிருக்கிறன். மனைவியாகவே இருந்தால் சௌகரியம் பாருங்கள்! அவன்தானு?'' என்றேன். (திருவல்லிக்கேணிநாராயணு!என்னை மன்னி! நீ யாரோ அறியேன். ஆனால் என்ன செய்ய, ஜலஜாவை அறிவேனே!)

''ஏன், அவன் என்ன செய்கிறன் பகல் போதில்?''

''ஆபீஸ் போகிறன். இது சைட் பிஸினெஸ். (ஐயோ, இன்னொரு பொய்!)

''இதை ஜலஜாவிடம் சொன்னயோ நீ?'' என்றுள் மாமி பதைப்புடன்.

''இல்லே. இப்போதுதானே நீங்கள் விவரம் கேட்கிறீர்கள் ''

''சொல்லாதே, பாவம். அதிர்ந்து போய் விடுவாள்.''

''சொல்லாதேயா! நன்றுகச் சொல்லணும்'' என்றுர் மாமா, நேராக நின்று கொண்டு.

''பட்டணத்தில் கொண்டு போய் மாவு அரைத்துக்கொடுக்கவா இவன் ஜலஜாவைக் கல்யாணம் பண்ணிக்கிறுன்! இதற்குத்தான் மிக்ஸி, கிரைண்டர் எல்லாம் வைத்துக்கொள்ளத் தெரியுமா என்று கேட்டானே படுவாப் பயல்!'' என்றுர் மாமா. பிறகு என் பக்கம் திரும்பி, ''நீ என்னடா சொல்றே சாமா?'' என்றுர்.

''மாவு மெஷினில் ஜலஜா மாவு அரைக்கப்படாது மாமா!''

''முட்டாள்! ஜலஜாவை நீ கல்யாணம் பண்ணிக் கொள்கிறுயா ?''

''யெஸ் மாமா, இந்த மாவு மெஷின் சாட்சியாக!'' என்றேன்.

''இதோ புறப்படுகிறேம் ஜலஜா வீட்டுக்கு!''

சர்க்கஸில் பாதாளக் கிணற்றில் மோட்டார் சைக்கிள் ஓட்டும் வீரன் மாதிரி தாவி ஏறி, 'மோபெட்'டில் அமர்ந்தார் மாமா. மாமியும் பின் சீட்டில் அமர்ந்தாள்.(பாவம், மொபெட்!)

''நீங்கள் இரண்டுபேரும் ஸ்லோ மோஷனில் மாதிரி ஜலஜா வீட்டுக்குப் போகிறதற்குள் அவர்கள் திருவல்லிக்கேணி வரனை நிச்சயம் செய்து விடுவார்கள். மோபெட் பாழாவதை விட ரோடு பாழானுல் பரவாயில்லே. சீக்கிரம் நடந்தே போங்கள். பஞ்சாயத்துத் தேர்தலுக்கு முன்னல் எப்படியும் ரோட்டை ரிப்பேர் பண்ணி விடுவார்கள்!'' என்றேன் பொறுமை இழந்து.

''நன்றுயிருக்கிறதடா எங்களைக் கலாட்டா பண்ணுவது!'' என்றுள் மாமி.

கிரிக்கெட் டெஸ்ட் வாசகர் பரிசு ரூ 1500/-

கீழே உள்ள நான்காவது கூப்பனைப் பூர்த்தி செய்து முடிவுதேதிக்கு முன் அனுப்பிவிடவும். டெஸ்டின் முடிவும் கூப்பனில் உங்கள் முடிவும் ஒத்துப்போனால் ரூ. 100 பரிசு. ஒருவருக்கு மேல் சரியான விடை எழுதினால் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

ஐந்து டெஸ்ட்டுகளுக்கும் சரியான விடைகளைப் பூர்த்தி செய்து அனுப்புகிறவருக்கு ரூ. 1000 சிறப்புப் பரிசு. இதிலும் ஒருவருக்கு மேல் வெற்றி பெற்றால் பரிசு பகிர்ந்தளிக்கப்படும்.

கூப்பனில் அடித்தல் திருத்தல் இன்றித் தெளிவாய் எழுதவும். சந்தேகம் எழும் விஷயங்களில் ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. கடிதப் போக்கு வரத்துக் கிடையாது. உறையின்மேல் ''கிரிக்கெட் டெஸ்ட்'' என்று அவசியம் எழுதவும்.

கூப்பன் நெ: 4 டெஸ்ட் 5 (சென்னை) முடிவு தேதி ஜனவரி 11

கேள்வி	விடை
1. டாஸ் வெற்றி யாருக்கு? (கேப்டன் பெயர் எழுதவும்)	
2. இந்திய அணியில் அதிகபட்ச ரன்கள் எடுக்கப் போகிறவர் யார்? (இரு இன்னிங்ஸ்களும் சேர்த்து)	
3. இங்கிலாந்து அணியில் அதிகப்பட்ச ரன்கள் எடுக்கப் போகிறவர் யார்? (இரு இன்னிங்ஸ்களும் சேர்த்து)	
4. இந்திய அணியில் அதிகபட்ச விக்கெட்டுகள் எடுக்கப் போகிறவர் யார்? (இரு இன்னிங்ஸ்களும் சேர்த்து)	
5. இங்கிலாந்து அணியில் அதிகபட்ச விக்கெட்டுகள் எடுக்கப்போகிறவர்யார்? (இரு இன்னிங்ஸ்களும் சேர்த்து)	
6. ஐந்தாவது டெஸ்ட்டின் தலைசிறந்த ஆட்டக்காரர் என்று தேர்ந்தெடுக்கப்படப் போவது யார்?	
7. மாட்ச் ஏதேனும் ஓர் அணிக்கு வெற்றியாக முடியுமா? வெற்றி தோல்வி இன்றி முடியுமா?	

என் கையெழுத்து:

பெயர்:

விலாசம்:



பொன்மேனி

இந்திரா செளந்தரராஜன்

அன்றைக்கும் சூரியன் வரவில்லை.

ஒசர்ர்ர்ர்ரமான சேர்வ ராயனை மழை மேகங்கள் வளைத்துக் கொள்ள நொய்ய லாய் ஒழுகிக் கொண்டேயிருந்தான். ஒழுகும் நீரை வெறுப்போடு நோக்கியபடி திண்ணைச் சுவரின்மேல் சாய்ந்திருந்தாள் பொன்மேனி.

''பாழாப்போன மழை... சேலம் பக்கமா போய்க் காயற நெலத்துமேல ஊத்தாம, பூவும் புல்லுமா பொசு பொசுக்கற எம் பூமி மேலே பெய்ஞ்சுக்கிட்டுப் பொழைப் பைக் கெடுத்துக்கிட்டு....''

—அவள் மனத்தில் மருகல். அதற்கான காரணங்களோ ஏகம். 'நாளொன்றுக்குக் கைமேல் ஆறு ஏழுக்குக் குறையாத சில்லறை. பத்துப் பதினைந்து தேங்காய் மூடி, வாழைப் பழம், சில நேரங்களில் மஞ்சள் நிறத்தில் ஜாக்கெட் துணி' என்று உயிரோட்டமாய்க் கழியும் வெய்யிற்கால நாட்களை எண்ணி உருகுகிறது அவள் மனம்.

—அந்த நாட்களில் வெளிச்சத்தை முன்னே அனுப்பி விட்டுப் பின்னே வரும் சூரியனைப் பார்த்துவிட்டுப் பாதத்தை இயக்குவாள் பொன்மேனி. ''ஆத்தா! வழுக்குப்பாறைமுனி கோயிலுக்குப் போயார்றேன். பொறைக்குக் கூடையோட வந்துடு..'' — என்ற குரலோடு.

வழுக்குப்பாறை முனி கோயில் வெண் கல மணி சப்தத்தோடு டாண் டாணித்தபடி கறுகறுவென்று விழித்திருக்கும். ஏற்காடு, வாழவந்தி, செம்மநத்தம், என்று மலை ஊர் மக்களாலும், காரிப்பட்டி, அயோத்தியா பட் டணம், அத்தனூர் என்று நிலக்குடி மக்க ளாலும் சூழப்பட்டு மகா பரபரப்பில் மூழ்கி யிருக்கும்.

கம்பீரமாய் முனிசாமி கிழக்கு பார்த்த படி உட்கார்ந்திருப்பார். ஈசான மூலையில் எலுமிச்சைத் துண்டுகள் குவிந்திருக்க, நேர் எதிர்ப் பீடத்தில் உகரை விட ஆடும் கோழி யும் தயாராய் இருக்க, அதற்கும் கீழே வெட்டவெளி பாறைத் தொட்டி. அதன் மேல் தேங்காய் உருண்டைகள் இடிந்து மோதிப் பின்னமாகும்.

அது முனிபிரசாதம்! பஞ்சைகள் பாய்ந்து வந்து பொறுக்கிக் கொள்வார்கள். அவை களை அடையும் யுத்த முயற்சியில் பொன் மேனிதான் நாளதுவரை வெற்றிகாண்பவள். உலகில் இல்லவே இல்லாத பூக்களைப் பதித்துக் கொண்டிருக்கும் மல் பாவாடைத் துணி யின் அடிப் பாகம் பற்றித் தொட்டிலாய் மடித்து முழங்கால் வரைக்கும் உசத்தி அந்தத் துணித் தொட்டிலுக்குள் தேங்காய் மூடிகளை அடக்கிக் கொண்டு அவள் ஒவ்வொரு பூஜை குடும்பத்தையும் எதிர்பார்த்து, எதிர்பார்த் துக் கழிக்கும் பொழுதுகளில் இன்பப் பரவச மிருக்கும்.

அவளைக் காட்டிலும் அவளது சினேகிதி களான வடிவாம்பாள் சாமந்தி, சின்னுத்தி, பூமணி ஆகியோருக்குப் பரவசம் சற்றுக் கூடுதல்தான்.

''கோழியடிச்சுக் கும்பிடப் போறீங்களாம்மா?'' என்று கேட்பார்கள். பதிலைக் கூடைக்குள் இருக்கும் சேவல் கொடுக்கும்: ''கொக்கரக்கோ!''

''அடுப்புக்கு வெறகு பொறுக்கியாரவா?'' —கேட்பார்கள்.

''உம்...''

பதில் வந்தவுடன் ஆளுக்கொரு பக்கமாய் ஓடுவார்கள். அந்த மலைப் பரப்பின் பொரச மரமும், துணுவ மரமும், கருமருதும், நெட்டி லிங்கமும் உதிர்த்த கன்னிகளை யெல்லாம் திரட்டி ஒரு கட்டாக்கிச் சுமந்து வந்து போட்டால் பல் இளிப்போடு பத்து ரூபாய் வரை தருபவர்களும் உண்டு. பத்துக் காசு தந்து, ''இருந்து கறிச் சோத்தைத் தின்னுப் புட்டுப் போங்க'' என்று சொல்பவர்களும் உண்டு.

'இந்த மழை எப்போது ஓயும்?' — வினவோடு அன்றைய பொழுதை விரட்டி முடித்தாள் பொன்மேனி. மழை நடுநிசிக்கு நான்கைந்து நிமிடங்களுக்கு முன்னால் மெல்ல நிற்கத் துவங்கி விடியும்பொழுது வானம் துப்புரவாய் வெளுப்பாகியது!

சூரியன் ஜிகுஜிகுவென்று வந்தான். மலைக் காற்றினூடே இலை தழைகளை ஊடுருவிக் கிரணங்களைப் பாய்ச்சினான். தரைச் சொத சொதப்பை உஷ்ணத்தால்தாளிக்கத்தொடங் கினான். பொன்மேனி குளிர்ந்து போனாள். சக தோழிகளோடு வழுக்குப் பாறையை அடைந்து முனிக்குக் கும்பிடு போட்டுவிட்டுத் துரை மாதிரி நிற்கும் பொரசமரநிழலுக்குள் எல்லோருடனும் ஐக்கியமானாள்.

பூஜைக்காகக் காத்திருக்கத் தொடங்கிய வேளையில் அதிசயமாகத் தென்பட்டான் அம்புலி! — எப்பொழுதாவது தன் தகப் பனைப் பார்க்க வருகிறவன். 'களவாணிப் பயலே! களவாணிப் பயலே!' என்று தகப் பனிடம் வசவு வாங்குவான். பொன் மேனிக்கு அவனைக் கண்டாலே ஆகாது.

அவன் இவளை அழைக்கிறான்.

''பொன் மேனி... ஏ புள்ளே இங்கிட்டுக் கொஞ்சம் வாயேன்...''

இவள் அசையவில்லை.

''என்னய்யா?''

''புள்ளே! ஒரு வெறகுக் கட்டைத் தூக்கி யாறணும். வருவியா? பத்து ரூபாய் தரேன் புள்ளே...''

''வேணாம்.''

''யோவ், யோவ் நான் வரேன்யா...'' —பூமணி.

''நீ வேணாம். உனக்கு வெவரம் பத்தாது!''

''வெறவு தூக்கறதுக்குச் சக்திதான் வேணும். வெவரம் என்னத்துக்கு?''

''ஆத்தி, நீ வாயை மூடு. எனக்குப் பொன்மேனிதான் வேணும். அதுக்குத்தான் வெறகுக் கட்டைச் சொல்ற ஊட்ல கொண்டு போய்ப் போடத் தெரியும்.''

பொன்மேனி அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தாள்.

''பொன்னு! அடிவாரத்து மைனர் குஞ்சுப்பிள்ளை ஊட்டுக்கு வெறவு எடுத்துப்போகணும். வெறவுக் கட்டு நம்ப காளீஸ்வரி கோயிலுக்குப் பக்கமா இருக்கிற ஒரு புதர்ல இருக்கு. நான் எடுத்துத் தலை மேலே வெச்சு உட்றேன். நீ நடுவுலே நிக்காம போய் மைனர் ஊட்லே கட்டை எறக்கிணுப் போதும் என்ன சொல்றே?''

பொன்மேனிக்குப் புருவம் விரிந்தது.


''ஏய்யா மலைல இருக்கிற காளீஸ்வரி கோயில்லேயிருந்து அடிவாரத்து மைனர் ஊடு வரைக்கும் வெறவு சொமக்கணுமா? அதுக்கு நீ பத்து ரூபா தர்றியா? நூறு ரூபா தந்தாலும் ஒரு பொம்பளையால முடியுமாய்யா? மைலு ஏழு தேறுமே?''

—பொன்மேனி வியந்து சபித்தாள்.

''இருவத்தஞ்சே வாங்கிக்க...''

''உனக்கு எலுமிச்சம் பழம் தேய்க்கணும்யா.... எனக்குத் தர்ர கூலிக்கு அஞ்சு தாக்கு புளியான் விறவே வாங்கலாம் தெரியுமில்லே. ஏதோ விசயமிருக்கு. இல்லாம நீ இவ்வளவு ரூபாய் தரமாட்டே.''

அம்புலி கைகளைப் பிசைந்து கொண்டே அவனை முறைத்தாள். பின்னர்,



''அதெல்லாம் ஒண்ணுமில்லே புள்ளே. அம்புட்டு வெறவும் நெல்லிக் கட்டைங்க! கிணற்றுக் கசப்புத் தண்ணியைக் காவேரித் தண்ணியா மாத்தற அபூர்வ மருந்துக் கட்டைங்க. நான் பாரெஸ்டருக்குத் தெரியாம ஒடிச்சுச் சேர்த்தது. இதான் சங்கதி. இப்ப வருவியா...' என்றான்.

''சரி வா....''

இருவரும் மலைக்கு மேல் வகிடு போல் நீண்டு கிடந்த ஒற்றையடிப் பாதையில் ஏறி மறைந்தனர். அதே வேளையில் ஏற்காட்டை நோக்கி வளர்ந்து மூடிந்திருக்கும் கறுப்பு நிறத் தார் சாலை மேல் போலீஸ் ஜீப் ஒன்று அதீத வேகத்துடன் விரைந்தது.

பல நூறு ஆண்டுகளாய் சூரிய ஒளியையே கண்டிராதபடி உயர உயரமான கருமருதால் சூழப்பட்ட காளீஸ்வரி கோவிலின் சிதைந்த கோபுரம் தொலைவில் தெரிந்தது. காப்பிச் செடி சரிவில் குறுக்கும் நெடுக்குமாய்ப் புகுந்து மேலேறும்போது பொன்மேனி கோபுரத்தைப் பார்த்து ''ஆத்தி ஐசுவர்யம் கொடு'' என்ற மனப் பிரார்த்தனையோடு கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.

அடர்ந்த புதர் ஒன்றினை நெருங்கிய நிலையில் முக வியர்வை ஒழுக சுற்று முற்றும் நோக்கினான் அம்புலி. பின் புதருக்குள் புகுந்து பெரும் விறகுக் கட்டு ஒன்றைச் சுமந்து வந்து பொன்மேனியின் முன்னால் கிடத்தினான்.

விறகுக் கட்டைப் பார்த்த பொன்மேனிக்கு மலைப்பு ஏற்பட்டது. அளவிலும் பரப்பிலும் பெரியதாகவும் ஆல வேர்களால் பிரிக்க முடியாதபடி இறுக்கமாகவும் கட்டப் பட்டிருந்த அதனை எப்படிச் சுமந்து செல்வது என்று புரியாமல் அம்புலியை நோக்கினாள்.

''ஊம்... தூக்கு புள்ளே....'' — அவன் படபடப்போடு அவளை ஊக்கினான்.

''தேன் ஒன்றுதான் எத்தனை வருஷம் ஆனாலும் கெட்டுப் போகாதுன்னு நினைக்கப் பிள்ளையாண்டா னுக்குத் தேன் வியாபாரம் துவங்கி வச்சோம்...''

''சரி.....''

''வியாபாரம் சக்கைப் போடு போட்டு எக்கச்சக்க மான சம்பாத்தியம் வந்தது.''

''பலே பலே! அப்புறம்?''

''அப்புறம் என்ன? பிள்ளையாண்டான் கெட்டுப் போய்விட்டான்!''

-பெ. கலாசாமி



''சும்மாட்டுத் துணி?'' — அவள் கேட்க வும் அவன் அவதிக் கொதிப்போடு தன் துண்டையே சும்மாட்டுத் துணியாக்கித் தலையில் வைத்து அதன் மேல் கட்டைத் தூக்கி வைத்தான்.

சரிவில் ஆடி ஆடி இறங்கத்தொடங்கினாள் பொன்மேனி. தலை வயிற்றுக்குள் இறங்கி விடுமளவுக்குக் கனம் அழுத்திற்று.

''புள்ளே! நடுவிலே கட்டை இறக்கிப் பிடாதே. தூக்கி வைக்க ஆளு இல்லாமக் கஷ்டப்படுவே. காட்டிலாகா ஆளுங்க கண்ணுல பட்டுரும பத்ரமா போ. நான் தார் பாதை மேலே சைக்கிள்ளே அடி வாரம் வாறேன்...''

அம்புலி பேசிக் கொண்டே மலைச் சரிவின் மேல் ஏறினான். அவன் கால்கள் மிகுந்த வேக மாயின. வண்ண மயமான ஒரு பங்களாவின் வெளியே அம்புலிக்காகவே காத்திருந்த கோட்டும் சூட்டும் போட்ட ஒருவன் அம் புலியை ஆர்வத்துடன் பார்த்தான்.

''எசமான் காரியம் செயமா முடிஞ்சு போச்சு. மைனர் ஐயாவுக்குப் போனடிச்சு வெவரம் சொல்ல வேண்டியதுதான் பாக்கி'' என்றான் அம்புலி.

''அம்புலி மைனருக்குச் சேதி சொல்ற துக்கு முன்னாலே ஒரு விவரம் தெரிஞ்சுக்கோ. நம்ப களவு தெரிஞ்சு போலீசு மலைப் பாதை யிலே ரோந்து சுத்த ஆரம்பிச்சுடுச்சு. காளீஸ் வரி கோயிலுக்குக்கூட ஒரு ஜீப்பு போயிருக்கு. ஆகையினாலே நீ வந்த வழியிலேயே திரும்பி அந்தப் பொண்ணைத் தொடர்ந்து மைனர் வூடு வரைக்கும் போ. நடு வழியிலே போலீஸ் காரங்க கிட்ட அவ சிக்கிக்கப் போறா...''

''அதெல்லாம் ஒண்ணும் ஆவாதுங்க. பொன்மேனி மாதிரி நூறு பேர் இந்த மலைல வெறவு பொறுக்கிறவங்க இருக்காங்க... இவங்களை யெல்லாம் கொஞ்சமும் போலீசு சந்தேகப்படாது. இல்லாட்டி காரும், லாரியும் இருக்கச்சே அத்த உட்டுப்பிட்டு இப்படி ஒரு ஏற்பாட்டை மைனர் பண்ணு வாரா?''

''எல்லாம் சரிதான் அம்புலி. நாம செஞ்சிருக்கிறது சாதாரணக் களவு இல்லை யாதுங்கறதை மனசுல வச்சுக்கோ. ரொம்ப எச்சரிக்கையாத்தான் இருக்கணும். அத னாலதான் சொல்றேன். நீ அந்தப் பொண் ணைத் தொடர்ந்து போ. நான் போன் பண் ணிக்கிறேன்.''

அம்புலி தொடர்ந்து பேசாமல் பொன் மேனியைப் பின்தொடர வனத்தில் புகுந் தான். மனத்தில் கொஞ்சம் பயத்தோடு உற்சாகமும் அரும்பி யிருந்தது.

காளீஸ்வரி கோயிலில் சோதனையோடு கூடி விசாரணையும் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. அந்தக் கோயிலைத்தாண்டி அடிவாரம் நோக்கி மெள்ள நடந்துகொண் டிருந்தாள் பொன்மேனி. சட்டென்று பொறி தட்டினாற்போல் காளீஸ்வரி கோயில் பூசாரி பூதலிங்கத்தின் நினைவு அவளுக்கு வந்தது.

ஒரு நாள் பேச்சோடு பேச்சாக 'இந்தக் கோயில் கெணத்துத் தண்ணி அநியாயத் துக்குத் துவர்க்குது. புள்ளே. நல்ல நெல்லிக் கட்டை நாலு ஒடிச்சுப் போடணும். கோயி

னுக்கு வந்த யாரெஸ்டரு கிட்டக் கேட்டேன். பார்க்கலாம்னுரு. கொண்டாரமாட்டேங்கறாரு' என்னும் சலிப்பான பேச்சு அவன் நினைவுக்கு வந்தது.

'கொண்டு செல்லும் குவியலான கட்டையில் ஒரு இரண்டை ஒடிக்கக் கிணற்றில் போட்டால் என்ன?' அவனுக்குள் கேள்வி. 'கடல் நீரில் குடம் நீர் அள்ளினால் குறைவு தெரியவா போகிறது? செய்துவிடுவோம். பூசாரி சந்தோஷிப்பார்' என்ற முடிவோடு காளீஸ்வரி கோயிலை நோக்கித் திரும்பினான் பொன்மேனி. அவனுக்கு நேர் மேலே ஒரு புள்ளியைப் போல் தெரியும் அவனைப்பார்த்த படி வந்து கொண்டிருந்த அம்புலி புள்ளி வழி மாறிக் கோயில் பக்கம் திரும்புவது கண்டு விதிர்த்துப் போனான்.

கோயிலில்: ''சாதாரண விக்கிரகம் இல்லீங்க இது. அவ்வளவும் தும்பொன். பாரி மகாராஜாவும் ஓரி மகாராஜாவும் கொல்லி மலை ராஜ்யம் பண்ணுன காலத்துல செஞ்ச விக்ரகங்க அது. அம்பது கிலோ நிறை இருக்கும். விலை மதிப்பில்லாத அந்தக் காளீஸ்வரியோட அருமைச் சொல்லி மாள முடியாதுங்க....

''அதைக் கடத்துன பாவிங்க வெளங்காமத்தான் போவாங்க... எல்லாத்தையும் விட என் ஆத்தா எங்கேயும் போயிடாம தன் சக்தியாலே திரும்பவும் இங்க வருவாங்கற நம்பிக்கை எனக்கு நெறையவே இருக்கு....''

பூசாரி கண்களில் கண்ணீர் அலையோடு குரலில் தழுதழுத்துக் கொண்டிருந்தார். போலீஸ் இன்ஸ்பெக்டர் முன்னால். அந்த வேலை பார்த்து இரண்டொரு நெல்லிக் கட்டைகளுக்காகக் கட்டைப் பிரித்தபோது அதனுள் மோகனப் புன்னகையோடு படுத்திருந்த காளீஸ்வரியின் திருவுருவத்தை அதிர்ச்சியோடு வலிந்து கையில் எடுத்தவனாக அனைவரின் முன்னிலையிலும் அதிர்ந்து நிமிர்ந்தான் பொன்மேனி.

ஒரு இரவு ஒரு பறவை

மழைபெய்யும் இரவுகளில் கொலையாகும் பெண்கள். கொலையாளி யார்? ஏதோ ஹிட்ச்காக்தனமாக இருக்கும் என்று போனால் அநியாயமாய் ஏமாறலாம். டூயட், ஆட்டம், பாட்டம் என்று அறுத்துத் தள்ளுகிறார்கள். படமே ஒரு தேவையற்ற பிளாஷ்பாக்.

வித்தியாசமான காரக்டரில் வரும் சரத்பாபுவை மட்டும் சகிக்கலாம். நடனம், சண்டை என்று ஏராளமான வாய்ப்புகள் இவருக்கு. விஜயகுமார் — லதாவுக்கு வேலை அடிக்கடி டூயட் பாடுவதும், மீதி நேரத்தில் சண்டை போடுவதும் (வில்லன்களுடன்).

ஸ்டெப்-கட் தலையுடன் டிஸிப்ளின் பேகம் போலீஸ் அதிகாரி சங்கர், வழக்கமான ரவீந்தர். நவீன உடைகளில் பயமுறுத்தும் ரமாபிரபா, நம்மைக் கொஞ்சமாவது சந்தோஷப்படுத்தும் சுருளி, கவர்ச்சிக்கு அஞ்சலி நாயுடு, பிரவீணா, அழுகைக்கு பண்டரிபாய் (சினிமா அம்மாக்களுக்குச் சிரிக்கவே தெரியாதா?).... மனத்தில் நிற்காமல் போகிறார்கள்.

படத்தின் ஒரே நம்பிக்கை நட்சத்திரமான இளையராஜாவும் அளிப்பது ஏமாற்றமே!

அசிரத்தையான உட்புறப் படப்பிடிப்பின் லொட்டிங்ஸும், ஒரே நல்ல பாடலான 'ஆடாத ஆட்டம்' எடுக்கப்பட்டிருக்கும் முறையும் ஒளிப்பதிவாளர் எம்.சி. சேகருக்குப்பெருமை தருவனவாயில்லையே!

ஆனாலும் நம் மக்கள் இத்தனை பொறுமையற்றவர்களாக இருக்கக் கூடாது! சஸ்பென்ஸ் உடைவதற்கு முன்னாலேயே இப்படியா எழுந்து ஓடுவது? பாதி தியேட்டர் காலி!

சரி! கொலையாளி யாரென்று கேட்கிறீர்களா? ஐயோ! வேண்டாம்! அது சுருளி காமெடியைவிடப்பெரிய தமாஷ்! -சிந்து ஜீவா



புத்தாண்டில் போற்றுவோம்

ஸ்ரீ ராம தூதம் சிரஸா நமாமி



ஸ்ரீ ஜயஹனுமான் படம் என்றவுடனேயே அகில உலகமும் கல்கி ஓவியர் வினு வரைந்த படம் தான் மக்கள் மனதில் பதிந்துள்ளது.

காரணம்? கல்கி ஓவியர் பயபக்தியுடன் வரைந்தது.

மேலும் தன்னைப் பூஜிப்பவர்களின் துயரங்கள் விலகி, நலம் பெற கை கூப்பி ஸ்ரீ ராமபிரானை பிரார்த்தனை செய்யும் அடக்கமான உருவ அமைப்பு, கண்களில் கருணை. முகத்தில் சாந்தம், ஆபரணங்களின் அழகு ஸ்ரீ ஜய ஹனுமானே உயிர் பெற்று வண்ணப் படத்தில் நிற்கிறாரோ என மக்களின் பரவசம் பாராட்டுக்கள்.

உபந்யாச மேதை சேங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராம தீட்சிதரின் ஜய மங்களத் தோத்திரத்தை ஆதாரமாகக் கொண்டு வரைந்த அதிகார பூர்வமான படம் பூஜை முறைப் புத்தகத்துடன்.

எல்லாவற்றுக்கும் மேலாக அகில உலகமும் இப்படம் வியாபித்து அவரவர்கள் நினைத்த நல்ல காரியத்தை நிறைவேற்றி, துயர் துடைத்து வருகிறார் **ஸ்ரீ ஜயஹனுமான்.** பலனடைந்தவர்களின் கடிதங்கள் வந்த வண்ணம்.

காரணம்? நடமாடும் தெய்வமாகிய ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் அருளாசிகள் வழங்கி, அற்புத சக்தியை ஏற்றி விட்டிருக்கிறார்கள் இப்படத்திற்கு.

ஸ்ரீ ஜய ஹனுமான் வானவெளியில் பறக்கிறவர். அதே போல் இப்பரந்த உலகம் முழுதும் இப்படம் பிரபலமாகியுள்ளது என்பதை அடக்கத்துடன் சொல்கிறோம்.

ஸ்ரீ ஜய ஹனுமான் வண்ணப் படம்

(Copyright regd. A. 20286/78)

இன்றே வாங்கி பூஜியுங்கள் என்றும் நம்புங்கள் **ஹனுமானை**

அளவு விலை : 13½ × 20" ரூ. 6-00   9½ × 15" ரூ. 4-00

(பூஜைப் முறைப் புத்தகத்துடன்)

ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள்

வண்ணப் படமும்

$13\frac{1}{2} \times 20''$ ரூ. 5 00

$9\frac{1}{2} \times 15''$ ரூ. 3-00

வினு வரைந்தது



பதிவுத் தபால் செலவு ரூ. 4-50 கூடுதல் V.P.P. இல்லை. 50 படங்களுக்கு 20% தள்ளுபடி உண்டு. தேவையான படங்களின் கிரயத்தோடு தபால் செலவும் சேர்த்து கீழ்க்கண்ட முகவரிக்கு மணியார்டர் செய்யவும். நேரிலும் கிடைக்கும்.

உரிமையாளர் :

ஸ்ரீமதி சரஸ்வதி வெங்கட்ராமன்

w/o வினு (கல்கி) 16, வேலாயுத முதலித் தெரு,
நுங்கம்பாக்கம், சென்னை - 600034
போன் : 89191 (வள்ளுவர் கோட்டம் பஸ் ஸ்டாப் அருகில்)

நேரில் மட்டும் கிடைக்கும் மற்ற இடங்கள் :

ரமணராஜ் ஏஜன்சிஸ், 'சாரதா இல்லம்'
32/169 எடையர் தெரு, கோயமுத்தூர்-641 001

திரு நாகராஜராவ்
94B, சாலை ரோடு, சேலம்-636 001

சப்தகிரி புக் ஷாப்
30, ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை-600 017

தஞ்சாவூர் படக்கடை
சந்நிதி தெரு, மைலாப்பூர், சென்னை-600 004 (கபாலி கோயில் அருகில்)

மார்க்கண்டேயா புக் ஸ்டால்
கும்பேஸ்வரர் கோயில், கும்பகோணம்

ஸ்ரீ T. K. சீனிவாசன், மினர்வா & பசப்பா சர்க்கிள்
(Mars Enterprises மாடியில்) போன் : 603185
18/1A, Lal Baugh Fort Road, Bangalore-560 004

Sri C. S. தீக்ஷிதர்
18, பிள்ளையார் கோவில் தெரு, கும்பகோணம்-612 001

Sri S. ஜகந்நாதன்
42, II மெயின் தெரு, புருஷோத்தம் நகர், குரோம்பேட்டை, சென்னை-600 044

அகத்தியர் புக் டிப்போ
தெப்பக்குளம், திருச்சி-620 002

Sri Ganesh Enterprises
அட்டகுளங்கரா, திருவனந்தபுரம்-695 023 போன் : 5508

ஸ்ரீ பார்த்தசாரதி புக் ஸ்டால்
ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி கோயில், திருவல்லிக்கேணி, சென்னை-600 005

குமரிப் பெண்ணே! குயிலாளே!

விமலா ரமணி

13

பிள்ளையார் கம்பீரமாக வீற்றிருந்தார்.

நாலைந்து நாட்களுக்கு முன்னால் ஞானா போட்ட பூக்கள்.... தொடுத்த மாலை வாடி வதங்கிச் சுருண்டு கிடந்தன.

யாரோ புண்ணியத்துக்கு விளக்கேற்றி வைத்திருந்தார்கள். அதன் மங்கிய ஒளியில் ஞானா பிள்ளையாரைப் பார்த்தான். கண்களை நீர் மறைத்தது.

''பிள்ளையாரப்பா... நான் போகிறேன்... இந்த ஊரை விட்டு.... உன்னை விட்டுப் போகிறேன்... சத்தியமா நான் ஒரு தப்பும் பண்ணலை. நான் செல்வியோட வாழப் போகல்லே. ஒரு பொண்ணைச் சாக விடாமல் காப்பாத்தப் போறேன். ஊர் பஞ்சாயத்துலே நான் மௌனமா யிருந்தேன். ஆனா இன்னிக்கு உங்கிட்டச் சொல்லிட்டுப் போறேன். இத்தனை நாள் வரை உன் தலையிலே குடம் குடமாக் கொட்டின ஜலமும் கண்களிலே கண்ணீர் பெருக உன் திவ்ய நாமங்களைச் சொன்ன பலமும் எனக்கு உறுதுணையா உதவிக்கு வரட்டும். நாலு நாளா பட்டினியாக் கிடந்திருக்கியே. உனக்கு இந்தக் கிராமத்துக்காரா சீக்கிரம் ஒரு நல்ல வழி பண்ணணும். நான் போயிட்டு வரேன்... எங்கே இருந்தாலும் உன்னை மறக்க மாட்டேன்.''

''கணானாம் த்வா கணபதிம் ஹவாமஹே கவிம் கவீனா முபமச்ரவஸ்தமம்!''

—ஞானா மெல்ல மந்திரம் சொன்னபடி பிள்ளையாரை வலம் வந்தான்.

காலில் ஏதோ இடறியது.

உருண்டையாக என்ன இது...? ஓ! மஞ்சள் கிழங்குகள். யாரோ சுமங்கலிக்கு வெற்றிலைப் பாக்கு வைத்துப் பிள்ளையார் சந்நிதியில் தந்திருக்கிறார்கள். அது தவறிக் கீழே விழுந்திருக்கிறது.

ஞானா அந்த மஞ்சள் கிழங்குகளைப் பொறுக்கி எடுத்துக்கொண்டான். பிறகு மெதுவாக ஓசைப் படாமல் அந்த இடத்தை விட்டகன்றான். அவன் அந்த நேரத்தில் ஆற்றங்கரையை அடைந்தபோது நாயர் தயாராகக் காத்திருந்தான். அந்த இடத்திலேயே ஞானாவை மறைவிடமாக ஒளிந்து கொள்ளச் சொன்னான். சுகன்யாவையும் செல்வியையும் அனுப்பிவைப்பதாகக் கூறினான்.

ஞானா காத்திருந்தான்... காத்திருந்தான்.

தூங்கித் தூங்கி விழித்து... விழித்து... அப்படியே அந்த மரத்தடியில் ஒடுங்கிக் கிடந்தான். யாராவது நடந்து வருகிற சப்தம் கேட்கும்போதெல்லாம் சப்த நாடியும் ஒடுங்கிப் போக அப்படியே மூச்சைப் பிடித்துக் கொண்டு கிடப்பான். காலடி ஓசை தள்ளிப் போன பிறகுதான் மூச்சை விடுவான்.

ஊர்க் காவல் பலமாகத்தான் இருந்தது.

''சின்னய்யா...சின்னய்யா...!''

இது செல்வியின் குரல்தான்! சந்தேகமே இல்லை.

ஞானா மறைவிடத்தை விட்டு வந்தான்.

மணி என்ன இருக்கும்? அதோ விடிவெள்ளிகூட முளைத்து விட்டது போலிருக்கிறதே!

''வாங்க சின்னய்யா.... நேரமாச்சு. சுகன்யா அம்மாவை மீட்க முடியலியாம். இத்தனை நேரம் காத்துக் காத்து...இருங்க... இருங்க... யாரோ வர்றாங்க.''

வந்தது?

இருட்டில் இரு உருவங்கள் தெரிந்தன.

சுகன்யாவும், நாயருமா?

இல்லை சுகன்யாவும் மாணிக்கமும்.

மாணிக்கம்! இவனா? இவனும்... இவனும் இவர்களுடன் அக்கரை வரப் போகிறானா?

''சீக்கிரம் ஞானா... சீக்கிரம் கிளம்புங்க... செல்வி சீக்கிரம் பரிசலை எடு. நாயர் அங்கே எல்லாருக்கும் போக்குக் காட்டிக்கிட்டு இருக்கான். அவங்க எங்களைக் காணோம்னு கண்டு பிடிக்கிறதுக்குள்ளே அக்கரை போய்ச் சேர்ந்து யார் வீட்டிலேயாவது அடைக்கலம் தேடிக்கணும்....''

மாணிக்கம் தெளிவாகப் பேசினான். நிதானமாகப் பேசினான். தயக்கமின்றி நிஜமான வார்த்தைகளாகப் பேசினான்.

''ஞானா... எனக்கு இவர் கிடைச்சுட்டார். நாயரோட விடா முயற்சியால் இவரோட மனசு மாறிவிட்டது. என்னை... என்னை... ஏத்துண்டுட்டார்... நாங்க இனி இங்கே வாழ முடியாது. அதனாலதான் அக்கரை போறோம். நாயருக்கு... இந்தச் செல்விக்கு.. உங்களுக்கெல்லாம் நான் எப்படி நன்றி சொல்லப் போறேன் ஞானா?'' — சுகன்யா அழுதாள்.

''சீக்கிரம் எல்லோரும் பரிசல்லே ஏறுங்க. இப்போ பேச நேரமில்லை....'' — செல்வி அவசரப்படுத்தினாள்.

அனைவரும் பரிசலில் ஏறினர்.

பரிசல் தவழ்ந்தது. அந்த விடியற்காலைப் பொழுதின் குளுமையில், காலைக் காற்றின் அமிர்த வர்ஷிப்பில் மனமே ஆனந்தக் களி

பாடியது. இப்போது நாயர் இங்கிருந்தால் கட்டாயம் கை தட்டிப் பாடியிருப்பான்.

''நிர வைக்கான் ஆனு வேணம், கொடி
தோரணங்கள் வேணம்
விஜய ஸ்ரீ லாளிதராய் வரண்ணு ஞங்கள்
ஓ! இத்தித் தாதா இத்தித்தை
இத்தை தகதைதைதோம்....''

திடீரென நடேச சாஸ்திரிகள் மனத்தில் பேசினார்.

''சுகன்யாவோட கல்யாணப் பொறுப்பை உன்கிட்டே ஒப்படைச்சிருக்கிறேன்.''

ஆ....அப்படிச் செய்தால் என்ன?

கையிலே மஞ்சள் கிழங்கு சிரித்தது.

''சுகன்யா... உனக்குக் கல்யாணம் செய்து வைக்கிற பொறுப்பை அப்பா எங்கிட்டே ஒப்படைச்சார். அதை இந்தப் பரிசல்லே நடத்திக் காட்டட்டுமா? தயவு செஞ்சு நான் சொல்றதைக் கேளு....''

ஞானு பரபரப்புடன் இயங்கினான்:

உஷத் காலம்... நல்ல முகூர்த்த நேரம்... பிரம்ம முகூர்த்த நேரம்.

செல்வியின் மஞ்சள்நிற சுருக்குப் பையிலிருந்து மஞ்சள்நிற கயிற்றை உருவினான்.

அந்தக் கயிற்றில் மஞ்சள் கிழங்கைக் கட்டினான். அந்தத் தாலியை மாணிக்கத்தின் கைகளில் தந்தான்.

''மாங்கல்யம் தந்துனானே மம ஜீவனயே
துனாம்
சுமங்கலி . ரியம்வது''

—மந்திரங்களைக் கம்பீரமாக உச்சரித்தான் ஞானு.

ஆற்றின் அலைகள் ஆர்ப்பரிக்க, பரிசல் மணமேடையாக, செல்வி பரிசல் ஓட்டும்போது துள்ளி எழுகிற அலைத் துளிகள் பன்னீர்ப் பூக்களாக வர்ஷிக்க, அந்த நட்ட நடு ஆற்றில் ஓர் அழகான திருமணம், காதல் திருமணம் நடந்து முடிந்தது.



சுகன்யா நெகிழ்ந்து போயிருந்தாள்.

அப்படியே மணமக்கள் இருவரும் ஞானு வின் கால்களில் விழ்ந்து ஆசி பெற்றனர்.

''மாமா... நீங்க எனக்குக் கொடுத்த பொறுப்பை நான் செய்து முடித்துவிட்டேன். மாமா... செய்து முடித்துவிட்டேன்... சுகன் யாவோட கல்யாணத்தை நடத்தி வைத்து விட்டேன்....''

மனம் குதூகலித்தது. இன்னும் சில பிரம்ம முகூர்த்தங்கள் பாக்கி இருக்கின்றன!

இந்தக் குதூகலக் கனத்துடன் அவர்கள் அக்கரை அடைந்தபோது...?

கரையில்....?

ஒரு சின்னஞ் சிறுவன் வயது பதினைந்துக் குள் இருக்கும். கையில் ஒரு பையுடன் காத்திருந்தான்.

முகத்தில் பால் வடியும் களை! யார் இந்தப் பிள்ளை?

''என் பெயர் பால சுப்பிரமணியம். அக் கரையிலே ஒரு பிள்ளையார் கோவில் இருக் காமே... அந்தக் கோவிலுக்குக் குருக்களே இல்லையாம். என்னை வரச்சொல்லி, சொல்லி அனுப்பி இருக்கா....''

சிறுவன் கூறினன்.

ஞானுவுக்குத் தான் முதன் முதலில் அந்தக் கிராமத்துக்குப் போன நாள்... பழைய நினைவு... நினைவுக்கு வந்தது.

இவனை யார் அக்கரை கொண்டு போய் விடப் போகிறார்கள்?

இவன் போகாவிட்டால் பிள்ளையார் பூஜை மேலும் தடங்கல் படுமே! இவனை வர வேற்க அன்று மாதிரி ஒரு நடேச சாஸ் திரிகள் இல்லாவிட்டாலும் ஊர்க்காரர்கள் இருக்கிறார்கள்.

ஞானஸ்கந்தனை ''ஞானு...ஞானு...'' என்றார் சாஸ்திரிகள். இன்று அவர் இருந் திருந்தால் இவனையும்''பாலு...பாலு''என்று கூப்பிட்டிருப்பார். இவன்... இந்தப் பையனை அக்கரை சேர்க்க வேண்டுமே!

ஞானுவின் எண்ணங்களைப் புரிந்துகொண் டாள் செல்வி.

''சுகன்யா அம்மாவும், மாணிக்கம் ஐயா வும் போகட்டும். நீங்க கொஞ்ச நேரம் காத் திருங்க சின்னய்யா...நான் இந்தப் பையனை ஒரு நொடியிலே அக்கரை சேர்த்துட்டு ஓடி வந்துடறேன்.''

அவள்: உன் கணவர் சரியான சிக்கனக்காரராமே?
இவள்: அதை ஏன் கேட்கிறே போ! சினிமா வுக்குக் கூட்டிக்கிட்டுப் போங்கன்னு சொன்னு உடனே பேப்பரைப் பிரிக்கப் பார்க்க ஆரம்பிச் சுடறார்.... வரி விலக்குப் பெற்ற படம் எந்தத் தியேட்டரில் ஓடுதுன்னு!
-உ. ராஜாஜி



''செல்வி....இதனால...?''

''என்னைப் பத்திக் கவலைப்படாதீங்க... இந்தாங்க... இந்தக் கருக்குப் பையைப் பிடி யுங்க. பத்திரம். அதுல நீங்க அன்னிக்கு எனக்குக் கொடுத்த காசைச் செலவழிக்காம அப்படியே வெச்சிருக்கேன். சின்னய்யா... சாக்கிரதை....''

ஞானு பையை வாங்கிக் கொண்டான்.

சுகன்யாவும் மாணிக்கமும் கிளம்பிப் போய்விட்டார்கள்.

விடிவதற்குள் ஒரு நல்ல இடத்தை அடைந் திடவேண்டும் என்கிறபரபரப்பு அவர்களுக்கு.

அந்தச் சின்னப் பையனை ஏற்றிக் கொண்டு பரிசல் புறப்பட்டது.

''நீங்க யாரு மாமா? எனக்கு அந்தப் பக வான் மாதிரியே வந்து உதவி பண்றேளே!'' —சிறுவன் கேட்டான்.

''நானா?'' ஞானு சிரித்தான்.

''அக்கரைக் கோயிலுக்குக் குருக்களே இல் லேன்னு சொன்னியேப்பா. அந்த இல்லாத குருக்கள் நான்தான்!''

சிறுவன் வியந்தான்.

''என்ன சின்னய்யா... இதெல்லாம் போய்ச் சொல்லிக்கிட்டு...''

''உங்களை அவா விரட்டிட்டாளா?''

''இல்லேப்பா... என்னை நானே ஒதுக் கிண்டுட்டேன்.''

''ஏன்?''

''உனக்கு அதெல்லாம் புரியாது.''

பரிசல் கிளம்பியது. அந்தச் சிறுவன் கண் களை மூடியபடி மந்திரம் சொல்ல ஆரம்பித் தான்.

''வக்ர துண்ட மகாகாயா சூர்ய கோடி..''

செல்வி அந்தப் பால்வடியும் முகச் சிறு வனைப் பயபக்தியுடன் பார்த்தாள்.

கடவுளே... இந்தப் புள்ளையாவது அந்தக் கிராமத்துலே நிலைச்சு நிக்கணும். இந்தப் புள்ளை நிக்கும். அதான் செல்வி போனப் புறமா இனிமே பிரச்னை இல்லையே... அப்ப டியே பிரச்னை வந்தாலும் இந்தச் சிறுவன் சின்னவன். இன்னும் காலம் நிறையவே இருக்கு. அதற்குள் காலம் மாறும். பரிசல் தள்ளிப் போய்விட்டது.

மெல்ல...மெல்ல... பொழுது புலர ஆரம் பித்து விட்டது.

ஞானு இக்கரையில் நிலைகொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

செல்வி ஏன் திரும்பி வரவில்லை? செல்விக்கு என்ன ஆயிற்று?

பொழுது நன்றாகவே விடிந்து விட்டது.

ஜன நடமாட்டம் அதிகமாகி விட்டது.

ஞானு ஓர் ஓரமாகத் தயங்கியபடி நின்று கொண்டிருந்தான். நிலைகொள்ளாமல் தவித் துக் கொண்டிருந்தான்.

கையில்?

செல்வி கொடுத்த கருக்குப் பை!

அவிழ்ந்த பை!

அதில் செலவழிக்கப்படாத நாணயம்!

அவன் நினைவாக... ஞாபகார்த்தமாக...

இது அவன் நினைவா? இல்லை செல்வி அவ னுக்குத் தந்த நினைவா?

செல்வி... உனக்கு என்னவாயிற்று? உன் னைப் பைத்தியக்காரன் மாதிரி மீண் டும் அக்கரை அனுப்பியது தப்போ?

ஜலதோஷம் உங்கள் நாளையே கெடுக்க அனுமதிக்காதீர்கள்



ஜலதோஷத்தைப் போக்கலாம்

நல்ல ஒரு நாளையே கெடுக்கும் மூக்கு ஒழுகுதல் அல்லது மூக்கடைப்பு, தலை கனம், தொண்டைக்கட்டு மற்றும் மார்சளி போன்றவற்றுடன் உள்ள ஜலதோஷத்திலிருந்து நிவாரணம் பெற ஒரு வழி இருக்கிறது.

ஜலதோஷ மருந்து கொண்டு தாக்கிடுங்கள்

மற்ற உபாதைகளைப் போன்றே இதற்கும் சிகிச்சையளித்தால் போதாது. பாதிக்கப்பட்ட பாகங்களி லெல்லாம் ஒரே சமயத்தில் செயல் புரியவல்ல விசேட ஜலதோஷ மருந்தையே உபயோகியுங்கள்.

கோல்டரின் ஜலதோஷத் திற்கு மட்டுமே


உங்கள் சுறுசுறுப்பைக் கெடுக்கும் அறிகுறிகள் அனைத்தையும் போக்கு கிறது—கோல்டரின். இதிலுள்ள விசேட மருந்துப் பொருட்கள் ஜலதோஷத்தினால் பாதிக்கப்பட்ட எல்லா பாகங்களிலும் ஒருங்கிணைந்து செயல்புரிகின்றன. அதோடு, ஜலதோஷ எதிர்ப்பு சக்தியை வளர்த்திட இதில் வைட்டமின் C உள்ளது.

ஜலதோஷத்தினால் பாதிக்கப்படும் போது ஜலதோஷ மருந்தையே சாப்பிடுங்கள்.

கோல்டரின்

விசேட ஜலதோஷ மருந்து

CASBC-64-172 TM



ஜனவரி 87

செம்பியன் எழுதும்

ரவிகுல திலகன்

சரித்திரத் தொடர் கதை



நேரமாகிக் கொண்டிருந்தது. செல்வி ஏன் இன்னும் திரும்பி வரவில்லை?

அக்கரையில் என்ன நடக்கிறது?

அதோ... அதோ தூரத்தில்...?

''ஓ! ஞானு ஸாரே....''

ஆமாம்... இது நாயர் குரல்தான்! கம்பீரமான நாயர் குரல்தான்!

ஆனல் அந்தக் குரல் ஏன் இப்படிச் சோர்ந்து போய் ஒலிக்கிறது?

ஆற்றில் கட்டு மரத்தைத் தள்ளிக்கொண்டு வருவது....?

நாயர்தான்.....!

கட்டுமரத்திலிருந்து இறங்கிய நாயர்...

ஐயையோ... இதென்ன கட்டு மரம் சிவப்பாக இருக்கிறது? ஆற்றில் நாயர் நீந்தி வந்த தடம் ரத்தக் கோடு போட்டது போல் ஏனிப்படிச் சிவப்பாக... நாயர் உனக்குஎன்னவாயிற்று?

நாயரின் தோளிலும், கழுத்திலும் கைகளிலும் வெட்டுக் காயங்கள்... ரத்தம் பெருகிக் கொண்டிருக்க.... நாயர் கரையில் திணறியபடி கீழே விழுந்தான்.

அவன் விழுந்த இடத்தில் ரத்தம் கோலமிட்டிருந்தது.

''ஞானு... உண்ட செல்வி... உண்ட செல்வி... இனி வரில்லா...அவள்...ஒரு ரத்த சாட்சியாக்கி மாற்றப்பட்டு... செல்வி மரிச்சு ஞானு... அநியாயமாய் கொலையாயி...... அதெண்ட அந்திம சின்னங்களென என்டே தேகத்தைக் காணுன்னது. ஈரெண்டு ஜீவிதங்களெ நிங்கள் என்னன்னுமாயி மறந்நெரு. ஞங்களோட ஆத்மாக்கள்... சாரிண்ட நன்மைக்காயி... என்றும் பிரார்த்திக்கும்... இனியும் ஒரு நிமிஷம் ஸார் இவிட... நின்னு கூடா... ஞானு ஸாரே! வேகம் வேகம்... போய்... கோ...ம்...''

'குபுக்'கென்று வாயில் இருந்து ரத்தம் கொட்ட நாயர் அந்த மண்ணில் மற்றொரு 'ரத்த சாட்சியாக' வீழ்ந்தான்!

ஞானுவை வேகமாகப் போகச் சொன்ன நாயர் தான் வேகமாகப் போய்விட்டான்.

இந்த உலகை விட்டே போய்விட்டான்!

ஞானு நடந்ததை யூகித்தான்.

அந்தச் சிறுவனை இறக்கிவிட வந்த செல்வியை அவள் இனத்தவர் கண்டிருக்க வேண்டும். ஞானுவுடன் தப்பி ஓட நினைத்தவளை வெட்டிப் புதைக்க முயலும்போது நாயர் குறுக்கிட்டிருக்க வேண்டும். பரிசுகள் அரிவாள் வெட்டுக்களாக அவன் தோளிலும் கழுத்திலும்... நாயர்... யாரோ எங்கேயோ கெட்டுப் போகட்டும் என்று விடாமல் நீ உயிரை விட்டிருக்கிறயே நாயர்!

ஞானுவின் திருமணத்துக்கு இக்கரைக்கு ஒருத்தரும் அக்கரைக்கு ஒருத்தருமாக ரத்த ஆரத்தி எடுத்துக் காத்திருக்கின்றனரா?

பொழுதுகள் புலர்ந்தும் ஞானுவுக்குப் பொழுதுகள் புலராமலே போய்விட்டனவா?

''என் பிறந்த மண்ணை நேசிக்கிறேன்... நான் தவழ்ந்து விளையாடின மண்ணை நேசிக்கிறேன்'' என்று சொல்லிய செல்வி அந்த மண்ணையே தன்னுடைய உடல் ரத்தம் முழுவதாலும் குளிப்பாட்டிவிட ஆசைப்பட்டு அக்கரையிலேயே பிணமாகிப் போனளா?

செல்வியின் கடைசிச் சொட்டு ரத்தம் கூட அக்கரை மண்ணேடு மண்ணுகக் கலந்துவிட்டதா?

இக்கரையில்....?

ரத்தத்தில் தோய்ந்த கட்டு மரம் கரையில் கிடக்கிறது. அவிழ்ந்த சுருக்குப் பை கீழே விழ... அதிலிருந்து சிதறிய நாணயம் உருண்டு... உருண்டு ஓடி.... அதோ... அதோ... செல்வி பரிசல் ஓட்டிய அந்த ஆற்றில் மூழ்கி மறைந்து செல்வியின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துகிறது!

பரிசல் இல்லாமல் வெறிச்சோடிக் கிடக்கும் ஆறு!

தூரத்தில்.....?

கொலுஸுகளின் சப்தங்கள் கேட்கின்றன.

வெகு தூரத்தில்?

நாயரின் ஓடப் பாடல்கள் கேட்கின்றன. மெல்லக் கேட்கிற அந்தப் பாடல் திடீரென்று பெரிதாக...பெரிதாக.... பெரும் ஒலியாக மாறி... நாலாபுறங்களிலும்...அந்த ஆற்றிலும், மலை முகடுகளிலும்... பச்சை வரப்புக்களிலும்.....

அலைகளாக.... எதிரொலிகளாக... புயல் காற்ருக மாறி மாறி ஒலித்து ஓங்காரமிடுகிறது.

''ஓ! தித்தித் தாதா தித்தித் தை
தித்தை தகதை தை தோம்!''

''தோம்''

''தோம்''

''ஓம்...ஓம்....''

ஞானு பெரிதாக அழ ஆரம்பிக்கிறன்.

முடிவில்லாமல் அழுது கொண்டே இருக்கிறன்.

(முற்றும்)

ரசிகமணி ரசித்த மணிகள்

சங்கீதக் கச்சேரிகள்

இலக்கியத்தில் புதிய படைப்புக்களிலும் பழைய படைப்புக்களிலும் ரசிகமணிக்கு எப்படி ஒரு தனியான பார்வை இருந்ததோ, அப்படியேதான் இசை உலகிலும்! தரமான சங்கீதத்தையே அவர் ரசித்தார். அதோடு சாஹித்தியத்துக்கு முக்கியம் கொடுத்து. அவர் அடிக்கடி சொல்கிற ''பாவம்'' எவருடைய ஆடலிலும் பாடலிலும் இருந்ததோ அதையே அவர் பாராட்டினார். இதோ ஜஸ்டிஸ் மகராஜன் அவர்களுக்கு 7–1–50ல் டி.கே.சி. எழுதிய ஒரு கடிதம்:

முன்பெல்லாம் இந்தப் பாகவதர் பாடப் போகிறார், அந்தப் பாகவதர் பாடப்போகிறார் என்று அமர்க்களப்படும். அமர்க்களம் எல்லாம் பேரை வைத்துத்தான். பாட்டை வைத்து அல்ல.

ஆனால், இப்போது பேருக்கான மோகம் ஜனங்களிடத்தில் இல்லை. சங்கீதக் கச்சேரி என்றால் விருதாக் கச்சேரி, தலைவலிக் கச்சேரி என்று பட்டுவிட்டது. டிக்கட்டு வசூல் ரூ. 100 முதல் ரூ. 18 வரையும் என்று ஆய்விட்டது. ஆயிரம் கீயிரம் இல்லை!

இதில் படே படே பாகவதர்களுடைய பேர் மங்கிவிடக் கூடாது என்று சில பணக்காரர் (ஞானம் பூஜ்யம்) ரூ. 300, 400, 500 என்று டிக்கட்டு வாங்க ஏற்பாடு செய்து கொள்கிறார்கள். இப்படியான Fans வாங்குகிற டிக்கட்டுக்களைப் பற்றியும் பேசி ஆக வேண்டியிருக்கிறது. கடிதம் எழுத நேரம் ஏது?

தமிழ் உலகத்தில் போலவே சங்கீத உலகத்திலும் வெறும் படாடோபத்தின் ஆதிக்கமாய்ப் போய்விட்டது. ஆனாலும் உண்மைச் சங்கீதம் இருக்கிறது. அதற்கு மதிப்பும் இருக்கிறது.

எம். எஸ். கச்சேரிக்கு ரூ. 3200 கேட் கலெக்ஷன் மாத்திரம். ஸீஸன் டிக்கட்டு வேறு.

தமிழ் நாட்டுப் பண்பாட்டைக் காட்டுவதற்கான மூன்று கச்சேரிகள் இருந்தன. எம். எஸ். பாட்டுக் கச்சேரி, ராதா நடனம், பாலசரஸ்வதியின் நடனம். மூன்றும் மிக உயர்ந்த பாணியில் இருந்தன. சபையோரை மயக்கத்துக்கு உள்ளாக்கி விட்டன அவைகள்.

ஆகவே, டிஸம்பர் மாசம் டிஸம்பர் மாசமாய்ப் போய்விடவில்லை. மூன்று கச்சேரிகளும் தமிழர் பண்பாடு இன்னது என்று அழகாய்த் தெரிவித்தன.

இந்தத் தடவை ராதா நடனத்தில் குற்றாலக் குறவஞ்சிப் பாடல்கள் மூன்றைச் சேர்த்திருந்தோம். பாடினதோ எம். எஸ். கேட்பானேன், ஒரு வெறியாட்டத்தையே உண்டு பண்ணி விட்டது சபையோருக்கு. பவனகர் மகாராஜா, மகாராணி இருவரும் கடைசிவரையும் இருந்து நன்றாக அனுபவித்தார்கள்.

இப்போது குறவஞ்சியைக் கொண்டே தனிக் கச்சேரி (நடனம்) வைத்தால் வெகு ஜோராய் இருக்கும் என்று படுகிறது இங்குள்ளவர்களுக்கு. இன்றோ நாளையோ குறவஞ்சியை மொத்தமாகவே கேட்க வேண்டும் என்று சொல்கிறார்கள். நடனத்துக்காகத்தான். நானும் வாசித்துக் காட்டப் போகிறேன்.

எல்லாவற்றுக்கும் நல்ல காலம் பிறப்பது என்பது உண்டல்லவா? குற்றாலக் குறவஞ்சிக்கும் நல்ல காலம் பிறக்கிறது!

பாலசரஸ்வதியின் நடனம் அதாவது அபிநயம் அபூர்வமான சிருஷ்டி தத்துவம் வாய்ந்ததாய் இருந்தது. ஓர் உணர்ச்சிக்கு எத்தனையோ படலங்கள் இருக்கின்றன என்பதைத் தெள்ளத் தெளிந்த முறையில் விளக்கிக் கொண்டே இருந்தது. இதயத்தில் உண்மையைப் பதித்து விட்டால் அது எத்தனையோ வர்ண ரேகைகளை வீசிக்கொண்டிருக்கும் என்னும் உண்மை பால சரஸ்வதியின் அபிநயத்தில் தெரிய முடியும்.

ஜெயம்மாளுக்கு உடல்நலம் இல்லைதான். ஆனாலும் விட்டு விட்டுப் பாடிய பாட்டு அற்புதமான உணர்ச்சி பாவங்களை வெளியிட்டன. மனசில் நிற்கக் கூடிய சங்கீதமாக இருந்தது. High Art.

ஆனால் இந்தப் பாட்டையும் அபிநயத்தையும் அனுபவிப்பார்தான் இல்லை.

Benighted Madrasதானே. எங்கள் கூட்டம் அபாரமாய் அனுபவித்தது.''

இது ஒரு கடிதம். மறுநாளே, அதாவது 8–1–50 அன்று மறுபடியும் எழுதுகிறார்.

மீ. ப. சோமு

வேலம்மாள் (மகராஜன் அவர்களின் தமக்கையார்) அவர்களுக்கு:

இங்கே சங்கீதம், நடனம், பாட்டுக் கச்சேரிகள் எல்லாமாகச் சேர்ந்து அமர்க்களம் பண்ணி விட்டன.

கண்காட்சி என்று ஒன்று நடத்துகிறார்கள். அதற்குத் தினமும் 40,000 பேர் ஆடவர், பெண்டிர், குழந்தைகளாகப் போகிறார்கள். உலகம் என்ன இப்படி நெருக்கடியாய் இருக்கிறது என்று திகைக்க வேண்டியிருக்கிறது.

தமிழ் என்று ஒன்று இருக்கிறது. அரிய பண்பாட்டையும் ஆனந்தத்தையும் கொண்டதாய் இருக்கிறது என்று ஞாபகம் யாருக்காவது வருகிறதோ, இல்லை.

ஆனாலும் ஒரு திருப்தி. எம்.எஸ். சங்கீதம் ராதாவின் நடனம், பாலசரஸ்வதியின் அபிநயம், இந்த மூன்றும் அபூர்வமான அழகு வாய்ந்ததாய் இருந்தன.

உண்மையில் தமிழர்களின் உயர்ந்த பண்பாட்டை எடுத்துக் காட்டின. கேட்டுப் பார்த்து அனுபவித்தவர்களுக்கு 1949ம் வருஷம் மங்களகரமாய் முடிந்தது. திருப்தி என்று சொல்லும்படியாய் இருந்தன.

இத்தனை கோலாகலங்களுக்குள்ளும் என்னுடைய உள்ளத்தில் தமிழ்ப் பாடல்கள் ரீங்காரம் செய்து கொண்டிருந்தன. அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், பட்டினத்தார் இத்தனை பேரும் பாடிக் கொண்டுதான் இருந்தார்கள்.


''அத்தனை, முப்பத்து
முக்கோடி தேவர்க்(கு)
அதிபதியை,
நித்தனை, அம்மை
சிவகாம சுந்தரி
நேசனை, எம்
கர்த்தனை, பொன்னம்
பலத்தாடும் ஐயனைக்
காணக்கண் கள்
எத்தனை கோடி
யுகமாகத் தவங்கள்
இயற்றின வோ.''

பட்டினத்தார், நடராஜ மூர்த்தியில் காண வேண்டிய அற்புதக் கலையை எப்படி அனுபவித்திருக்கிறார் பாருங்கள். தமிழ்தான் அந்தக் கலை அனுபவத்தை எடுத்துச் சொல்ல முடியும்போல் இருக்கிறது. அற்புதமான பாடல், அற்புதமான தமிழ் நம் உள்ளத்தை விட்டு எப்படிப் போக விடலாம்? கருத்தும் பொருளும் உருவமும் சேர்ந்து புதிய ஓர் அனுபவத்தை அல்லவா கொடுக்கிறது!

பாடல் நமக்குத் துணை செய்யும், பட்டினத்தில் இருந்தாலும் சரி, மலைமேல் இருந்தாலும் சரி.

தமிழ், தமிழ்தான்!


போர்ஹென்ஸ் ஃப்ளோரைடு
ஈறுகளையும் பற்களையும்
பாதுகாக்கிறது
Forhan's
சுவைமிக்கது
Forhan's
நுரை மிக்கது!
ஈறுகளுக்கு போர்ஹென்ஸ் பாதுகாப்பு
ஈறுகள் வலுவிழந்து மெத்
தென்று இருந்தால் ஆரோக்கிய
மான பற்களைகூட ஆட்டம் கண்டு
விழுந்துவிடும். போர்ஹென்ஸில்
உள்ள விசேஷ சேர்க்கைப் பொருள்
(அஸ்ட்ரிஞ்ஜண்ட்) ஈறுகளை
வலுப்படுத்தி ஈறு உபாதையை
எதிர்க்க உதவுகிறது.
பற்களுக்கு ஃப்ளோரைடு பாதுகாப்பு
சிறுவர்களுடைய பற்களின் எனாமலை
ஃப்ளோரைடு உறுதிப்படுத்துவதோடு
பற்களில் குழி விழுவதையும்
தடுக்கிறது. போர்ஹென்ஸிலுள்ள
ஃப்ளோரைடு பெரியவர்களுடைய
பற்களின் எனாமலில், பற்சொத்
தைக்குக் காரணமான கிருமிகளை
எதிர்க்கும் சக்தியை வலுப்
படுத்துகிறது.
ஃப்ளோரைடு அடங்கிய
போர்ஹென்ஸ்
ஈறுகள் பற்கள்
இரண்டையுமே
பாதுகாக்கிறது
ஈறுகளைப்
பாதுகாக்கிறது
Forhan's
பல்
சொத்தையைத்
தடுக்கிறது
266 F-172 TAM
Regd. T.M: Geoffrey Manners & Co. Ltd


கல்கி

Kalki Calendar 1982

JANUARY

SUN	MON	TUE	WED	THU	FRI	SAT
31					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

FEBRUARY

SUN	MON	TUE	WED	THU	FRI	SAT
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28						

MARCH

SUN	MON	TUE	WED	THU	FRI	SAT
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30	31			

APRIL

SUN	MON	TUE	WED	THU	FRI	SAT
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	

MAY

SUN	MON	TUE	WED	THU	FRI	SAT
30	31					1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

JUNE

SUN	MON	TUE	WED	THU	FRI	SAT
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30			

JULY

SUN	MON	TUE	WED	THU	FRI	SAT
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

AUGUST

SUN	MON	TUE	WED	THU	FRI	SAT
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31				

SEPTEMBER

SUN	MON	TUE	WED	THU	FRI	SAT
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30		

OCTOBER

SUN	MON	TUE	WED	THU	FRI	SAT
31					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

NOVEMBER

SUN	MON	TUE	WED	THU	FRI	SAT
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30				

DECEMBER

SUN	MON	TUE	WED	THU	FRI	SAT
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30	31	

கடுகு பதில்கள்

✠ பழங்கானத்தம் பாலாஜீ, மதுரை

கே. பதில் சொல்வதில் சிறந்தவர் என்று யாரைக் கருதுகிறீர்?

ப: என் மனைவியை! அவள் பதில் சொல்வதில் மட்டுமல்ல, பதிலுக்குப் பதில் சொல்லு வதிலும் எக்ஸ்பர்ட்!

✠ வி. சகுியா, கோவை 5

கே. உண்மை பேசுவது எளிதா? பொய் பேசுவது எளிதா?

ப: உண்மை பேசுவதுதான் எளிது. நடந் ததை, பார்த்ததை, கேட்டதை, தெரிந் ததை அப்படியே சொல்வதில் என்ன சிரமம்? பொய் பேசவதென்றால் கற்பனை, யோசனை, குயுக்தி போன்ற பல திற மைகள் தேவைப்படுகின்றன. நமது கெட் டிக்காரத்தனத்துக்குச் சவால் விடுபவை இவை. இருந்தாலும் பலர் எளிமையான காரியத்தைச் செய்யச் சிரமப்படுகிறார்கள்; கடினமான காரியத்தை அநாயாசமாகச் செய்து விடுகிறார்கள்!

✠ ஆர். ஹேமலதா, லால்குடி

கே. உங்கள் வீட்டிற்கு யாராவது முக்கிய புள்ளிகள் வந்து இருக்கிறார்களா?


ப: பல பிரமுகர்கள் வந்திருக்கிறார்கள். லிஸ்டே போடுவேன். போகட்டும், ஒரே ஒரு நபரைக் கிசுகிசுவாகக் குறிப்பிடு கிறேன். அவர் இளம் கதாநாயகி. எல் லாப் பத்திரிகைகளையும் அந்த நடிகைப் பித்துப் பிடித்திருக்கிறது. அப்புறம் அவரு டைய சித்தப்பா... அவ்வளவுதான் சொல் வேன்.

✠ நாகுவேலன், மதுரை 16

கே. நம் நாட்டில் ஹீரோ வொர்ஷிப் அதிகமாக இருப்பதைப் பற்றி...

ப: ஏனய்யா வயிற்றெரிச்சலைக் கிளப்பி விடு கிறீர்? என்னை வழிபடுகிற ஒரு ஆளைக் கூடக் காணோம்.





✠ ஜி. வேதாசலம், பண்ருட்டி

கே. கடுகு பதிலுக்கு அனுப்பிய கேள்வி ஒன்றில் தான் ப்ளஸ்டூ படிக்கும் மாணவன் என்று ஒருவர் எழுதி இருந்தார். இவரே குங்குமம் இதழ் ஆசிரியர் கடிதத்தில் தான் சமீபத்தில் திருமண மானவன் என்று குறிப்பிட்டிருந்தார்: பத்திரி கையில் தன் பெயர் வரவேண்டும் என்பதற்காக இப்படியெல்லாம் எழுதலாமா?

ப: நீங்கள் அனுப்பிய கட்டிங்குகளைப் பார்த் தேன். இப்படிச் செய்பவர்களால்தான் ஆசிரியர் கடிதங்கள் பகுதிக்கு மதிப்பே குறைந்து வருகிறது.

✠ ஆர். கோபாலன், திருச்சி 6

கே. நாலுபேரிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்று சொல்கிறார்களே, யார் அந்த நாலுபேர்?

ப: ஒருவன் இறந்ததும் அவன் சடலத்தைத் தூக்கிச் செல்லும் நாலு பேரை இது குறிக்கும் என்று கூறுபவர்களும் உண்டு. ''நல்ல மனிதன் இறந்து விட்டானே'' என்று அவர்கள் மனமாரக் கூறவேண்டும். அவன் கனத்தைச் சுமந்து செல்லும் போதும்.

✠ கே. கே. பாலசுப்பிரமணியன், கல்கத்தா 26

கே. ஏதாவது செக்ஸ் ஜோக் சொல்லுங்களேன்?

ப: ஆகா! இதோ சொல்லுகிறேன். ஒரு பெரிய தனவந்தர் பல தர்ம ஸ்தாபனங் களுக்கு நன்கொடைகள் அனுப்பினார்— செக்குகளாக. ஆனால் எதிலும் கையெழுத் திடவில்லை. அதற்கு அவர் சொன்ன விளக் கம்: என் பெயரைப் போட்டு விளம்பரப் படுத்திக்கொள்ள எனக்குப் பிடிக்காது!

✠ ராமராஜன், ராயபுரம்

கே. லட்சியங்களை எட்டிப் பிடிக்கவே முடியாதா?


ப: லட்சியங்கள் வழிகாட்டி மாதிரி. வானத் தில் உள்ள நட்சத்திரங்களைப் பார்த்துக் கப்பலைச் செலுத்துவதுபோல் லட்சியங்கள் நம்மைச் சரியான பாதையில் செல்ல வழி வகுக்கின்றன.

பரிசு பெறுபவர் :

ஜி. வேதாசலம்
7, கந்தசாமி தெரு
பண்ருட்டி-607 106

போட்டிக் கதை-16

வானத்தைத் தொடாது



பலமுறை 'அட்டெம்ப்ட்' செய்து டிகிரி வாங்கிய டாக்டராக இருக்க வேண்டும். வெறிச்சிட்ட பெஞ்சுகளை மின்விசிறிக் காற்று குளிப்பாட்டிக் கொண்டிருந்தது. வெளிறிப் போன டிஸ்டம்பர் டாக்டரின் வசதியைப் பறைசாற்ற ராஜாராமன் சட்டைப் பையில் ஐந்து ரூபாய் இருக்கிறதா என்று தொட்டுப் பார்த்தபடி முற்றத்தைக் கடந்து டாக்டரின் அறை வாயிலிலிருந்த ஸ்விங் டோரில் கை வைக்க அது அசிங்கமாக 'ங்ஙீ' என்று இரீச்சிட்டு வழி விட்டது. உள்ளே மேஜை விளிம்பில் தாளமிட்டபடி ஹரால்ட் ராபின்ஸ் படித்துக் கொண்டிருந்த டாக்டர் சிவசங்கரன் நிமிர்ந்து சிநேக பாவத்துடன் ராஜாராமனைப் பார்த்தார்.

ராஜாராமன் பையிலிருந்த ஐந்து ரூபாய்த் தாளை உள்ளங்கையில் சுருட்டி வைத்துக் கொண்டு தயக்கத்துடன் டாக்டர் காட்டிய மர ஸ்டூலில் அமர்ந்தான்.

''என்ன உடம்புக்கு?'' — ஸ்டெத்தைக் காதில் மாட்டியபடி கேட்டார் சிவசங்கரன்.

''உடம்புக்கு ஒண்ணும் இல்லே... மெடிகல் சர்ட்டிபிகேட் ஒண்ணு வேணும்.... ஒரு மாசம் லீவு போடணும்.''

''படிக்கிறீங்களா?''

''ஆமாம். பி. காம் தேர்ட் இயர்... ஈவினிங் காலேஜ்...

''எங்க வொர்க் பண்றீங்க..? கவர்ன்மெண்டா?''

சொன்னான்.

டாக்டரின் பேனா லெட்டர்ஹெட்டில் ஓடி எல்டிஸியாகப்பட்ட ராஜாராமன் ஈயோஸினுபிலியாவில் அவதிப்படுவதால் ஒரு மாதம் ஓய்வில் இருந்தே ஆகவேண்டும் என அறுதியிட்டுக் கூறியது.

ராஜாராமன் உள்ளங்கையில் இருந்த ஐந்து ரூபாய்த் தாளை சரத்துடன் நீட்டினான்.

டாக்டர் பெற்றுக் கொண்டபடி ''ஹி .. ஹி... இதுக்கெல்லாம் நான் ஏழு ரூபா வாங்கறது'' என்றார் அசட்டுச் சிரிப்புடன்.

காலியாய்க் கிடந்த மேஜை டிராயரில் ரூபாயைப் போட்டபடி, ''டூட்டி ஜாயின் பண்ணறப்போ ஃபிட்னஸ் சர்டிபிகேட் வாங்கிக்கங்க... பாலன்ஸ் ரெண்டு ரூபாயை அப்பக் கொடுத்தாப் போதும்'' என்றார்.

ராஜாராமன் மெடிகல் சர்ட்டிபிகேட்டை நான்காய் மடித்துப் போட்டுக் கொண்டு ''சரியான பிச்சாத்து'' என்று டாக்டரை வைதுகொண்டே கிளம்ப, டாக்டர் ராஜாராமன் இரண்டு ரூபாய் ட்யூவை டைரியில் குறித்துக் கொண்டு நாவலை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார்.

இந்த முறை எப்படியாவது பாஸ் செய்து பட்டதாரியாகி விட்டால் கிடைக்கப் போகும் கூடுதல் சம்பளத்தை நினைத்தாலே தெம்பாயிருந்தது ராஜாராமனுக்கு. எஸ்டாபிளிஷ்மெண்ட் கருணாகரனைக் ''கவனித்து'' லீவ் சாங்ஷன் ஆவதற்கான ஏற்பாட்டையும் செய்தாயிற்று. நாள் முழுக்க நச்சு நச்சென்று எல்டிஸிக்களைப் பந்தாடிக்கொண்டிருக்கும் மேலதிகாரிகளிடமிருந்து ஒரே மாதம் விலகியிருந்து படித்தாலே போதுமென்ற நம்பிக்கையுடன் இனி நிம்மதியாகப் படிப்பதற்குச் செய்ய வேண்டிய காரியங்களை நினைத்துப் பார்த்தான். கல்லூரிக்குக் கடைசியாகக் கட்ட வேண்டிய ஃபீஸைக் கட்டியாகி விட்டது. வீட்டுக்குத் தேவையான ஒரு மாத மளிகைச் சாமான்களை வாங்கிப் போட்டாகி விட்டது. வேளா வேளைக்குச் சாப்பிட்டுவிட்டு நிம்மதியாகப் படித்துப் பரீட்சை எழுத வேண்டியதுதான். சில்லறைச் செலவுக்குக் கையில் ஒரு எழுபத்தெட்டு ரூபாய் இருக்கிறது... போதும்... கால்கள் வீட்டை அடைய நினைவுகள் முற்றுப்புள்ளியை வைத்தன.

தனது ஒரு மாத மெடிகல் லீவை மனைவியிடம் அதிகாரபூர்வமாக அறிவித்துவிட்டு நேரத்தை வீணாக்காமல் அன்று மாலையில் வீட்டில் படிக்க உட்கார்ந்தான் ராஜா

ராமன். நுழைந்ததும் ஒரு சமையலறை. அடுத்து ஓர் அறை என்ற ரீதியில் வரிசையாகக் கட்டப்பட்ட ஒண்டுக் குடித்தனங்கள் அடங்கிய வீடு அது.

முதல் குடித்தனத்தின் அருகிலிருந்த குழாயின் லொட் லொட்டென்ற ஒலியும், மூன்றாவது வீட்டின் விவித பாரதியும், எங்கிருந்தோ வரும் மீன் வறுக்கும் வாசனையும், முற்றத்தில் அமர்ந்தபடி வம்பளக்கும் பெண்களின் தொணதொணப்பும் அவனை வெகுவாக 'டைவர்ட்' செய்ய, மிகப் பிரயாசையுடன் தண்ணீருக்குள் ரப்பர் பந்தை அமுக்க முயல்பவனைப் போல் மனத்தைப் பாடத்தில் அமிழ்த்த முயன்றான்.

அதற்குள் மனைவியிடமிருந்து வந்த குரல் அவனை நிமிர வைத்தது.

''என்னங்க.... போய் மளிகைக் கடைல பால் டின் வாங்கிட்டு வந்திருங்களேன்... ராத்திரி குழந்தை முழிச்சு அழுதான்னா புகட்டறதுக்குக்கூட இல்லே.'' சொன்னதை நிரூபிப்பவள் போல் காலி டின்னின் அடிபாகத்தைச் சுரண்டினாள் அவள்.

அர்த்த ராத்திரியில் அழும் குழந்தையைச் சமாளிக்கும் வேலை வந்து விடுமென்பதால் மௌனியாகி, பாடப் புத்தகம் அவனைப் பரிதாபமாகப் பார்க்க, சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பினான். மளிகைக் கடை நாடார், ''ஸார்... இந்த மாதிரி நடு நடுல வாங்கறதுக்கு அப்பப்ப காசு குடுத்திட்டா நல்லது... கணக்கு விட்டுப்போவுது'' என்று சொல்லிவிட ராஜாராமனின் பையிலிருந்து ஒரு பதினாறு தொண்ணூற்றைந்து பிரிந்து போனது.

ராஜாராமன் பால் டின்னை மனைவியிடம் தந்துவிட்டு மீண்டும் புத்தகத்தைத் தொட முயல்கையில் ஒன்பது மணியாகியிருந்தது. அடுத்த பத்து நிமிடத்துக்குள், ''சாப்புட்டுட்டுப் படிக்க உக்காருங்களேன்.. அப்புறம் ஆறிப்போயிடும்'' என்ற மனைவியின் குரலில் அவன்மீதிருந்த அக்கறையை விட அவள் படுக்க வேண்டும் என்ற ஆசைதான் தொனித்ததாகப் பட்டது ராஜாராமனுக்கு. முணுமுணுத்தபடி புத்தகத்தை 'ஓரங்'கட்டிவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தான் ராஜாராமன்.

''ஒரு மாசம் லீவு போட்டிருக்கேன். பரீட்சையில பாஸ் பண்ணினாக் கொஞ்சம் கூடச் சம்பளம் வரும். தொந்தரவு பண்ணாம என்னைப் படிக்க விடணும்'' என்றான்.

பதினொரு மணிக்குப் 'பக்'கென்று விளக்கு அணைந்தது. தயாராயிருந்த மண்ணெண்ணெய்விளக்கைக் கொளுத்தி வைத்துக் கொண்டு முகத்தில் வழிந்த வேர்வையைத் துடைத்தபடி பேங்க் ஆர்கனேசேஷனில் ராஜாராமன் புரண்டு கொண்டிருந்தான். கடந்த இரண்டு மணி நேரமாக உட்கார்ந்து கொண்டே படித்ததில் இடுப்புக் கடுத்தது. சிமினியின் அனல் முகத்தில் வியர்வையைக் கோக்க, கண்கள் தள்ளாடிக் கொண்டிருந்தன. ''போய்ப் படேன்'' ''போய்ப் படேன்'' என்று ஏதோ ஒன்று உந்த ''இன்னும் பரீட்சைக்கு ஒரு மாசம் இருக்கே'' என்று யாரோ தூபம் போட்டார்கள். தாக்குப் பிடிக்க முடியாமல் ராஜாராமன் புத்தகத்தை மடித்து அலமாரியில் வைத்தான். விளக்குத்திரியைச்சின்னதாக்குகையில் அவன் நிழல் சுவரில் பூதாகாரமாக விழக் கட்டிலில் போய் விழுந்தான். மனைவியின் அரவணைப்பில் கண்ணயர்ந்தான்.

அலுவலகத்துக்குப் போக வேண்டியதில்லை என்ற உணர்வும், இரவு ''கண் விழித்த'' அசதியும் ராஜாராமனை நேரம் கழித்து எழவைத்தன. மடமடவெனக் காலைக் கடன்களை முடித்துவிட்டு இதுவரை பரிச்சயமே இல்லாத பகல் நேரப் படிப்புக்கு ஆயத்தமாய்க் கட்டிலிலேயே சாய்ந்தபடி புத்தகத்தைப் பிரித்தான். நேரம் ஆக ஆக சமையலறையில் பாயத் தொடங்கியிருந்த வெய்யில் உள் அறைக்கும் வந்து அனல் கரங்களால் ராஜாராமனை அணைக்க முயல அவனால் பாடத்துடன் ஒன்ற முடியவில்லை. சமைய



வானங்கள்

பிரபா நடராஜன்

லறைப் புகை மண்டலம் அவனை வெளியே துரத்தியது.

கொடியில் கிடந்த சட்டையை மாட்டிய படி புத்தகத்துடன் கிளம்பினான். வீட்டுக்குச் சற்றுத் தூரத்தில் பூங்கா ஒன்று இருப்பது ராஜாராமனின் நினைவுக்கு வந்தது. வேளா வேளைக்குச் சாப்பிட்டு விட்டு நிம்மதியாக அங்கே போய்ப் படிக்க உட்கார்ந்துவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்தபடி நடந்தான். நகரசபை கண்காணிப்பிலுள்ள பூங்கா அது.

புத்தகத்தை விரித்துக் கால் மணி நேரம் கூட ஆகியிருக்காது. அதற்குள் 'பொட்' டென்று ரப்பர் பந்தொன்று ராஜாராமனின் நெற்றிப்பொட்டில் தாக்கி மடியில் விழுந்தது. அசாத்தியக் கோபத்துடன் ராஜாராமன் பந்தை எடுத்தபடிசுற்றுமுற்றும் பார்த்தான். பூங்காவின் பின்பக்கச் சேரியின் அரைடிக்கட் வாரிசுகள் அவனைச் சூழ, வாய்ச் சண்டை முற்றவே, அவர்களிடமிருந்து தப்ப வெளியேறவேண்டிய நிர்ப்பந்தம்!

வீட்டை அடைந்த ராஜாராமனுக்கு அவனுடைய அலுவலகத்திலிருந்து அழைப்பு ஒன்று காத்திருந்தது. இவன் சம்பந்தப்பட்ட ஏதோ ஒரு ஃபைல் விஷயத்தில் சிக்கல்! மேலதிகாரி வரச் சொல்லியிருக்கிறார். ராஜாராமனுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது.

முகத்தில் தாடியும், துவைத்த வேட்டி, சட்டையுமாக ஆஸ்பத்திரி கோலத்தில் ராஜாராமன் ஆபீசில் நுழைகையில் எல்லோரும் அவனைப் பரிதாபமாகப் பார்த்தார்கள். சூப்பரின்டென்டெண்ட் அவனை ஏ.ஓ.அறைக்கு வழி காட்டினார். ராஜாராமன் ஏ.ஓ.வின் அறையை அடைந்து ஸ்விங் டோரை மெல்ல விலக்கிச் சன்னமான குரலில் ''ஸார்!'' என்றான். உயர்த்தியிருந்த ஃபைலுக்கு மேலே கண்களைஉயர்த்தி ஏ.ஓ தலையை நிமிர்ந்தார்.

''யார்யா நீ?''

''நான் அக்கவுண்ட்ஸ் செக்ஷன்ல எல்.டி.ஸி. தான் பாஸ் பண்ணின பில்லில 'டிஸ்கஸ்'னு போட்டு அனுப்பிச்சிட்டிங்களாம். சூப்பிரண்டெண்டெண்ட் அனுப்பிச்சார்...''

''ஏய்யா பில்லை பாஸ் பண்றதுக்கு முன்னாடி அதுக்கு ஏற்கனவே பேமண்ட் ஆகியிருக்கான்னு பைனான்ஸ் செக்ஷனுக்கு 'த்ரு' போட்டு அனுப்பறதில்லையா... ஏற்கனவே பேமண்ட் ஆன பில் அது... நீர் கேஷ் டிபார்ட்மெண்டுக்கு டைரக்ட் பேமன்டுக்குஅனுப்பியிருக்கிறீர். நல்லவேளையா நான் செக்குக்குக் கையெழுத்துப் போடும்போது கண்டு பிடிச்சேன்... என்னய்யா நீரெல்லாம் செய்றீர்... நாளைக்கு ஆடிட்லயும், ஏ.ஜீஸ்லயும் நான்தான் எக்ஸ்ப்ளனேஷன் கொடுத்தாகணும். இனிமேலாவது கவனமாயிரும்...''

''ஸாரி... ஸார்... இனிமே...'' கிளம்ப எத்தனித்தான்.

''கொஞ்சம் இரும்... உமக்கு ஒரு மெமோ ட்ராப்ட் பண்ணியிருக்கேன். நீரே டைப் பண்ணிக் கொண்டு வாரும். கையெழுத்துப் போட்டுத் தரேன். கொண்டு போம்... அப்பத்தான் உமக்கெல்லாம் புத்தி—வரும்.''

ட்ராப்ட் மெமோவை வாங்கியபடி வெளி வந்த ராஜாராமனின் மனத்தில் இருந்ததெல்லாம் வாயில் வந்திருந்தால் ரொம்பவும் ரசாபாசமாயிருக்கும்.

சீட்டில் உட்கார்ந்து தனக்கான மெமோவைத் தானே டைப் அடித்து ஏ.ஓ.விடம் கையெழுத்து வாங்கிய பின் வீட்டுக்குத் திரும்புகையில், அவனுடைய மனத்தைப் போலவே வீடும் இருண்டு போயிருந்தது. பவர் கட்.

மர்ம மரணமும் மறுபிறவியும்



துப்பறியும் நிபுணன்பிரெளனிங் துப்புத் துலக்குகையில் கொல்லப்படுகிறான். சொர்க்கத்துக்குச் சென்ற அவன் தனது மரணத்துக்குக் காரணமானவர்களைக் கண்டு பிடிக்க மறுபிறவி எடுத்து வருகிறான். ஒரு நாயாக! இப்போது அவன் பெயர் பென்ஜி.

ஜாக்கி — அவன் காதலி, பென்ஜி தன்னிடம் காட்டும் அபரிமித அன்பைப் புரிந்து கொள்ள முடியாமல் தவிப்பதில் வியப்பென்ன?

கவர்ச்சி, காதல், மர்மம், நகைச்சுவை எல்லாவற்றையும் சரியான அளவில் குழைந்து கொடுக்கும் திரைப்படம் Oh! Heavenly Dog.

நகைச்சுவை நடிகர் செவ்வி சேஸ், கவர்ச்சிக் கன்னி ஜோன் ஸெய்மூர், போதாக்குறைக்கு பென்ஜி! ''நான் கதாநாயகனின் மறு பிறவிதானே அதனால் செவ்வி சேஸ் அமரும் நட்சத்திர நாற்காலிதான் எனக்கும் ஆசனம்!'' என்று ஸெட்டிலே சொல்லிவிட்டதாம் பென்ஜி.

- சலன்

அபர்ணா நாயுடு எழுதும்

நினைவெல்லாம் நித்யா

சித்திரத் தொடர்

ஜனவரி-17ம் பொங்கல்-கிரிக்கெட் சிறப்பிதழில் ஆரம்பம்



வீட்டுக்காரர் கரண்ட் பில் கட்டாத தவறின் எதிரொலி, ராஜாராமனின்படிப்பை ஒரு வார காலம் வெகுவாகப் பாதித்துவிட, பகல் நேரப் படிப்பு வேர்வையிலேயே ஆவியாகிவிட, ஒவ்வொரு முறை படிக்கும் போதும், புத்தகத்தை முதன் முறையாகப் பார்ப்பது போன்ற உணர்ச்சி தாக்க ராஜாராமன் தான் பாஸ் பண்ணினுல் கூடுதலாகக் கிடைக்கப்போகும் முப்பத்தேழு ரூபாய் அறுபது காசே தனது வாழ்க்கை லட்சியம் போல யோகியைப் போல் புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்த அசௌகரியமான ஒரு காலை. அவன் வீட்டு முன் ஒரு டாக்ஸி வந்து நின்றது. வீட்டு ஒண்டுக் குடித்தனங்களின் காலைக் காட்சிகள் துரிதமாக அரங்கேறிக் கொண்டிருந்த வேளையில் ராஜாராமனின் மைத்துனனுன சந்தானம் தனது குடும்பத்துடன் இறங்கினுன். டாக்ஸி மீட்டரைப் பார்த்தவன், பர்ஸை விரித்தபடி. ''அக்கா... எங்கிட்ட அம்பது ரூபா நோட்டா இருக்கு... அத்தான்கிட்ட ஒரு எட்டு ரூபா வாங்கிட்டு வா... அப்புறமாத் தரேன்'' என்றபடி டிக்கியில் தன் தலையை நுழைத்தான்.

ராஜாராமனின் வீட்டுக் கடுகு டப்பாவில் கிடந்த குறைந்தபட்ச ரூபாய் நோட்டுக்கள் மிகக் குறைந்தபட்சமாயின. அதையும் தொடர்ந்து இருந்த மூன்று நாட்களில் துவம்சம் செய்துவிட்டு சந்தானத்தின் குடும்பம் ரயில் ஏறிய மறுதினமே ராஜாராமனின் பரீட்சை தினம் வந்திறங்கியது.

பரீட்சை தினம். நிமிடத்துக்கு இத்தனை பக்கங்கள் என்ற விகிதத்தில் பக்கங்களைக் கொறித்துவிட்டு, கையிலிருந்த் கடைசி இரண்டு ரூபாயை (பஸ்ஸுக்கென வைத்திருந்தது) மனைவியிடம் செலவுக்குத் தந்துவிட்டு, சைக்கிளில் விறுவிறுக்க மிதித்து, வழியில் பஞ்சரான டயருக்கு ஒட்டுப் போடக் காசின்றி சைக்கிளை வேகு வேகென்று மதிய வெயிலில் சாலையில் தள்ளிக் கொண்டு கல்லூரியை அடைந்தான்.

வரிசை வரிசையான அறைகளில் அவனுடைய அறையைக் கண்டுபிடித்து, டெஸ்க் வரிசைகளில் புகுந்து சீட்டில் அமர்ந்து ஆன்ஸர் ஷீட்டை வாங்கி, பேனவைத் திறந்து நம்பரை எழுத முயல அது குபுக்கெனக் கக்கிப் பேப்பரைப் பாழடிக்க ராஜாராமன் அதிர்ந்தான். வியர்வைப் பூமியாக இருந்த உள்ளங்கை பேப்பரில் பட்டு இங்க் கறையைப் பரப்பி நாசமாக்க, அவன் அருகில் கேள்வித் தாள் படபடத்தது.

நெஞ்சில் ஏதோ ஒன்று பீடிப்பதை உணர்ந்த ராஜாராமன் மெல்ல வினுத் தாளில் பார்வையைப் பாய்ச்சினுன். செக்ஷன் ஏ, பி, ஸி, என்று மாறி மாறிக் கேள்விகளைக் கண்கள் பவனிவர அவற்றின் விடைகளுக்கும், தனக்கும் உள்ள தூரம் திடீரெனப் பூதாகாரமாக விரிந்து செல்வது போன்ற பிரமை ஆட்கொள்ள அவன் மனத்தில் பூங்காவின் பொறுக்கிகளும், ஏ.ஓ.வும், சந்தானத்தின் குடும்பத்தினரும் இருட்டடிப்புச் செய்த வீட்டுக்காரரும், அடுத்த மாதம் விழப்போகும் பட்ஜெட் துண்டும், சுழன்றுட ராஜாராமன் இருக்கையினின்று சரிந்து விழுந்து நினைவிழ...ந்தா...ன்...!

உள்ளங்கையில் ஐந்து ரூபாயை வைத்தபடி முற்றத்தைக் கடந்து டாக்டரின் அறை வாயிலிருந்த ஸ்விங் டோரில் ராஜாராமன் கைவைக்க அது ''ங்வீ'' என்று அசிங்கமாகக் கிறீச்சிட்டு வழி விட்டது.

படித்துக் கொண்டிருந்த நாவலை மேஜையில் வைத்துவிட்டு டாக்டர், ''என்ன உடம்புக்கு?'' என்றூர்.

''ஒண்ணுமில்லை... மெடிகல் சர்டிபிகேட் ஒண்ணு வேணும்... ஒரு மாசம் லீவு போட'' என்றபடி ராஜாராமன் அங்கிருந்த மர ஸ்டூலில் அமர்ந்தான்.... மீண்டும்.. !

தானே வளர்ந்து பலன் தரும்!



5

மதன் சிரிப்பு ஓய்வதாகத் தெரியவில்லை. குலுங்கிக் கொண்டிருந்த அவனுடைய பையிலிருந்து ஒரு கவர் கீழே விழுந்தது.

முகேஷ் தன் பூட்ஸின் அடியில் அதைப் பத்திரப்படுத்தினான்.

அறைக்கு வந்ததும்—

மதனிடமிருந்து கீழே விழுந்த கவரைத் தன் பையிலிருந்து எடுத்தான். உடைக்கப்பட்டிருந்தது. திறந்தான். உள்ளே இருந்த தாளைப் படித்தான்.

'மதன்! ஏற்கனவே ஒரு கடிதம் உங்களுக்குப் போட்டிருந்தேன். ரூபா லீவு முடிந்ததும் வேலைக்கு இன்னும் வரவில்லை என்று. இப்போது அவளைக் காணோம் என்றொரு புதிய செய்தி கிடைத்துள்ளது. அவளை நீங்கள் என்ன செய்தீர்கள்? காதல் வெறியில் எதுவும் செய்வேன் என்று அன்று கத்தினீர்களே ரூபாவிடம்? என் காதலை இப்போதாவது நீங்கள் ஏற்றுக்கொள்வதாக எனக்கு எழுதினால் உங்களைப் பற்றிய ரூபா சம்பந்தமான அந்த இரவுச் சமாசாரத்தை நான் யாரிடமும் வெளியிட மாட்டேன்—

தங்கள் உமா'

அடடா! பார்த்தால் பசு போல் இருக்கிறாள் இந்த உமா! இவளுக்கு மதன்மீது ஒரு கண்ணா? 'என் காதலை ஏற்றுக்கொள், இல்லையேல், உன்னைக் காட்டிக்கொடுத்து விடுவேன்' என்பது போல் அல்லவா எழுதியிருக்கிறாள்?

தேவ் எவ்வளவோ தடுத்தும் கேட்காமல் தனது சென்னை முகவரியை அவனிடம் தந்து விட்டு, பெங்களூருக்குப் பயணமாகிவிட்டான் முகேஷ். நிறைய வேலைகள் காத்திருக்கின்றனவே?

அலுவலகம் முடிந்து திரும்பிக் கொண்டிருந்த உமா, தன் அறை வாசலில் முகேஷைச் சற்றும் எதிர்பார்க்கவேயில்லை!

''நீங்கள்.... நீங்கள்....'' தடுமாறினாள். பயத்தால் முகம் வெளிறிப் போனாள்.

''முதலில் கதவைத் திறவுங்கள் உமா!'' அமைதியாகச் சொன்னான் முகேஷ்.

உள்ளே நுழைந்ததும்—

''நான் யார்என்பது தெரிந்தும் சில முக்கியமான விஷயங்களை என்னிடம் மறைத்து விட்டீர்கள் உமா! ஆனாலும் உண்மை என்றேனும் ஒரு நாள் வெளிவந்துதான் தீரும். சொல்லுங்கள் — ரூபா ஊருக்குப் போவதற்கு முதல்நாள் மதன் அவளிடம் எப்படி நடந்து கொண்டார்?''


தயக்கம். மௌனம்.

''...ம்... சொல்லுங்கள். ஒரே வீட்டில் அடுத்தடுத்த அறையில் தங்கியுள்ள உங்களுக்கு நிச்சயம் எல்லா விஷயங்களும் தெரிந்துதான் இருக்க வேண்டும். மறைக்காதீர்கள்!''

இன்னும் உமாவிடமிருந்து ஒரு வார்த்தையும் வரவில்லை. அவளது பார்வையில் மிரட்சி.

ரூபா

அன்பிற்கினியவன்



''சொல்லுங்கள் உமா... ஹைதராபாத்துக்குச் சென்று மதனைச் சந்தித்து விட்டுத்தான் வந்திருக்கிறேன். நீங்கள் வாய் திறக்காதிருக்கும் ஒவ்வொரு நிமிடமும் ரூபாவின் மறைவுக்கு மதன்தான் முழு காரணம் என்பதை உறுதிப்படுத்துகிறது!''

வாய் திறந்தாள் உமா. ''இவ்வளவு தெரிந்த உங்களிடம் இனியும் நான் மறைப்பது சரியல்ல. மதன் அன்று இரவு ரூபாவைத் திடீரென்று பலவந்தப்படுத்தினார். ரூபா இணங்கவில்லை. 'மதன்! நீங்களா இப்படி?' என்றாள். 'நான் இன்றில்லாவிட்டாலும் என்றேனும் மணம் முடித்துக் கொள்ளப் போகிறவள்தானே?' என்றார் மதன். நான் எனது அறைக்குள் இருந்ததால் குரல்கள் தெளிவாக எனக்குக் கேட்டன. வேறு ஓசைகளும் கேட்டன.

'மணப்பதாவது?' என்று ரூபா சினந்தாள். 'பின்னே? நாம் காதலர்கள் இல்லையா? ப்ளீஸ் ரூபா!''

ரூபா திடீரென்று திணறும் சப்தம் கேட்டது. சேலை கலைக்கப்பட்டு, பாவாடை ரவிக்கையோடு கட்டிலில் தள்ளப்பட்டாள் ரூபா. மறு கணமே ஒரு வெறியுடன் அவள் மீது சாய்ந்தார் மதன். ரூபா போராடினாள். உதைத்துத் தள்ளினாள் மதனை. கோபமடைந்த மதன், 'ரூபா! விலகவா போகிறாய்? உன்னை எப்படிக் கவனிப்பதென்று எனக்குத் தெரியும். எதுவும் செய்வேன்' என்று கத்திவிட்டுப் போனார். நான் என் அறையிலிருந்து வெளியே ஓடி வந்தேன்.''

''உங்களை மதன் பார்த்தாரா?'' குறுக்கிட்டுக் கேட்டான் முகேஷ்.

''நிச்சயமாய், சத்தியமாய்ப் பார்த்தார்!''

''நீங்கள் அதன் பின் என்ன செய்தீர்கள்?''

''பயத்தாலும் அதிர்ச்சியாலும் ரூபா வெளிறிப்போய், வியர்த்து விறுவிறுத்து, மார்பு மேலே ஏறி இறங்க அழ ஆரம்பித்தாள். அவளைச் சமாதானப்படுத்தினேன்.''

''அச்சமயம் ரூபா ஏதாவது சொன்னாளா?''



'' 'முழுக்க முழுக்க மதனை நம்பினேன். அதனால் நெருங்கிப் பழகினேன். இன்று சபதம் கூறிவிட்டுப் போகிறானே... எப்படி இவனிடமிருந்து நான் தப்புவேன்? நான் லீவு முடிந்து திரும்பி இங்கு வருவேனா?'' என்று கூறினாள்.''

''நான் முதன் முதலில் உங்களைச் சந்தித்த போதே இந்த விவரங்களை என்னிடம் கூறியிருக்கலாமே?''

தயக்கம். மௌனம்.

''சொல்லுங்கள் உமா. இல்லாவிட்டால் உண்மைகளை மறைக்க முயற்சிசெய்த குற்றத்துக்காக உங்களுக்குத் தண்டனை கிடைக்க வழி இருக்கிறது. நீங்கள் மதனைக் காதலிக்கிறீர்கள் இல்லையா?''

உமா ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள்.

''ஆம். அவர்மீது எனக்கு அன்புதான். அடிக்கடி ரூபாவைச் சந்திக்க வந்ததால் எனக்கும் நல்ல பழக்கமாகி விட்டார். அவர் தனது நண்பர்தான் என்று ரூபாவிடமிருந்து தெரிந்து கொண்டதால், அவனைத் தேடி அவன் இல்லாத சமயம் அவர் இங்கு வந்த இரண்டு மூன்று சந்தர்ப்பங்களில் அவரிடம் நான் என் காதலைச் சொல்லி என்னை ஏற்றுக்கொள்ள வேண்டினேன். அவர் சம்மதிக்கவில்லை. என்றேனும் அவரை என் காதலை ஏற்க வைக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு. நான் உங்களிடம் தரும் தகவலால் மதனை நீங்கள் குற்றவாளியாக்கி

மீண்டும் சந்திப்போம்

● படம் ஒரு காபரேயுடன் ஆரம்பித்துத் தன் தரத்தை விளம்ப, சோதனை ஆரம்பம்.

ராஜா (விஜய்பாபு) வரிசையாய்த் திருமணம் செய்யும் சகோதரிகள் முதல் இரவில் மர்மமாய் இறக்கிறார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டரான மூன்றாவது சகோதரி (ரதிதேவி) துப்புத் துலக்கும் பொருட்டு அவனை மணக்கிறாள் (பெண் போலீஸார் கவனிக்க!) ஏதோ பெரிதாய்ச் சாதிக்கப் போகிறாள் என்று பார்த்தால், ஒரு பேய்தான் (ஒய். விஜயா) இத்தனைக்கும் காரணம் என்று தெரிகிறது. கிளைமாக்ஸில் அந்த கலர் நெகடிவ் பேய் ஒரு முகமூடியை மாட்டிக் கொண்டு ஏக ரகளை செய்து மனம் திருந்தி ஓடிவிடுகிறது. படத்தின் முடிவில் பேய் பயமுறுத்தியது பற்றாது என்று எம். ஏ. காஜா வேறு மீண்டும் சந்திப்போம் என்று பயமுறுத்துகிறார்.

ஏராளமான நடிகைகள். முந்தானையை நழுவ விடுவதில் காட்டிய அக்கறையை நடிப்பில் கொஞ்சமாவது காட்டியிருக்கலாம். விஜய்பாபுவுக்குப் பாராட்டுக்கள். முகத்தில் எந்தச் சலனமும் இல்லாமல் கான்க்ரீட் போல் வைத்துக் கொண்டு, இன்னும் ஹீரோவாய் நடிக்கிறாரே, அதற்குத்தான்!


விட்டலாச்சாரியா படம்கூட நம்பும்படி இருக்கும். எம்.ஏ. காஜாவின் வெற்றி ரகசியங்களின் ஒன்றான கருணியின் நகைச்சுவை இல்லாததால், அதற்குப் பதிலாக ரதிதேவியின் சண்டைக் காட்சிகள், பேயின் அட்டகாசங்கள், எப்போதோ பாடிய பாட்டை வில்லன்கள் ஞானதிருஷ்டியில் பதிவு செய்து ஒலிபரப்புவது என்று நகைச்சுவை முத்திரைகள் ஏராளம். ஒரு விநாடி கூடஓய்வில்லாமல் ஏதாவது ஒரு வாத்தியத்தைப்பயங்கரமாக அலற விடுவதுதான் ரீரிகார்டிங் என்றால் சங்கர் கணேஷ் 'ரசனையோடு' செய்திருக்கிறார்கள். மாவுக்கேற்ற பணியாரம்! நிறைய காட்சிகளில் ஃபோகஸ் செய்ய வேண்டும் என்ற கவலைகூட இல்லாமல் காமரா ஓடுகிறது.

படம்பார்த்த நண்பியிடம் விடை பெறும் போது ''மீண்டும் சந்திப்போம்'' என்றேன். அடிக்கவே வந்து விட்டாள்!

சிந்து-ஜீவா



உறுதி



■ காரணம், இந்தியாவிலே முதன் முதல் விட்ரஸ் எனுமல் செய்யப்பட்ட வாட்டர் ஹீட்டர். இத்தொழில் நுட்பம் அமெரிக்காவிலே 90% வாட்டர் ஹீட்டர்களில் உபயோகமாகிறது. இது உலோக அரித்தலைக் குறைக்கிறது.

■ காரணம், நீடித்து உழைக்கும் மின்சார ஹீட்டர் கொண்டது, மிதமான மின்சார உபயோகம் கொண்டது. தரமான தயாரிப்பு —பத்திரமானது.

மார்க்கெட்டிலுள்ள எந்த வாட்டர் ஹீட்டரோடும் ஒப்பிடுங்கள். இது ஈடிணையற்றதே!

புதிய
வீலைன்*
வாட்டர் ஹீட்டர்
வழங்குவோர் வோல்டாஸ்

* விட்ரலைனின் புதிய பெயர்



விற்பனைக்கு விடுப்போர்
வோல்டாஸ் லிமிடெட்
அப்ளையன்செஸ் டிவிஷன்

CASV 458 202 TAM

மொத்த விற்பனையாளர்கள் :
மெஸர்ஸ் S. G. R. ஏஜென்சீஸ் 46, ஜோஸியர் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-600 034 போன்: 810841 மெஸர்ஸ் AR. A. S. P. V. P. V. 115, ஓமலூர் ரோடு, சேலம்-636 007 போன்: 3127 மெஸர்ஸ் எல்வின் ஏஜென்சீஸ் 9-11, தெரு ஸ்டேடியம், வ.உ.சி. பூங்கா, கோயம்புத்தூர்-641 018 போன் : 36264

நீங்களே கணக்கிட்டு பாருங்கள்!

300 கிராம்
ரூ. 3·20

ஒரு சாதாரண டிட்டர்ஜண்ட் சலவை கட்டியை விட எடையோ இரண்டு மடங்கு விலையோ சிலகாசுகள்தான் அதிகம்

டோட்டல்

நீல டிட்டர்ஜண்ட் சலவை பார்



சுலபமான சலவைக்கு 5 சிறிய பகுதிகள்

உண்மையான முதல் டிட்டர்ஜண்ட் பார்!
டோட்டல், நீல டிட்டர்ஜண்ட் சலவைக் கட்டியின் அதிக வெண்மையையும், சலவை பார் சோப்பின் சௌகரியத்தையும் கொடுக்கிறது.

சிக்கனமாக சலவை செய்ய இதை 5 சிறிய பகுதிகளாக்கி உபயோகிக்கலாம்.
எடையோ இரண்டு மடங்கு
விலையோ சில காசுகள்தான் அதிகம்!
நீங்கள் 125 கிராம் எடையுள்ள சாதாரண டிட்டர்ஜண்ட் கட்டியை என்ன விலைக்கு வாங்குகிறீர்கள்?
300 கிராமின் விலை ரூ. 3.20 என்றால் 250 கிராம் டோட்டலின் விலை ரூ. 2.67 தான். அதாவது ஒரு சாதாரண சலவைக் கட்டியைவிட எடையோ இரண்டு மடங்கு, விலையோ சில காசுகள் தான் அதிகம்.

தமிழ் நாடு, பீஹார் மற்றும் ஆந்திர பிரதேஷ் மாநிலங்களில் மட்டும் கிடைக்கும்.

கர்நாடக சோப்ஸ் அண்டு டிட்டர்ஜெண்ட் லிமிடெட் அளிக்கும் தரமான தயாரிப்பு
விற்பனை செய்பவர்கள் : மைசூர் சேலஸ் இண்டர்நேஷனல் லிட்., பெங்களூர்.

MCA-TDB-51-Tam



விட்டால் நாங்கள் எப்படி இணைவது? மேலும் தன்னைக் காட்டிக் கொடுத்து விட்டதாக என்மீது அவருக்குக் கோபமும் அதிகமாகி விடுமே!...இவைகளை யெல்லாம் மனத்தில் கொண்டுதான் நம் முதல் சந்திப்பிலேயே நான் அவரைப்பற்றி அதிகம் கூறவில்லை!''

அவனிடம் அதற்கு மேல் விவரம் கேட்க ஒன்றுமே இல்லை. சென்னைக்குத் திரும்பினான். உள்ளே நுழையும் போதே போன் அலறியது. எடுத்தான். ''முகேஷ் ஹியர்!''

''ஹாய் முகேஷ்! நான் விவேக். ஹைதராபாத்திலிருந்து வந்து விட்டாயா?''

''ஹைதராபாத்திலிருந்து பெங்களூர் பெங்களூரிலிருந்து இங்கு இன்று அதிகாலை தான் வந்தேன். முக்கியமான செய்திகள் கிடைத்தனவா?''

''ஆமாம். போனில் சொல்லக் கூடிய சமாசாரம் இல்லை. சற்று நேரத்தில் நானே அங்கு வருகிறேன். எங்கேயும் போய்விடாதே. குருசாமியின் வொர்க்ஷாப் டைரியைக் கடத்தியிருக்கிறேன். அதிலிருந்து எந்தெந்த தினங்களில் குருசாமி வொர்க்ஷாப்பை முழு நிர்வாகம் செய்திருக்கிறான் என்று அறிந்து கொள்ள முடிகிறது!''

''அது எதற்கு?''

''நிச்சயம் இந்தவிவரம் நமக்குத் தேவைப்படுமே. அந்தந் தினங்களிலெல்லாம் 'பர்னிச்சர் மார்ட்டுக்குப் பிரபு வரவில்லையென்றுதானே பொருள்!''

''ரைட்!'' ஆச்சரியத்துடன் சொன்னான் முகேஷ். ''கொண்டுவா.'' ஆவலுடன் காத்திருந்தான்.

அரை மணி நேரத்தில் வந்து சேர்ந்த விவேக், முகேஷிடம் சொன்ன விஷயம்:

அவ்வப்போது குருசாமியைக் 'கண்டுக்கிட்டதால்' மிகச் சுலபமாகவே அவன் விவேக்கின் வலைக்குள் அகப்பட்டு விட்டான். தலைமைத் தொழிலாளியாகிய அவனைத்தான் பிரபு நம்புவது வழக்கமாம். ரூபா பிரபுவின் வீட்டில் தங்கியிருந்த சமயம், நண்பனொருவனின் காரை இரவல் வாங்கிக் கொண்டு பிரபு தன் மனைவியையும் ரூபாவையும் பல இடங்களுக்கு அழைத்துச் சென்றிருக்கிறான். அச்சமயங்களில் எல்லாம் குருசாமிதான் தொழிற்கூடத்துக்கு முழுப் பொறுப்பு. பிரபு கண்ணியமும், கண்டிப்பும் கொண்டவன்.

குருசாமி சொன்னதில் ஒரு ருசிகரமான தகவல் ஒரு தாடிக்காரனைப் பற்றி. வெளி ஆள். அவன் யாரென்றும், பெயர் என்ன என்றும் தெரியாது. இதுவரை இருமுறை தொழிற் கூடத்துக்கு வந்து பிரபுவிடம் பேசிக் கொண்டிருந்திருக்கிறான்.

''ஒருமுறை பீரோக்கள் வகைகளுக்காக உள்ளூர்க் கம்பெனி கொடுத்த 'மூவாயிரம் ரூபாயையும் என் கண் முன்னாலேயே தனது மேசைக்குள் வைத்தார் முதலாளி. சற்று நேரத்தில் தாடிக்காரன் வந்தான். பிரபுவின் அறைக்குள் சென்று அவருடன் பேசினான். நான் அறைக்கு வெளியே வேலையிலிருந்தேன். தாடிக்காரன் வெளியேறிய அடுத்த கணத்திலேயே மரங்கள் வாங்கிய வகைக்காகத் தேவைப்பட்ட ரூபாய் இரண்டாயிரத்தைக் குறிப்பிட்ட மார்வாடிக்குக் கொடுக்க இன்றுதான் கடைசி நாள் என்று முதலாளிக்கு நினைவூட்டினேன். என் முன்னாலேயே ஏதோ ஒரு அவசரத்தில் மேசையைத் திறந்த அவர் உதட்டைப் பிதுக்கினார். 'பணம் இல்லை!' என்றார்.... எங்கே போயிற்று சற்று முன் அவரிடமிருந்து ரூபாய் மூவாயிரம்? மேசையின் சாவி அவரிடம் மட்டுமே உண்டு.'' என்றான் குருசாமி.

''தாடிக்காரன் முக்கியமானவன் என்று நினைக்கிறேன். அவன் எங்கிருக்கிறான் என்று நீ கண்டு பிடித்திருக்க வேண்டுமே?'' என்று அவசரப்பட்டான் முகேஷ்.

''வேறு வேலை? அதற்காக நான் யோசித்துக் கொண்டிருந்தபோது, எதிர்பாராதவிதமாக நேற்று அதே தாடி பிரபுவிடம் வந்து விட்டான். அவன் வெளியேறியபோது ஐயாவும் பின்தொடர்ந்தேன்....''

''குட்! எங்கிருக்கிறான்?''

''எனக்குத் தெரியும். உன் வருகைக்காகத்தான் காத்திருக்கிறேன். வா இருவருமாக அங்கு போவது. உபயோகமாயிருக்கும்!'' என்றான் விவேக். (தொடரும்)





இது ஒரு மாமிப் புதிர். அதாவது திரையில் வந்த மாமிகளை வைத்துக் கொண்டு ஒரு புதிர். உங்களால் முடிந்தால் பதில் சொல்லுங்கள். முடியாவிடில் அக்கம் பக்கத்திலுள்ள மாமிகளைக் கேட்டுப்பாருங்கள்

அவர்களுக்கும் தெரியவில்லை என்றால் இருக்கவே இருக்கிறது 63ம் பக்கம்.

1. இங்கே காணப்படும் மாமிகளைத் தவிர மற்றொரு பிரபலமாமி இங்கே காணோம்! அந்த மாமி யார்? அந்த நடிகை யார்? படம் எது?
2. செளகார் ஜானகி மாமியாகத் தோன்றி நடித்த படங்கள் இரண்டு. ஒன்று: எதிர் நீச்சல்'. மற்றொரு படம் எது?
3. இங்கே காணப்படும் ஆறு மாமிகளுள் ஒரு மாமி இன்னும் திரைக்கு வராதவர். அவர் யார்? அவர் மாமியாக நடித்து வெளிவராத படத்தின் பெயர் என்ன?
4. கே. ஆர். விஜயா எந்தப் படத்தில் இவ்வாறு மாமியாகத் தோன்றினார்? படத்தில் அவர் பெயர் என்ன?
5. இவர்களுள் காயத்ரி மாமி யார்? எந்தப் படத்தில் அவ்வாறு தோன்றினார்?
6. படத்தில் காணப்படுபவர்களுள் தேங்காய் சீனிவாசனுக்கு ஜோடியாக நடித்த மாமி யார்?
7. படத்தில் மற்றொரு நடிகைக்கு மடிசார் புடவை கட்டிவிட்ட நடிகை யார்? எந்த நடிகைக்கு அப்படிக் கட்டி விட்டார்? எந்தப் படத்தில்?
8. ஜி. சகுந்தலா மாமியாகத் தோன்றி நடித்த பிரபல நாடகம் எது?
9. ''அடுத்தாத்து அம்புஜத்தைப் பார்த்தேளா?'' எனப் பாடி நடித்த மாமியின் பெயர் என்ன? எந்தப் படத்தில் அவர் அப்படிப் பாடினார்?
10. மனோரமா 'அலமு' மாமியாகச் சிறிது நேரமே தோன்றிய படம் எது?
11. விதுபாலா இப்படி மாமியாகக் காட்சியளித்தது எந்தப் படத்தில்?
12. சுஜாதா மடிசார் புடவை கட்டிக் கொண்டு நடித்தது எந்தப் படத்தில்?

தயாரிப்பு: **திரைஞானி**









● ராஜஸ்தான் மாநில லாட்டரிப் பிரிவை அந்த மாநில உயர்நீதி மன்ற நீதிபதி ஜி.எம். லோதா கடுமையாகக் கண்டித்துள்ளார்.

ஒழுக்கத்தைக் குலைத்தும் மதுவிலக்கை ரத்து செய்தும், பரிசுக் குலுக்கல் நடத்தியும் மாநில வருவாயை அதிகரிப்பது ஒழுக்கம், நேர்மை ஆகியவற்றில் அக்கறை கொண்ட எம்.எல்.ஏ.க்கள் கவலைப்பட வேண்டிய விஷயம். லாட்டரி போல் விபசாரத்தையும் அரசுக்கு வருவாயைத் தரும் என்று வியாபாரம் ஆக்கும் நிலைகூட வரக்கூடும் என்றுவேதனையுடன் எச்சரித்துள்ளார் நீதிபதி. அவர் கொதித்துக் குமுறிக் கண்டித்தது போல் எல்லா மாநில நீதிபதிகளும் தங்கள் உள்ளக் கிடக்கையைத் துணிவுடன் வெளிப்படுத்தினால் நிர்வாகத்துறை தனது அதிகாரத்தைத் தான் தோன்றித்தனமாகப் பிரயோகிக்காது.

திண்டுக்கல் வி.எச்.கே. ஹரிஹரன்

● இந்தியக் கிரிக்கெட் நம்பிக்கை நட்சத்திரம் கபிலுக்குப் பரிசாகத் தாங்கள் அளித்த அட்டைப் படம் வெகு ஜோர்!

சிந்தாதிரிப்பேட்டை பா. உதயா

● தி. ஜானகிராமனின் 'உள் விரிசல்' சிறுகதை சிறந்த படைப்பு. காலத்தால் அழிக்க முடியாத 'ராகங்'களை எங்கள் இதயங்களில் மீட்டி, பரவசக் கடலில் மூழ்கச் செய்து விட்டாரே ஆசிரியர்.

மருதூர் வி. ஸ்வாமிநாதன்

● ஏன் சார் என்னைப் போன்ற இந்திய அப்பாவி மகாஜனங்கள் அமைதியாக இருப்பது தங்களுக்குப் பிடிக்கவில்லையா? இந்த நவ இந்தியாவில் இத்தனை குழப்பங்களா? இவ்வளவுதானா? இன்னும் இருக்கிறதா? அப்பப்பா, தலையங்கத்தைப் படித்ததும் தலை சுற்றியது.

சென்னை-5 எஸ். வி. ராஜசேகர்

● முகநாயனம் குடந்தை ஜெயராமனைப் பற்றி விட்டுப்போன செய்திகள்:

வீணை இல்லாமலேயே மூக்கு, கைகளால் வீணை ஒலியை எழுப்புவார். தொடர்ந்து வாசிக்கவும் செய்வார். அவர் தற்போது உத்தியோகத்தில் இருப்பது நெல்லையில். நகுமோமை ஆறு நிமிடம், ரிகார்டில் உள்ளது போல் அப்படியே துளி மாறாமல் வாசித்தார். அதை டேப் எடுத்து அயல் நாட்டு ரசிகர்களுக்குப் போட்டுக் காண்பித்ததில் அசந்து போய்விட்டார்கள்.

திருநெல்வேலி-10 சி. நடராஜமூர்த்தி

● கல்கி எந்தச் சிறப்பிதழ் வெளியிட்டாலும் ஓவியர் உமாபதிக்குக் கவலையில்லை. மனிதர் சும்மா அட்டகாசமாகப் புகுந்து விளையாடிவிடுகிறார். அப்பப்பா!... சங்கீதச் சிரிப்பு பற்றி நான் சொல்லவா வேண்டும்?

பெருங்களத்தூர் சித்ரா—சங்கர்

● இசைக்கு முக்கியத்துவம் தரவேண்டியதுதான். ஆனால் இப்படியா? பாதிக்கு மேற்பட்ட பக்கங்கள் இசைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. கர்நாடக சங்கீதம் புரியாத என்னைப் போன்ற வாசகர்களும் கல்கி படிக்கிறார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

கல்பாக்கம் சி. பி. ராஜு

● "பரதமும் பலவித பாணிகளும்" என்ற கட்டுரையில் நாட்டியப் பரம்பரைகளையும் பாணிகளையும் விவரித்துவிட்டு, புகழ் பெற்ற நடன மணிகளையும் அறிவித்த ஆனந்தி அவர்கள், சென்ற தலைமுறையில் கொடி கட்டிப் பறந்த தங்களைப் பற்றி (ஆனந்தி-ராதா ஜோடி) சொல்லாதது அடக்கமாக இருந்தாலும் ரசிகர்களாகிய நாங்கள் அவர்களை மறக்கவில்லை.

சென்னை-18 பத்மா மணி

● குரு-சிஷ்யர் பக்கம் இரண்டுமே விறுவிறுப்பு. இன்னும் பல குரு-சிஷ்யர்களை இம்மாதிரிப் பேட்டி காணலாமே!

வியாசர் காலனி திருமதி நாராயணராவ்

● "இசை நோய்களைக் குணப்படுத்தும்" என்று டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா கூறியிருப்பதை நான் அப்படியே ஒத்துக் கொள்கிறேன். என்னுடைய சுய அனுபவத்தால் இதைச் சொல்கிறேன். என் உடல்நலம் முதலில் இருந்தே நல்லபடியாக இருந்ததில்லை. பல தொல்லைகள், நிரந்தர நோய்களின் உபாதைகள், Cervical Spondylitis என்னும் முதுகுத் தண்டில் உள்ள குறை, சைனுஸைடிஸ், Neuro Fibroma என்று பல தொல்லைகள் எனக்கு உண்டு.

மருந்து தருவதற்கு முன்னால் என் கணவர் (டாக்டர் ராஜேந்திரன் MA,Ph.D,FAZ) டாக்டர் பாலமுரளி கிருஷ்ணாவின் இசையை டேப் ரிகார்டரில் போட்டுவிட்டு அடுத்தபடியாகத்தான் மருந்து தருவார். இது மிகையல்ல. நான் அனுபவ ரீதியில் கண்ட சத்தியம்! சில சமயம் ரத்தக் கொதிப்பு வருவதுண்டு எனக்கு. அவருடைய பாட்டைக் கேட்டுக் கொண்டே உறங்கினேனானால் அடுத்த நாள் காலை நலமாக எழுந்து கொள்வேன்.

Cervical Spondylitis என்னும் முதுகுத் தண்டில் உள்ள நோயால் என்னால் அதிக நேரம் உட்கார முடியாது. திரு பித்துக்குளி முருகதாஸ் பஜனையில் நோய் மறந்து எத்தனை மணி நேரமானாலும் உட்கார்ந்து ஆனந்த பரவசத்தில் ஆழ்ந்து விடுவேன்.

தர்மபுரி துர்க்கா ராஜேந்திரன்

புத்தாண்டு வெகுமதிகளை நரசுஸ் காபியுடன் அளிக்கிறோம்!

- 12 கிலோ நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் காபி டபரா செட்.
- 6 கிலோ நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் காபி டம்ளர்.
- 2 கிலோ நரசுஸ் காபிக்கு வண்ணத் துணிப்பை.
- 750 கிராம் நரசுஸ் காபிக்கு பெரிய எவர்சில்வர் ஸ்பூன்.
- 500 கிராம் நரசுஸ் காபிக்கு சிறிய எவர்சில்வர் ஸ்பூன்.


மொத்தமாகவோ, சில்லரையாகவோ வாங்கும் நரசுஸ் காபியுடன் கிடைக்கும் வெகுமதிக் கூப்பன்களைப் பெற்று வெகுமதிகளைப் பெறுங்கள்.

1982 ஜனவரி மாதம் முழுவதும் உள்ள விற்பனைக்கே வெகுமதிகள் உரியவை.

ஜீவனுள்ள ஒரே காபி!

நரசுஸ்

"தெர்மலோ" காபி!





நரசுஸ் காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.

ADWAVE/NCC/1917

காதல் வசப்பட்ட நான் ஒரு கோழை.
ஏனெனில் கேவலம் வெறும் பூக்கணைகள்
என்னை வீழ்த்தி விட்டனவே.

-ஹர்ஷனின் நாகாநந்தா

40

இருட்டில் நுழைந்த பிறகு அந்தச்சத்தம் கேட்டது. குழப்பமாக ஒரு சத்தம். அதில் சுவர்ணமுகியின் பெயர் பலமுறை அடிபட்டது.

அர்ச்சனன் உடனே எச்சரிக்கை ஆனான். சடக்கென்று இரண்டு நாக விருட்சங்களின் இடுக்கில் மறைந்து கொண்டு நடப்பவைகளைக் கவனித்தான்.

எல்லாம் அவனுக்கு மர்மமாகத் தோன்றியது. புறப்பட்டதிலிருந்து கவனித்து வருகிறான். காற்றிலேயே ஏதோ மாயம் கலந்திருந்தது.

தடதடப்பாகச் சில வீரர்கள் ஓடினார்கள். வெட்ட வெளிகளில் அவர்கள் தென்படும் போது அவனால் அவர்களைக் கண்டுகொள்ள முடிந்தது. அவர்கள் ஸ்ரீரங்கனின் வீரர்கள்.

புரிந்து விட்டது.

அவர்கள் கவர்ந்து சென்ற பெண்களில் சுவர்ணமுகி இல்லையென்று தெரிந்திருக்கிறது. அவளை எப்படியும் கவர வேண்டும் என்று இருட்டில் அவர்கள் ஓசைப்படாமல் வந்திருக்கிறார்கள்.

விஷயம் தெரிந்ததும் அர்ச்சனனுக்குப் பதற்றம் ஏற்பட்டது.

சுவர்ணமுகி அகப்பட்டு விடுவாளோ என்ற பயம்!

சீக்கிரம் அவளது உதவிக்குப் போக வேண்டும் என்று தெரிந்தவுடன் மரத்துக்கு மரம் சாடி நிழல் வழியாக விரைந்தான்.

பாறையை அடையும்போது அதன் மறுபுறம் சஞ்சலங்கள் காதில் கேட்டன.

விரைவாக மேலே ஏறினான். விளிம்பில் போன பிறகு மறுபக்கம் பார்க்க, அங்கே இருவர் துவந்த யுத்தம் செய்து கொண்டிருந்தார்கள். ஒரே நொடியில் அவர்கள்யார் யார் என்று தெரிந்து விட்டது.

சுவர்ணமுகியும் தோதாவும்.

தோதா சுவர்ணமுகியை இழுத்துப் போக முயல, சுவர்ணமுகி அவனுடன் தைரியமாகப் போராடிக் கொண்டிருந்தாள். ''டேய்!'' ''டேய்!'' என்றான் அர்ச்சனன். மறுகணம் பாறை விளிம்புகளில் பயங்கரமாகக் கால்களை ஊன்றி, கடைசித் தாவில் கீழே குதித்தான்.

குதித்தவன் நிமிரும்போது, அவன் கைதானாக வாளை உருவியது. ''டேய், துரோகி! தூரப் போ!'' என்று இரைந்து ஊடே பாய்ந்தான்.

தோதா திரும்பினான். அவன் முகத்தில் எவ்வளவு கொடூரம் வந்திருந்தது! விருட்டென்று அவன் வாளை உருவ, இருவர் வாட்களும் முதல் மோதல் மோதின.

சுவர்ணமுகி இளைப்புடன் ஒதுங்கிப் போனாள். பாறை ஓரம் நின்று கொண்டு பதைப்புடன் அர்ச்சனனைப் பார்த்தாள்.

இரு மின்னல் வாள்கள் அங்குமிங்கும் அலைய, இரண்டு நிழல் உருவங்கள் ஒன்றுக்கொன்று நெருக்கியும், சாடியும் பின்னால் எகிறியும் சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

அர்ச்சனனுக்கு வாழ்க்கையின் பொறுப்பு அத்தனையும் அந்த வாளில் இறங்கியிருந்தது.

தோதா அன்று திருப்பதி யுத்த தினத்தில் துரோகம் செய்ததிலிருந்து இன்றுவரை நேருக்கு நேர் சந்திக்கவே இல்லை. ஆனால் மனம் மட்டும் அவனை நினைத்து நினைத்து ஓர் ஆத்திரத்தை வளர்த்துக் கொண்டே வந்திருந்தது.

இன்று அதன் உச்சநிலைச் சிதறலாக அவன் தோதாவைச் சந்திக்க,

அவன் ஆத்திர உக்கிரங்கள் ஒரு தீப் பிழம்பாக ஜொலித்து வாள் என்னும் வடிகால் மூலம் வடிந்து கொண்டிருந்தது.

ஓர் உஷ்ணம் ஏற்பட முதல் சில விநாடிகள் பிடித்தாலும், பிறகு அவன் ஒரு ஆக்கிரமிப்பு அலையாக மாறித் தோதா மீது சீறிச் சீறி விழுந்து கொண்டிருந்தான்.

வாள் வீச்சுக்கள் காற்றைப் பின்னப்படுத்தித் தோதா மீது வகையாக விழ முயற்சி செய்து கொண்டிருந்தன.



தோதா ஆரம்பத்தில் சம பலத்துடன் எதிர்த்தாலும், போகப் போக அவனது ஊக்கம் மெள்ள வலுயத் தொடங்கியது.

ஒரு நிலையில் அர்ச்சுனனிடமிருந்து தப் பித்தால் போதும் என்று தோன்றியது.

ஆனால் அவனது மான உணர்ச்சி அவனைத் தளர விடாமல் நிறுத்த, சிறிது நேரம் போரிட்டான்.

அர்ச்சுனனிடமிருந்து வந்த ஒரு வீச்சு அவன் தோளில் சிதைந்து, அவன் எலும்பு களை வெட்டி மார்பில் இறங்க, தோதா சத்தம் கூட எழுப்பாமல் கீழே உதிர்ந் தான்.

வலி தாங்காமல் இரண்டு முறை புரண்டு விட்டு, பிறகு தனக்கே அடக்க மாட்டாமல் ''அம்மா'' என்று கூவினான்.

பிறகு நெஞ்சைப் பிடித்து அர்ச்சுனனைப் பார்த்து, ''அர்ச்சுனா! என்னைக் காப்பாற்று! என்னைக் காப்பாற்று!'' என்றான்.

அர்ச்சுனன் பெரிய சுவாசங்களோடு அவனை அணுகினான். ''திருப்பதியில் நான் அன்று குற்றுயிராக இருந்தபோது உதவி செய்தாய்! ஞாபகமிருக்கிறதா?'' என்றான் ஏளனமாக.

''அர்ச்சுனா! அதை மறந்துவிடு! இப்போது என்னைக் காப்பாற்று!'' என்றான் பலவீன மாக.

''என்னைத் தவிர்த்துவிடு, பரவாயில்லை. ஆனால் ரங்கப்பாவின் சத்தியத்தைத் தவிர்க்க விட்டாயே, பாவி! உன்னை எந்த நரகத்தில் தள்ளினால் என்ன?'' என்றான் அர்ச்சுனன் கர்ஜனையாக.

''அதையெல்லாம் மறந்துவிடு, அர்ச்சுனா! உன்னை உயிரோடு பார்க்கிறேனே அதுவே எனக்குச் சந்தோஷம், என்னை வாழ விடு, அர்ச்சுனா! என்னைக்கவனி'' என் றான் தோதா இரக்கமாக.

''தூ'' என்றான் அர்ச்சுனன். ''இனி உன் பெயர் மிஞ்சினாலும் இந்த நாட்டுக்கு அவமரியாதை. நீ விதைத்ததை நீயே அறு வடை செய்! இங்கே இரவுகளில் நரிகள் வரும். அவைகளுக்கு நீ பலியாகு!'' என்றான்.

பிறகு சுவர்ணமுகியை அழைத்து அந்தப் பாறை மேல் ஏற ஆரம்பித்தான்.

முதலில் அவன் ஏறி, பிறகு அவளுக்குக் கைகொடுத்துத் தூக்கி விட்டான்.

இருவரும் இளைத்தவாறு பாறையின் உச்சத்தில் அமர்ந்து கீழே கரும் மினுக்கலில் ஓடும் நதியைப் பார்த்தார்கள்.

சுவர்ணமுகி, ஆசுவாசம் ஆனதும் மெள்ள நகர்ந்து வந்தாள். ''வீரரே! உமக்கு மிக்க நன்றி! என்னை ஆபத்தினின்று காப்பாற்றி னீர்கள். உங்களை மறக்க மாட்டேன்!'' என்று தழுதழுத்துக் கூறினாள்.

அர்ச்சுனனது இதயத்தை அவள் விழிகள் துளைத்தன. வாழ்க்கையின் நுண்ணியஉணர்ச் சிக் கீதங்கள் மெள்ள அவன் நரம்புகள் மீது தவழ்ந்தன.

''சுவர்ணமுகி!'' என்றான் கண்களில் ஈரம் பனிக்க. ''உங்களைப் பார்ப்போமா,





பேசுவோமா என்று ஆகிவிட்டது எனக்கு!''

''என்மீது அவ்வளவு அக்கறையா?''என்று கேட்டான் அவன்.

''ஆமாம். என்று நாகலாபுரம் கோவிலில் உங்களை முதன் முதலில் பார்த்தேனோஅன்றிலிருந்து என்னை அறியாமல் தங்கள் மீது அக்கறை வந்து விட்டது. பிறகு திருப்பதி அருகில் உங்களைப் பார்த்தபோது...''

''நான் ஒரு சேடி என்று சொன்னேனே!''

''அது ஒரு பொய் என்று எனக்குத் தெரியும். யுத்த களத்தில் உங்கள் வளர்ப்புத் தந்தை ரங்கப்பா என்னிடம் ரகசியத்தைக் கூறியிராவிட்டால் நானும் நீங்கள் சொல்வதை நம்பியிருப்பேன். அவர் சொல்லிவிட்டார். அதனால் அன்று நான் சாகும் நிலையில் இருந்தபோது ராஜ தரிசனத்தோடு சாகிறேன் என்று நினைத்தேன்.

''பின்னர்என் வாழ்க்கை மீளவும் புனர் ஜன்மம் எடுத்தபோது தங்கள் மீது கொண்ட அக்கறை பெரிய பாசமாகவும், என் இதயத்தில் எப்போதும் இடைவிடாது ரீங்கரிக்கும் பிரேமை கருதியாகவும் மாறிவிட்டது. இதை நான் வெளிப்படையாகக் கூறுவது கூட இல்லை. இருந்தும் என் மனம் பொறுக்காமல் தங்களிடம் கூறுகிறேன். ஏனெனில் இந்த நாட்டில் அடுக்கடுக்காக வரும் ஆபத்துக்களைப் பார்க்கும்போது, ஏதாவது எனக்கு நேர்வதற்கு முன் தங்களிடம் இதைக் கூறிவிடவேண்டும் என்று நினைக்கிறேன். இல்லாவிடில் என் நெஞ்சு நிச்சயமாய் வேகாது...''

''ஐயா, இப்படித் துர் விஷயம் எதுவும் நினையாதீர்கள்! சொல்லாதீர்கள்!'' என்றான் அவள்.

''இல்லை இளவரசி! என் மனத்தில் இருந்த ஆதங்கத்தினால் கூறினேன். அதுவும் சந்தர்ப்பம் அதற்கு இசைவாக வாய்த்ததால் கூறினேன். இதுபோல இனி வாய்க்குமோஎன்றுசந்தேகம் கூடஎனக்குத்தோன்றுகிறது. அதனால் சொன்னேன். இளவரசி அன்பை மட்டும் என்றும் அடைத்து வைக்க முடியாது. நாலு பேர் கண் படும்படி-அது தளும்பி விடும். என் மனத்தில் சமீப காலத்தில் எழும் தாபத்தைப் பார்த்தால் எனக்கு எல்லாவற்றிலும் விரக்தி ஏற்படுகிறது. எங்கேயாவது ஒரு குடியானவனாக மாறி.... இளவரசி, ஏன் அழுகிறீர்கள்?'' என்றான் அவன் அவள் கன்னங்களில் அந்த முத்துக்களைப் பார்த்த பிறகு.

அவள் உடனே பதில் சொல்லவில்லை. துக்கம் அவளை மூடியிருந்தது. ''இல்லை...'' என்று துவங்கினாள். ''தாங்கள் கூறும் சில வார்த்தைகள் என் மனத்தின் குறுத்துக்களைத் தொடுகின்றன. நான் இளகிவிடுகிறேன். நான்கூட நினைக்கிறேன். இந்தக் குலம், பதவி முதலியவைகள் யாவற்றையும் விடுத்து எங்கேயாவது கிராமத்தில் ஒரு பூத்தொடுக்கும் பெண்ணாக மாற வேண்டும் என்று நினைப்பேன். இந்த ராஜ்யம் எதற்கு? சண்டை எதற்கு?''

''இல்லை இளவரசி. இவைகளைத் தாங்கள் துறக்க முடியாது. தங்களால்தான் இந்த ராஜ்யம் மகோன்னத தசை அடைய வேண்டும். அதில் சந்தேகமில்லை. தாங்கள் ராஜ பாரம்பரியத்தில் பிறந்தவர். அதை விட்டுப் போகத் தங்களுக்கு வழியில்லை...''

என்று அவன் சொல்லும்போது, ''அப்படிச் சொல்லாதீர்கள்! எனக்கு வழி காட்டுங்கள்; போய்விடுகிறேன். இந்தக் கணமே போய்விடுகிறேன். எனக்கு இந்தப்பந்தங்கள் தேவையில்லை. என் அப்பா ஏதோ ஒரு காலத்தில் நிபந்தனை எழுதி வைத்தார். அது இப்போது செல்லாது! சம்பந்தப்பட்டவரின் முழு மனசு இன்றிச் செய்யப்படும் எதுவும் செல்லுபடியாகாது. நிச்சயம் ஆகாது!'' என்று இரைந்தாள் அவள்.

''இளவரசி!'' என்று அவளை அமரிக்கையாக்க முயன்றான் அவன். ''ஏன்?ஏன் இப்படிப் பதற்றப்படுகிறீர்கள்? தந்தையார் சொன்னது தங்களுக்கு, மட்டு மல்ல. இந்த ராஜ்யத்துக்கே நல்லது அல்லவா? அதில் ஏன் தங்களுக்கு வெறுப்பு?'' என்றான் அவன்.

''இல்லை வீரரே! எனக்கு எதுவும் வேண்டாம், நான் எங்கேயாவது ஓடிவிட விரும்புகிறேன் நிச்சயமாக! என் ராஜ குலம் தெரிந்ததால் நான் நிறையப் பந்தப்பட்டுவிட்டேன்!''

''ஏன் இளவரசி! தங்களுக்கு என்ன நடந்தது?''

''இந்தக் கதிக்கு ஆளானதே அதனால் தான்!'' என்றாள் அவள் கண்ணீருடன்.

''ஏன், என்ன கதி?'' என்றான் அவன்.

''நாடு, கடமை, ராஜ பரம்பரை, வாக்

இனியது இனியது தைப்பொங்கல்
புதியது புதியது கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்



பொங்கல்
சிறப்புத் தள்ளுபடி

20%

6-1-82 முதல்

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

ELEGANT

குறுதி என்று சொல்லி, என்னை எனக்கு விருப்பமில்லாத விஷயத்தில் இறக்கி விட்டார்கள், வீரரே!''

அர்ச்சுனன் திகைத்தான். ''ஏன் இளவரசி! என்ன செய்தார்கள்?''

''என் இரகசியம் அவர்களுக்குத் தெரிந்து விட்டதல்லவா?''

''யாருக்கு? நமது வேங்கட மகாராஜாவுக்குத்தானே?''

• ''அவர் மட்டுமல்ல! அந்த வேலூர் நாயகர், தாமர்ல சகோதரர்கள், எல்லோரும் புரிந்து கொண்டார்கள். அல்லவா?''

''அவர்களுக்கு யார் சொன்னது? ஸ்ரீரங்கன்தானே?''

''ஆமாம், என்னை யாரென்று சொன்னது மட்டுமல்லாமல்என்னிடம் தான் விஜயநகரப் பொக்கிஷத்தின் ரகசியம் இருக்கிறது என்றும் தெரிய வந்து விட்டது. இப்போது அந்த இடத்தைக் காட்டும்படியும், அதை எடுத்து வரும்படியும் என்னைக் கட்டளையிட்டிருக்கிறார்கள்.''

''அது நமது நாட்டின் நன்மைக்காகத் தானே? இப்போது நமது மகாராஜாவுக்கு வேண்டுவது பொருள், அது இல்லாவிட்டால் ஸ்ரீரங்கனை அவரால் வெல்ல முடியாது. மற்ற எதிரிகளையும் முறியடிக்க முடியாது.''

''அதைக் காரணம் காட்டி என்னைப் பொக்கிஷத்தை எடுத்துக் கொடுக்கச் சொன்னாலும் தேவலை!''

''வேறு எதற்குச் சொல்கிறார்கள்?''

''நான் ஒரு அரச குமாரி என்று நிருபணம் செய்யவே அதைத் தேடி எடுக்கச் சொல்கிறார்கள்!''

''அப்படியா? அதைச் செய்தால் மட்டும் நிருபணம் ஆகிவிடுமா?''

''செய்தால் நிருபணம் ஆகும்! செய்யா விட்டால் நான் ஒரு மோசக்காரி என்று கொன்றுவிடுவார்கள். விஜயநகர சிங்காதனத்துக்கு இன்னும் ஒரு பெண்ணும் உரிமை தேடி வந்திருக்கிறாள் என்பதை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. முக்கியமாக வேலூர் நாயக்கர் இதை எதிர்க்கிறார். நாட்டில் இன்னும் குழப்பம் ஏற்படும் என்று கூறுகிறார். இது காரணமாகத்தான் கடைசி முற்றுகை நாளின் இரவு, எனக்கு வேலூர் நாயக்கர் இரண்டில் ஒன்று செய், என்று நிபந்தனை இட்டார்.''

அர்ச்சுனன் அவளைப் பயத்துடன் பார்த்தான். ''என்ன நிபந்தனை?''

''ஒன்றுஅவர்சொல்லப்போகிறவைகளுக்கு உடன்பட்டு நான் இந்த விஜயநகரப் பொக்கிஷத்தைக் காட்டிக் கொடுக்க வேண்டும்.''

''அல்லது?''

''அல்லது அவர்கள் சிரச்சேதம் செய்வதற்கு நான் உடன்பட வேண்டும்!''

அர்ச்சுனனின் இரத்தம் கொதித்தது. ''இளவரசி, இப்படிப் பயமுறுத்தினார்களா தங்களை?''

''ஆமாம் சுவாமி! மத்திய ராத்திரியின் மேல் இப்படிப் பயமுறுத்தினார்கள். அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. கோட்டை பரிதவிக்கிறது. உள்ளே ஜனங்கள் அல்லாடுகிறார்கள். வெளியே திம்மராஜா படைகள் கொந்தளிக்கின்றன. அந்த நிலையில் வேலூர் நாயக்கர் பதற்றமடைந்துவிட்டார். எனவே அவர் எனக்கு அளித்த நிபந்தனையில் எந்தவித அதிசயமும் இல்லை! ஆனால் அது என் தலை எழுத்து!''

''நீங்கள்என்ன சொன்னீர்கள்இளவரசி?''

''முதலில் நான் சிரச்சேதத்துக்கு உட்பட எண்ணினேன்.''

''பயங்கரம்.''

''ஆனால், மனம் ஏனோ அதற்கு இசையவில்லை. அது ஒரு இனிதான சம்பவத்தை எண்ணி, அதிலேயே மொய்ப்பாகச்சஞ்சாரம் செய்தது. அந்த இனிமையின் கவர்ச்சியில் நான் மரணத்துக்குச் சம்மதிப்பது என் கையில் மட்டுமில்லை என்று தோன்றியது.''

''அது என்ன இனிமைச் சம்பவம் இளவரசி?'' என்றான் அவன்.

அந்த மேல் நட்சத்திர ஒளியில் அவள் கண்கள் இரண்டும் இரு சொப்பனங்களாக மாறின.

''அது தெரிய வேண்டுமா, வீரரே! திருப்பதியில் நடந்த சம்பவம்தான்! மேலே வேங்கடப் பெருமாளைத் தரிசித்து விட்டு வந்தேன். கீழே இறங்கும்போது எங்கும் பஞ்சம்என்பது தெரிந்தது. மக்கள் பரிதவித்தார்கள். நான் இவைகளை நினைத்துத்துயரம் அடைந்த போது, யுத்த களத்தில் என் வளர்ப்புத் தந்தை இறந்த செய்தியும் வந்தது. நான் இடிந்து விட்டேன். என் உயிர் தாழ்ச்சியாக விழ, எனக்கு அப்போது புதிய தெம்பு கொடுத்தது எது தெரியுமா?''?

''எது இளவரசி?''

''கடமை தவறாத அந்த வீரரின் தோற்றம்தான். அவரை என்றும் மறக்க முடியவில்லை. அவர் இறக்கக் கூடாது என்று பிரார்த்தனை செய்தேன். எங்கு போனாலும் மீண்டும் மீண்டும் அந்தச் சம்பவத்தையே நினைத்துக் கொண்டிருந்தேன். அந்தச் சம்பவம்தான் வீரரே, என் மனத்தில் ஓர் ஆலவிருட்சம் போல் விழுதுகள் விட்டு நின்று விட்டது.''

அர்ச்சுனனுக்கு உணர்ச்சிகள் பிரவாகமாக வெளிவந்தன. ''இளவரசி!'' என்றான். உணர்ச்சிப் பெருக்கில் அவள் கைகளைப்பற்றப் போக,

அவள், ''ஐயோ, என்னைத் தொடாதீர்கள்! என்னைத் தொடாதீர்கள்!'' என்று சொல்லித் தள்ளிப் போனாள்.

அர்ச்சுனன் திடுக்கிட்டான். (தொடரும்)

''ஹலோ.... 22278 தானே?''
''இல்லை, இல்லை. நான் கான்ஸ் டபிள் 6639 தான்!''

- லலிதா செல்லப்பா





ஓம் நமோ பகவதே ஸ்ரீ ஞானனந்தாய!

ஸ்ரீ ஸத்குரு ஞானனந்தகிரி

சுவாமிகளது

எட்டாவது ஆராதனை விழா

சித்சுகஸ்வரூப பூஜ்யபாத ஸத்குரு **ஸ்ரீ ஞானனந்தகிரி ஸ்வாமிகள்** காலக் கணக்குக்கு அடங்காத நீண்ட நெடு வாழ்வு வாழ்ந்து ஞானச் செங்கோலாட்சி புரிந்த ஒரு மாபெரும் ஞான சித்தர், ஆதிசங்கரர் நிறுவிய ஜோதிர் மடத்தைச் சேர்ந்த பரமஹம்ஸ பரிவ்ராஜகர். நிறை ஞானியான இவர் பல தெய்வீகச் சிறப்புகள் வாய்ந்த திருக்கோவிலூருக்கு அருகில் நினைக்க முக்தி தரும் அருணாசலத்தின் பேரருட் சூழலில் அமைந்திருக்கும் **ஸ்ரீ ஞானனந்தத் தபோவனத்தில் ஷட்கோண வடிவத்தில்** அமைந்திருக்கும் அருளாலயத்தில் ஞானனந்தேஸ்வர மஹாலிங்கமாயும், மணிமண்டபத்தில் அர்ச்சாவதார மூர்த்தியாயும் அமர்ந்து பக்தர்களுக்கு அனுக்ரஹம் செய்து கொண்டு இருக்கிறார்கள். அவரது **எட்டாவது ஆராதனை விழா** அவரது அதிஷ்டானத்தில் ஸத்குருநாதனின் திருவருளை முன்னிட்டு **ஜனவரி 11ந்தேதி திங்கட்கிழமையன்று** நடைபெறும். இப்புனித மகோத்ஸவம் **1981 டிசம்பர் 28ந்தேதியிலிருந்து** தொடங்குகிறது.

நிகழ்ச்சி நிரல்:

டிசம்பர் 28ந் தேதி	—	ஸ்ரீ மஹா கணபதி ஹோமம்
டிசம்பர் 29 முதல் ஜனவரி 8 வரை	—	மஹாருத்ர ஜபம்
டிசம்பர் 30 முதல் ஜனவரி 11 வரை	—	லக்ஷார்ச்சனை
ஜனவரி 4 முதல் 10 வரை	—	ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம்
	—	நிகழ்த்துபவர் பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ
	—	கிருஷ்ண ப்ரேமி அவர்கள்.
ஜனவரி 8 (காலை)	—	மகாருத்ர ஹோமம் – வஸோர்த்தாரை
,, (மாலை)	—	ஸ்ரீ சண்டி ஹோமம் பூர்ணாஹுதி
ஜனவரி 9 (காலை) ஆருத்ரா	—	ஸஹஸ்ர சங்காபிஷேகம்
,, (மாலை)	—	ஸ்ரீ வித்யா ஹோமம் பூர்ணாஹுதி
ஜனவரி 10 (காலை)	—	ஸ்ரீ ஸூக்த ஹோமம்
ஜனவரி 11 (காலை)	—	விசேஷ அபிஷேகம், பாத பூஜை, ஆராதனை, தீர்த்த நாராயண பூஜை. ''ஸத்குரு கனை'' மலர் வெளியீட்டு விழா.

தினசரி விழா நாட்களில் **பாத பூஜை, ஏகாதசருத்ரஜபம், விசேஷ அபிஷேகம், வேத பாராயணங்கள், ராமாயணம், தேவி பாகவதம், சங்கர பாஷ்ய உபன்யாசங்களும், பஜனைகள், தேவார இசைகள்** முதலியன இடம் பெறும்.

இதர விபரங்களும், நன்கொடைகளும் அனுப்ப வேண்டிய முகவரி:

ஸத்குரு ஸ்வாமி

ஸ்ரீ ஞானனந்தகிரி மெமோரியல் டிரஸ்ட்

தபோவனம் - 605 756 தென்னாற்காடு மாவட்டம், தமிழ்நாடு

தெய்வீக மாத இதழ் **''ஞான ஒளி''** ஸ்ரீ ஸத்குருவின் உபதேசங்களையும், தெய்வீகக் கருத்துக்கள் நிறைந்த கட்டுரைகளையும் வேதாந்த விரிவுரைகளையும் வழங்குகிறது.

வருடச் சந்தா ரூ. 18/-

செவிக்கு உணவில்லாத போது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என்றாலும் அந்தச் சிறிதும் வயிற்றைக் கெடுக்காமல் இருக்க வேண்டு மல்லவா? மன ஆரோக்கியத்துக்கு நல்லிசை வழங்கும் சபா நிர்வாகிகள் ரசிகர்களின் உடல் ஆரோக்கியத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும் தானே! பாட்டை ரசிப்பவர்கள்தாம் பலகாரத்தையும் ருசித்துச் சாப்பிடுவார்கள். எனவேதான் எழுகிறது கேள்வி:

எந்த காண்டீன் சிறந்த காண்டீன்?



ருசி பார்க்கிறார்

மாலை ஐந்து மணி. ஓட்டல் நடத்துவோர் சங்கத்தின் கௌரவ காரியதரிசியும் தாஸப் பிரகாஷ் ஓட்டலின் நிர்வாகியுமான திரு ஆனந்த ராவ் கேண்டீன்களை நோட்டம் பார்க்கப் புறப்பட்டார். தமிழகச் சங்க விழா நடக்கும் ராஜா அண்ணாமலை மன்றம் கேண்டீனுக்குள் முதலில் நுழைந்தார். அவரை வரவேற்ற சேஷாத்திரி, கேண்டீனின் உள்ளும் புறமும் சுற்றிக் காண்பித்தார். ஒரே ஒரு பஜ்ஜி, ஒரு ஸ்பூன் கிச்சடி, ஒரு குலோப்ஜாமூன் என ருசி பார்த்தார் ஆனந்தராவ். ''இருக்கும் இடத்தில் முடிந்த அளவுக்குச் செய்கிறேன்'' என்றார் சேஷாத்திரி.


காரில் ஏறுவதற்கு முன் ''சாப்பிட்ட பாத்திரங்களைச் சரியாகக் கழுவுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்'' என்று ஆனந்தராவ் கூற ''பச்சைத்தண்ணீர், சூடானதண்ணீர், சோப்புத் தண்ணீர் மூன்றையும் வைத்துத்தான் கழுவுகிறேன்'' என்றார் சேஷாத்திரி.

அங்கிருந்து நேராக மியூஸிக் அகாடமி கேண்டீனுக்கு வந்தோம். விசாலமான இடம் அதன் நிர்வாகி கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார். இங்கும் கிச்சடிதான். அத்துடன் வடை ஆமவடை. ஒவ்வொரு வகையிலும் ஒரு விள்ளல் எடுத்து வாயில் போட்டு ருசித்தார் ஆனந்தராவ். டிபன் தயாரிக்கும் இடத்தைப் பார்த்துவிட்டு வந்தவரிடம் கிருஷ்ணமூர்த்தி ''7–30 மணிக்கு நீங்கள் வந்தா சாப்பாடே போடுவேன். எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம். நான்கே ரூபா தான்'' என்றார்.

அங்கிருந்து மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் கிளப் கேண்டீனுக்குச் சென்றோம். சிறிய இடம். அங்கு உட்கார்ந்து கொண்டு பூரிக்கான மாவைப் பிசைந்து கொண்டிருந்தார் திருமதி லலிதா. கேசரியும் காப்பியும் இருந்தன. துளித் துளி டேஸ்ட் பார்த்தார். அடுத்து இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைட்டியின் கேண்டீனுக்குள் நுழைந்தார். இந்தக் கேண்டீனில் எதையுமே தொடவில்லை ஆனந்தராவ். காப்பியை மட்டும் ஒரு மடக்குக் குடித்தார். வெளியே வரும்போது, ''ஏன் டிபன் எதையும் தொடவில்லை'' என்ற கேள்விக்கு ''தொடுகிறமாதிரி ஒன்றும் இல்லை'' என்றார். ''இங்கே சாப்பாடு இரண்டே ரூபாய்தான். எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம்.'' அடுத்தது கிருஷ்ண கான சபா. ஒரே ஒரு விள்ளல் வடையை வாயில் போட்டுப் பார்த்துவிட்டு விடைபெற்றார்.

''சிறப்பாகவும், சுவையாகவும், உணவு வகைகளைச் செய்வதாலும் உணவு தயாரிக்கும் இடம் சுத்தமாக இருப்பதாலும் பரிமாறப்படும் இடம் விசாலமாக இருப்பதோடு பரிமாறும் விதம் நிறைவாக இருப்பதாலும் மியூஸிக் அகாடமி கேண்டீனுக்கே முதல் பரிசு'' என்றார் ஆனந்த ராவ். ''ஆனால் நான் பரிசு கொடுப்பதற்கு முன் சாப்பாடு வகைகள் எப்படி இருக்கின்றன என்றும் பார்த்துவிட வேண்டும்'' என்றார். சாதத்துடன் சாம்பார், ரசம், அவியல், பொரியல், தவிர ஒரு ஸ்வீட் (மைசூர்பாகு) உள்ளடக்கிய மெனு. உணவு வகைகளைச் சுவைத்த அவர் சந்தோஷமாக கல்கி நிறுவனத்தின் 100 ரூபாய் பரிசை கிருஷ்ணமூர்த்தியிடம் வழங்கி, மன நிறைவோடு வாழ்த்தி விடைபெற்றார்.

....பரிசளிக்கிறார்



நிகழ்ச்சி தொகுப்பு : சலன்

புகைப்படம் : யோகா

பொய்ம்மை

வினோதானந்த்

அறுபதாவது நாள்!

தேவகிக்கு வியப்பாக இருந்தது. இந்த அளவுக்குத் தானும் எப்படி வைராக்கியத்தோடு இருக்க முடிகிறது என்று நினைத்தாள். அந்த வைராக்கியம் அவள் தனக்குத் தானே வழங்கிக் கொண்ட தண்டனையா? இல்லை, அந்த வைராக்கியத்தை அவளுள் விதைத்து விட்ட கணவனுக்கு ஒரு தீர்ப்பாக அவள் படித்து அளித்த தண்டனையா?

முரளி வந்தான்.

''அம்மா! அப்பா ஆபீசுக்குக் கிளம்பிட்டார்....''

''அப்படியா? இந்தா, இந்த டிபன் பாக்ஸை அவர் கிட்டக்கொண்டு கொடு...''

மாலதி வந்தாள்.

''அம்மா, அப்பா கொடுத்தார், எலெக்ட்ரிக் பில் இன்னிக்குக் கட்டணுமாம்...''

''பணத்தையும் எலெக்ட்ரிக்பில்லேயும் சுவாமித் தட்டிலே கொண்டு போய் வை...''

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பொதுவான தூதர்கள் அவர்கள்.

ஒரு மௌன யுத்தம் நீண்ட நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

''அம்மா! போயிட்டு வரேன்...''

''போயிட்டு வரேம்மா...''

பிள்ளைகள் பள்ளிக்கூடம் புறப்பட்டுச்சென்றார்கள்.

சாப்பிட்டு முடித்தாள். அடுக்களையை ஒழுங்கு படுத்தியானதும் கூடத்துக்கு வந்தாள். தபால்காரர் கதவிடுக்கு வழியே தள்ளிவிட்டுப் போயிருந்த கடிதம் தரையில் கிடந்தது.

எடுத்துப் படித்தாள். அம்மாதான் எழுதியிருக்கிறாள்.

அன்புள்ள தேவகிக்கு!

ஆசீர்வாதம்.

இப்பவும் பரீட்சைகள் முடிந்து லீவ் விட்டதும் நீ குழந்தைகளை அழைத்துக் கொண்டு வா. அவர்களைப் பார்க்கணும் போல் இருக்கு. உன்னையும் பார்க்கணும் போல் இருக்கு. அவரிடம் சொல்லிக் கொண்டு கட்டாயம் புறப்பட்டு வா.

விசாலம்.

அம்மாவின் இந்த அழைப்பு மனசுக்கு இதமாக இருந்தது.

கணவனும், மனைவியும் ஒருவர் முகத்தை ஒருவர் பாராமல் பார்த்துக் கொண்டு, நேரடியாகப் பேசாமல் குழந்தைகளின் மூலமாகச் செய்திப் பரிவர்த்தனைகள் செய்து கொண்டு, இரவுப் போதில் படுக்கையில் உடம்பைச் சாய்க்கையில் உறுத்தும் முட்களை மலர் இதழ்களாய்நினைத்து வலிய ஒரு பாவனையோடு அனுபவித்துக் கொண்டு... எங்கும் எதிலும் பொய்ம்மையின் பிரதிநிதித்துவம்.

இதைவிடப் பிறந்த வீட்டில் அப்பா அம்மா இவர்களின் பாசச் சீராட்டலில் மனசைத் திசை திருப்பிவிட்டுச் சில காலம் கழித்தால் என்ன?

திருமணம் ஆன புதிது.


பசுமையாக நினைவில் நிற்கிறது.

''தேவகி! என் பிள்ளை ஒரு பச்சைக் குழந்தை மாதிரி. சூது வாது தெரியாது. பெண் பிள்ளைக்குப் பெண் பிள்ளையா அவனை ரொம்ப மென்மையா வளர்த்துட்டோம். இனிமே அவனுக்கு எல்லாம் நீதான்...''

நாகராஜனைப் பெற்றவள் அப்படிச் சொன்னபோது, தனிக் குடித்தனத்தின் தலைவாசலில் காலடி எடுத்து வைத்திருந்த தேவகிக்கு மிகவும் பெருமையாக இருந்தது. 'எனக்கு வாய்த்திருக்கிறவர் இத்தனை மென்மையானவரா?' நினைந்து நினைந்து பூரித்துப் போனாள்.

அந்த மென்மையான சுபாவம் பாளம் பாளமாய் விரிசல் கண்டிடும் ஒரு வறட்சிப் பிராந்தியமாய்ப் பிரகடனப்படுத்தப்பட்டது எப்போது?

இரண்டாவது குழந்தை பிறப்பதற்கு முன்பா? பிறந்த பின்பா? தெரியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாய் அவன் மாறிக் கொண்டு வந்தான். எடுத்ததற்கெல்லாம்



கோபம் முணுக்கென்று வருகிறது. சொற்கள் வலுத்து நாகராஜன் சீறிப் படமெடுக்கையில் உண்மையிலேயே அவன் நாகராஜன் தான்!

உச்சக்கட்டமாக ஒரு நாள்.

''அனுவசியமாக வாதப் பிரதிவாதங்களை வளர்த்திக் கொண்டிருக்க நான் தயாராக இல்லே. உன்னோட முகம் கொடுத்துப் பேசறதுல இனியும் ஏதும் அர்த்தம் இருக்கிறதா நான் நினைக்கலே. ஒரு தடுப்புச் சுவர் நம்மை அறியாமலேயே நமக்கிடையிலே எழுந்து நிக்கிறது. புரியும்னு நினைக்கிறேன்....''

எதிர்ப்புறம் பார்த்துக் கொண்டு பேசினான் நாகராஜன்.

அவளுக்குப் புரிந்தது. 'பேசாதே' என்கிறான்.

ரொம்ப நாளாகக் கட்டிக் காத்து வந்த பொறுமையை மெதுவாகக் கீழே எடுத்து வைத்தாள்.

''எனக்கும் அப்படித்தான் தோணறது!''

ஒரு வரியில் பதில் சொன்னாள்.

அந்தச் சூழ்நிலையில் அந்தப் பதிலைத்தான் அவளுக்குச் சொல்லத் தோன்றியது. சொல்ல முடிந்தது. சொல்லவும் பிடித்தது.

இந்த இரண்டு மாத கால இடைவெளியில் அந்த வைராக்கியப் பனிப் போரை நிறுத்த இருவரில் ஒருவருக்குமே இஷ்டமில்லாது போய்விட்டதே! இது எப்படிச் சாத்தியமாயிற்று?

மாலதி அந்தக் கடிதத்தை நாகராஜனிடம் கொண்டு காட்டியபோது ஓர் அகவாரஸ்யத்தோடு அதை வாங்கிப் பிரித்தான்.



முகத்தில் எந்தவிதச் சலனமும் இல்லாமல் நிதானமாகப் படித்தான். அவளிடமே அந்தக் கடிதத்தைக் கொடுத்தவன் கேட்டான்:

''உங்களுக்குப் பரீட்சை முடிஞ்சிட்டுதா?''

''இன்னியோட முடிஞ்சுடுத்து. பதினஞ்சு நாள் லீவு. ஊருக்குப் போயிட்டுவரோம்பா''

''சந்தோஷமாப் போயிட்டு வாங்கோ!''

அந்தப் பதில் தேவகியின் காதில் தெளிவாக விழுந்தது.

'சந்தோஷமாப் போயிட்டு வாங்கோ!'

இதில் யாருக்கு சந்தோஷம்? ஊருக்குப் போகும் அவளுக்கா? ஊருக்கு அவர்களை அனுப்பிவிட்டு வீட்டுக்குள் ஒரு முற்றும் துறந்த முனிவரின் மோனத் தவ நிலையில் தனிமையாய்க் கிடக்கப் போகும் அவனுக்கா?

வெறும் சொற்கள் அல்ல அவை. விஷத்தில் தோய்த்துக் குழந்தைகளின் மூலமாக அவள் உடம்பில் ஏற்றுகிறான் நாகராஜன்.

தேவகி ஊருக்குப் புறப்பட்டாள்.

மனசு ஊமையாகிப் போயிருந்தது. ஒரு மின் தடையைப் போல் பேச்சும் அடங்கிப் போயிருந்தது. எல்லாவற்றுக்கும் சேர்த்துக் குழந்தைகள் முரளியும், மாலதியும் உற்சாகமாகப் பேசிக் கொண்டு வந்தார்கள்.

நாகராஜன் அவர்கள் கூடவே நடந்தான். முரளிக்கும், மாலதிக்கும் சாக்லெட்டும், பிஸ்கட்டும் வாங்கிக் கொடுத்தான்.

'ஊருக்குப் போகிறவளுக்கு ஒரு முழம் பூ வாங்கிக் கொடுக்கத் தோணலேயா?...'

நினைத்துக் கொண்டாள்.

'என் பிள்ளை ஒரு பச்சைக் குழந்தை மாதிரி. சூது வாது தெரியாது. பெண்பிள்ளைக்குப் பெண் பிள்ளையா அவனை ரொம்ப மென்மையாக வளர்த்துட்டோம்....'

மாமியாரின் முகம் எதிரே நின்று பேசியது.

'பச்சைக் குழந்தையா இவர்? பச்சைக் குழந்தையின் மனசு இப்படிப் பாறையாகவா இருக்கும்?'

துக்கம் நெஞ்சிலிருந்து புறப்பட்டு இதழ்களுக்குள் அடைபட்டு, வைராக்கியம் மட்டும் கண்களின் வழியே வெளிப்பட்டது.

வண்டி புறப்படச் சிறிது நேரமிருந்தது.

குழந்தைகளோடு அவன் சிரித்துச் சிரித்துப் பேசினான்.

''நீயும் எங்ககூட வாயேம்பா...''

''வாங்கப்பா....''

குழந்தைகள் அழைப்பை மழலையில் வடித்துத் தந்தார்கள்.

சமயோசிதமாகச் சமாளித்தான்.

தேவகிக்குச் சிரிப்பு வந்தது. முகத்தைத் திருப்பிக்கொண்டு மிகுந்த சிரமத்துடன் அந்தச் சிரிப்பைப் பின்வாங்கச் செய்தாள்.

வண்டி புறப்பட்டது.

''அப்பா! போயிட்டு வரேன்...''

''அப்பா! போயிட்டு வரேன்...''

அவன் என்ன சொல்ல வேண்டும்?

''போயிட்டு வரேன்னு சொல்லுடா...''

அம்மாவின் சார்பில் முரளி சொன்னான்.

''உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கச் சொல்லுடி உங்க அப்பாவை...''

அம்மாவின் சார்பில் மாலதி கேட்டுக் கொண்டாள்.

''வேளா வேளைக்குச் சாப்பிடச்சொல்லு.''

அம்மாவின் சார்பில் இரண்டு பேருமே கோரஸில் புத்திமதி சொன்னார்கள்.

இரவு.

உறக்கம் வராமல் கொட்டக் கொட்ட விழித்தபடி பார்வையால் இருளைத் துழாவிக் கொண்டிருந்தான் நாகராஜன்.

ஒரு தடுப்புச் சுவர். அதற்கு இன்றைய வயது அறுபத்திரண்டு நாட்கள். இதுவரை இதில் யாருக்கு வெற்றி?

மனம் ஆராயத் தொடங்கியபோது, முரளியும் மாலதியும் பிறக்காத அந்தப் பழைய நாட்களின் சுகந்தம், அறை எங்கும் பரவ ஆரம்பித்தது.

தனிக் குடித்தனம் வைத்த நேரம். அவளும் அவனும் மட்டும்.

தினமும் காலையில் மணி பத்தாகப் போகிறதே என்று அவசரம் அவசரமாக அலுவலகத்துக்குப் பறந்தது. மாலையில் மணி இன்னும் ஐந்தாகவில்லையே என்று ஏங்கிக்கொண்டிருந்தது. ஐந்தடித்ததும், வேக வேகமாக நடந்து பேருந்தைப் பிடித்து வீடு நோக்கி விரைந்தது....

அவளும் அவனுமாய்க் கழித்த வேடிக்கையான நாட்கள். ஆனந்தமான நாட்கள். குஷியான நாட்கள்.

அந்த குஷியெல்லாம் ஒதுங்கி இன்று பண்டமே ஊசிப்போய் விட்டாற்போல் ஆகி விட்டதே!

எழுந்து விளக்கைப் போட்டான்.

படுக்கையைச் சுருட்டி எடுத்துக்கொண்டு மொட்டை மாடிக்கு வந்தான். தரை வெதுவெதுப்பாக இருந்தது.

படுக்கையைத் தொப்பென்று போட்டவன் அதில் தலை வைத்தபடி வெறும் தரையில் படுத்தான்.

அங்கும் கனவுகள் கோலமிட்டன.

முரளி பிறந்திருந்த சமயம்.

''இவன் யார் ஜாடை சொல்லு...''.

''நிச்சயம் உங்க ஜாடை இல்லே...''

''எப்படிச் சொல்றே?''

''அழகா இருக்கானே!''

''பல்லை உடைப்பேன். அப்படியாறு ஒரு அவலட்சணத்தையா கல்யாணம் செஞ்சுண்டிருக்கே?...''

''எல்லாம் ஒரு அனுதாபத்தின் பேரிலதான்!''

அவளுடைய வேடிக்கையான பதில்களைச் சற்றும் முகம் சுளிக்காமல், சிணுங்காமல் ரசித்தபடி அந்தக் குழந்தைக்கும், அவளுக்குமாகச் சேர்த்துத் தன் இதழ் முத்திரைகளை..

''ஊஹூம்... இன்னும் ரெண்டு வருஷத்துக்கு எதுவும் கூடாது...''

''பெரிய்ய குடும்ப நலத் திட்ட அதிகாரி. அட்வைஸ் பண்ண வந்துட்டியாக்கும்!''

எவ்வளவு இனிப்பான நாட்கள் அவை!

அந்த இனிப்பெல்லாம் ஒரேயடியாகத் திகட்டிப்போய், இன்று எந்த இனிப்பைக் கண்டாலும் ஒரு துவேஷம் வந்து எப்படி நாக்கில் ஒட்டிக் கொள்கிறது!

தேவகி இல்லாத இரண்டாம்நாள் இரவு.

ஓட்டலில் உணவை முடித்துக் கொண்டு வந்திருந்தான் அவன்.

இரண்டு நாட்களுக்கு முன்பு வரையிலான தேவகியின் அருகாமை உணர்த்தாத விஷயங்களெல்லாம் இப்போது அந்தத் தனிமையான சூழலில் புரிந்தன.

கலகலவெனப் பேசும் குழந்தைகள். 'அம்மா அதைச் சொன்னாள்' அப்பா இதைச்

அன்றோர் வாக்கு



விவாக முறையில் எவ்வளவு குறைபாடுகள் இருந்தாலும் இல்வாழ்க்கைதான் ஜீவர்களுடைய இயற்கை. இல்வாழ்க்கையில்தான் மனிதனுடைய வாழ்வு பூரணமாகிறது. எவ்வளவு குறைபாடுகளுடன் இல்வாழ்க்கை நடத்தியவர்களானாலும் அதன் மேன்மையையும் உணர்ந்தே இருப்பார்கள். ஆசையினால்தான் அநேகமாய்ப் பெற்றோர்கள் அனைவரும் தங்கள் பிள்ளைகளுக்கு மணம் செய்து வைப்பதில் அவ்வளவு அக்கறை காட்டுகிறார்கள். சம்சார சாகரத்தில் கண்ணைக் கட்டிக் கொண்டு தொப்பென்று விழ வேண்டாம். கண்ணைத் திறந்து கொண்டு அதிலுள்ள இன்ப துன்பங்களை யெல்லாம் அனுபவிக்கச் சித்தமாக இறங்குங்கள் என்பதுதான் என் யோசனை.


—பேராசிரியர் கல்கி

சத்தியத்தைச் சர்க்கரைப் பூச்சிட்ட மாத்திரைகளாக்கித் தரவேண்டும். சர்க்கரைப் பூச்சுத்தானே ஒழிய, முழுக்கவும் சர்க்கரையாகிவிடக் கூடாது. வெறும் சர்க்கரை உடம்புக்கு நல்லதல்ல. வெறும் இந்திரிய ரஞ்சகமான சமாசாரங்களில்தான் ஜனங்களுக்கு அதிகக் கவர்ச்சி இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு இவ்விதமே எழுதுவது சரியல்ல. ஜனங்களுக்கு ஆத்மாவிருத்தி தருகிற முறையில் எழுதுவதற்கு இதய பூர்வமாக எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் முனைந்தால் தானாகவே ஜனங்களுக்கு அதில் ருசி பிறக்கும்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சந்திர சேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சாரிய சுவாமிகள்

தேவாமிருதம் உண்டு களித்திருக்கப் பிறந்தவனுக்குத் தினந்தோறும் ஒரே மாதிரியான பாயசம் கொடுக்கப்படுமாயின் அவனுக்கு அப்பாயசம் விடமாகவன்றோ தோன்றும்!

—பாரதியார்



ஸ்ரீ வரமங்கை நாச்சியார் பக்த சபா

மூன்றுமாண்டு ஒரு கோட்டை எண்ணெய்க் காப்பு மஹோத்ஸவம்

வானமாமலை மடத்து சிஷ்யர்கள் அபிமானிகள் மற்றும் ஆஸ்திக அன்பர்களை அங்கத்தினர்களாகக் கொண்ட மேற்படி சபை, ஸ்ரீமத் பரமஹம்ஸ இத்யாதி வானமாமலை ராமானுஜ ஜீயர் ஸ்வாமிகளின் அனுக்ரஹத்துடன் ஸ்ரீய: பதியான **ஸ்ரீ** வானமாமலைப் பெருமாளுக்கு ஒரு கோட்டை எண்ணெய்க் காப்பு உத்ஸவம் நாளது **தை மீ 12ம் தேதி (25-1-82) திங்கட்கிழமையும்** அமாவாஸையும் ஸ்ரவண நக்ஷத்திரமும் கூடிய நாளில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

மேற்படி உத்ஸவத்தன்று இரவில் சந்தனக் காப்பும், உத்ஸவ மூர்த்திகளான ஸ்ரீ தெய்வநாயகன், ஸ்ரீ வரமங்கைத் தாயார், ஆண்டாளுக்குத் திருவீதிப் புறப்பாடு நடைபெற இருப்பதால் ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் தங்களை இவ்வுத்ஸவத்தில் ஈடுபடுத்தும் வண்ணம் எழுந்தருளியிருந்து எம்பெருமானின் கிருபா கடாட்சத்திற்குப் பாத்திரராகும்படி பிரார்த்திக்கிறோம்.

மேற்படி அன்றைய தினம் ஸ்ரீ உ. வே. வித்வான் வேளுக்குடி **K. வரதாச்சாரியார் ஸ்வாமி** அவர்கள் உபன்யாசம் நிகழ்த்துவார்கள்.

இவ்வண்ணம்

ஸ்ரீ வரமங்கை நாச்சியார் பக்த சபா

3, கிழக்கு குளக்கரைத் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

சொன்னார்' என்று இரண்டு துருவங்களுக்கு மாக அவர்கள் ஓடி ஓடிச் சென்று வந்த தெல்லாம் நினைவுக்கு வந்தது.

கண்களைத் திறந்தான்.

புகைப்படத்தில் அவனை ஒட்டியபடி நின்று கொண்டிருந்த தேவகி அவனுக்கு முன்னே தன் தலையைத் தாழ்த்தி, ''சந்தோஷமாய் இருக்கீங்களா?'' என்று கேட்டுவிட்டுச் சிரித் தாள்.

தன் குண விசேஷங்களின் முரண்பாடு களை, திடீரென்று தான் ஏதோ ஒரு ஆவே சத்தில், அர்த்தமில்லாத குழப்பத்தில், ஒரு பிடிபடாத பலவீனத்தில் அவள்மீது எரிந்து விழத் தொடங்கி அப்புறம் . அதுவே முற்றி மௌன விரதத்தை மேற்கொள்ளத்தொடங் கியதை நினைத்துப் பார்த்தான்.

வேதனையாக இருந்தது.

தன்னைப் பற்றிச் சுய விமர்சனம் செய்து கொண்டிருந்தவனின் மனம் இப்போது தேவ கியைச் சுற்றிச் சுற்றி வந்தபோது மீண்டும் புஷ்பிக்க ஆரம்பித்துவிட்ட பாசச் சிலிர்ப்பில் மோகச் சிரிப்பில் கண்கள் இரு சொட்டுக் கண்ணீரை உதிர்த்தன.

விடியற்காலை.

அவன் எழுதிக் கொண்டிருந்தான்.

அன்புள்ள தேவகி!

உனக்கு ஒரு தண்டனை கொடுத்துவிட்ட தாக நினைத்துக் கொண்டிருந்தேன். அந் தத் தண்டனை எனக்கு நானே வழங்கிக் கொண்டதுதான் என்பதை நீ இல்லாத இந்தத் தனிமையான நேரத்தில் மனப் பூர்வமாக உணர்கிறேன்.

குழந்தைகள் அம்மாவிடம் கொஞ்ச நாள் இருக்கட்டும். உடனே புறப்பட்டு வரவும். உன்னைப் பார்க்க வேண்டும். இத்தனை நாள் பேசாததற்கெல்லாம் சேர்த்துவைத் துப் பேச வேண்டும். அப்புறம்...

எண்ணங்களை நெடுநேரம் பூவாணமாய் உதிர்த்துக் கொண்டிருந்தான். கடிதத்தை ஒரு வழியாக முடித்து உறையில் இட்டு முக வரியையும் எழுதினான்.

மணி ஆறைத் தாண்டியிருந்தது.

அடுக்களைக்கு வந்தான். ஸ்டவ்வைப் பற்றவைத்து அதில் பால் பாத்திரத்தைக் கொலுவேற்றினான். முந்திய இரவின் தீவிர சிந்தனையின் விளைவாக நெற்றிப் பொட்டில் லேசான வலி. ஓர் ஆத்ம சோதனையின் நீள்வழிப் பயணம் ஏற்படுத்தி வைத்த பாதிப்பு.

சூடாக ஒரு கோப்பைக் காப்பி அருந்தினால் எல்லாம் சரியாகிப் போகும்.

தேவகி வந்து விட்டால் இந்தப் பாதிப் பின் சுவடுகள் தெரியாதபடிக்குக் கையாலும் கண்ணாலும், இதமானபேச்சாலும் பொத்தித் தடுத்து விடுவாள்.

காப்பி பில்டரின் உச்சி மண்டையில் தட்டி னான், செல்லமாகத் தேவகியின்தலையில் குட்டு கிற மாதிரி.

நினைப்பு பூராவும் தேவகியின் பெரும் பான்மை பலம்.

'ரெண்டு நாளைக்குள் என் மன வக்கிரங் களைப் பொலு பொலுவென்று சரியச் செய்து விட்ட உனக்குத்தான் இந்தத் தர்ம யுத்தத்தில் வெற்றி'.

மனசு பாராட்டியது.

அப்புறம் சில கேள்விகள்.

'இந்தத் தவிப்பு என்னுள் மட்டும்தானா எனக்கு மட்டும்தானா? அங்கே தேவகி எப்படி இருப்பாள்?

'ஒரு வித்தியாசமான சூழ்நிலையின் சிருஷ்டி கர்த்தா அவனே. ஒரு மாறுபாடான உணர் வின் பிதாமகன் அவனே. ஆரம்பித்து வைத்த வனே ஒரு முடிவுக்கு வரட்டும் பிறகு பார்ப் போம் என்ற வைராக்கியத்துடன் பிறந்த வீட்டில் மகிழ்ச்சியாக இருந்து கொண் டிருப்பாளோ?'

தங்கு தடை இல்லாமல் ஊர்வலமாகப் புறப்பட்ட கேள்விகளைத் தடுத்துநிறுத்தினான்.

தலைவலி இன்னும் அதிகமாயிற்று.

மணக்க மணக்கக் காப்பியைக் கலந்து குவளையை வாயருகில் கொண்டுபோன வேளை யில் வாசற் கதவு தட்டப்படும் ஓசை.

எழுந்து சென்று கதவைத் திறந்தான்.

தேவகி நின்றிருந்தாள்!

மாமி புதிர் விடை

1. சாவித்திரிமாமி
   பத்மினி
   படம்: வியட்னாம் வீடு
2. அதிர்ஷ்டம் அழைக்கிறது
3. ஜெகசித்ரா
   படம்: கதவு
4. தனிக்குடித்தனம்
   காமு மாமி
5. ராணிசந்திரா
   படம்: பத்ரகாளி
6. சௌகார்ஜானகி
7. ஸ்ரீதேவி
   'தீபா'வுக்கு
   ''மீண்டும் கோகிலா'' படத்தில்
8. வியட்னாம் வீடு
9. பட்டுமாமி (சௌகார்ஜானகி)
   'எதிர் நீச்சல்' படத்தில்
10. ஞானக்குழந்தை
11. ராசி நல்லராசி
12. ராஜராஜேஸ்வரி



சினம் கொண்ட பாரதி

ம.பொ.சி



பாஞ்சாலி வினா விடுத்தது துரியோதனனுக்கல்ல. தருமனுக்குத்தான்! அதனால் அந்த வினாவைத் தருமனிடம் சொல்லி விடையை எதிர்பார்த்தான் தேர்ப்பாகன்.

இந்நேரத்திலே துரியோதனன் தலையிட்டு ''பாஞ்சாலி கேட்க விரும்பும் கேள்விகளை எல்லாம் இந்த அவையிலேயே வந்து கேட்கலாம். அவளை இங்கு அழைத்து வா'' என்று சொல்லித் தேர்ப் பாகனுக்குத் திரும்பவும் ஆணையிடுகிறான். ''இவருக்கு மனைவியாக இருப்பவளுக்கு இந்த அவைக்கு வர நாணமாமோ?'' என்று கேட்டான்.

'மன்னன் அழைக்கிறான் என்று நீ சொல்ல வரமறுத்து அவளொன்று சொல்வதோ?' என்றும் துரியோதனன் கேட்கிறான். திரும்பவும் தேர்ப் பாகன் பாஞ்சாலியிடம் சென்று, அவளை அரசவைக்கு அழைக்கிறான்.

பாஞ்சாலி தேர்ப் பாகனிடம் மீண்டும் பழைய கேள்வியையே கேட்கிறாள். மேலும் சினம் பொங்க, ''துரியோதனன் அவையிலே தருமவான்களே இல்லையோ?'' என்றும் கேட்கிறாள்.

பாவம், தேர்ப்பாகன்! திரும்பவும் பாஞ்சாலி கேட்ட பழைய கேள்வியையே அரசவைக்குச் சமர்ப்பிக்கிறான். அரசவையில் உள்ள ஆன்றோரும் சான்றோரும் மவுனம் சாதிக்கின்றனர். துரியோதனன் தேர்ப் பாகனை வசை பாடிவிட்டு, தம்பி துச்சாதனனை அழைத்து, ''நீ போய் அந்தப் பாஞ்சாலியோடு இங்கு வருக'' என்று ஆணையிடுகிறான்.

பாஞ்சாலியைத் துச்சாதனன் இழுத்துச் செல்லும் காட்சியைப் பாரதியார் வருணிக்கிறார். கேட்போம்:

''கக்கக்க வென்று
    கனைத்தே பெருமுடன்
பக்கத்தில் வந்தே யப்
    பாஞ்சாலி கூந்தலினை
கையினாற் பற்றிக்
    கரகரெனத் தானிழுத்தான்.
'ஐயகோ' வென்றே
    அலறி உணர்வற்றுப்
பாண்டவர் தந் தேவியவள்
    பாதியுயிர் கொண்டுவர,
நீண்ட கருங்குழலை
    நீசன் கரம்பற்றி
முன்னிழுத்துச் சென்றான்.''

அஸ்தினாபுர நகரத்தின் வீதிகளின் வழியே திரௌபதியை அவளுடைய பொன்னான மேனியில் புழுதி படும்படியாகத் துச்சாதனன் அவள் குழலைப் பற்றி இழுத்துச் செல்லும்போது அந்த அவலத்தைக் கண்ட நகர மக்கள் வாய் விட்டு அரற்றியவற்றையெல்லாம் ஐந்து கவிதைகளில் வில்லிபுத்தூரார் விவரிக்கின்றார்.

இதிலே பாரதியார் வில்லிபுத்தூராரிடமிருந்து வேறுபடுகிறார். தான் ஒரு கவிஞர் என்பதை மறந்து மேலே கதை சொல்வதையும் விட்டு விட்டு அரசியல் பிரசாரத்தில் இறங்கி விடுகின்றார்.

அஸ்தினாபுரத்து மக்களை — குறிப்பாக, ஆண்களை வாயார வசை பாடுகின்றார். இதோ அந்த வசைக் கவிதை:

''ஊரவர் தங் கீழ்மை
    உரைக்குந் தரமாமோ?
வீரமிலா நாய்கள்
    விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துத்
    தராதலத்தில் போக்கியே,
பொன்னை யவளந்தப்
    புரத்தினிலே சேர்க்காமல்,
நெட்டை மரங்களென
    நின்று புலம்பினார்
பெட்டைப் புலம்பல்
    பிறர்க்குத் துணையாமோ?''

(தராதலம் — சாக்கடை)

இந்த இடத்திலே மகா கவி பாரதியார், தம் காலத்தில் வாழ்ந்த பாரத மக்களை நினைவில் கொண்டே பாஞ்சாலியின் கதை நிகழ்ந்த காலத்தில் வாழ்ந்த அஸ்தினாபுர மக்களைச் சாடுகின்றார். ஆம்; உள்ளத்திலே பாரத மக்கள்; உதட்டிலே அஸ்தினாபுரத்து ஜனங்கள்!

ஆறு லட்சம் வெள்ளையர்கள் 30 கோடி மக்களை ஈன்றெடுத்த பாரத தேவியை அல்லற்படுத்தினார்கள்; அவமானப்படுத்தினார்கள். அந்த நேரத்திலே தாய் பிறன் கைப் படச் சகிப்பவர்களாயினர் பாரத மக்கள்.

அக்கோழை மக்களை ''வீரமிலா நாய்கள்'' என்கிறார். நாய்களிலும் வீரமுடையவை உண்டுதானே! ''நெட்டை மரங்கள்'' என்றும் ஏசுகிறார். போலீசார் விடுதலை வீரர்களுக்கு இழைத்த கொடுமைகளைக் கண்டபோது உதட்டளவில் அனுதாபம் சொல்லி மக்கள் புலம்பியதனைப் ''பெட்டைப் புலம்பல்'' என்று சொல்கிறான்.

அஸ்தினாபுரத்து ஆண்கள் என்ன செய்திருக்க வேண்டும் என்பதையும் பாரதியார் கூறுகின்றார்.

மிருகமாகிவிட்ட துச்சாதனனைத் தடுத்து நிறுத்தித் தங்கள் கால்களால் உதைத்து, அவனைத் தூக்கி வீதி யோரத்தில் உள்ள சாக்கடையிலே எறிந்திருக்க வேண்டுமாம்! பின்னர், பொன் போன்றவளான திரௌபதியைத் திரும்பவும் அந்தப்புரத்திலே கொண்டு போய்ச் சேர்த்திருக்க வேண்டுமாம்!

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press ,Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543)
Assistant Editor: P.S. Mani, Layout Artist: Kalpana, Editor: K. Rajendran

REGISTERED No. M
Registered as a Newspaper in Sri Lanka

ஒரு மங்கையின்
வாழ்வில் மிக இனிமையான
நேரங்களில்
இணைந்திருப்பது கட்டாவ்.



கட்டாவின் டெர்கோஸா ஸாரிகள்

Rediffusion K/1614 TM